

ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜஸ்வாமி.

(1767—1847)

ஸ்ரீ த்யாகராஜ ஸத்குரு தயை

ஸ்ரீ க்ருதி மணிமாலை

ஸ்ரீ தியாகராஜ நூற்றுண்டு நினைவு நூல்

மூன்றும் பாகம்

ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார், பி.எ., எல்.டி.,

பிரசுரித்தது

ஸபர்மதி

எழும்பூர், சென்னை.

1948

பதிப்புரிமை பெற்றது] [விலை ரூபா 9—8—0


ஸமர்ப்பணம்

தர்க்ஷிண்யாக்ய கிரீசமூர்த்தி ஸத்ருசம் ஸான்னித்ய மாத்ராத்யயா
வீணுவாதன வேதன வ்யஸனினும் மத்யேய மாஸ்தாபித :
வாணீவைணிக கர்ம்மடஸ் ஸசமுனிர்யத் பூர்வபாவாத் ச்ருதௌள
கந்தர்வாகம வேதினும் தனமியம் யாயாத்துலாம் கேனவா.

தென்முகமா மூர்த்திநிக ராவார்தம் அருளால்
தேனொழுகு யாழிசையை அறிவோர் நாப்பண்
என்றனக்கு மிடமளித்தார் யாரோ, எங்கும்
இசைபரவு மகதிமுனி கலியின் வாணி
முன்னமே யன்னூர்தம் வாழ்நாளுக்கு
விளங்கியதால் விஞ்சுபுகழ் வாய்ந்தார் யாரோ,
அன்னவர்தாம் இசையறிவோர் தனமே யன்றே ?
அவரொப்பார்யார் ? அவர்தாள் பணிவேன் யானே.

ஸ்ரீ சாரதையின் அம்சம் பெற்று, ஸ்வர ஆலய மென, இணையற்ற வைணிக திலகமாக ஆசந்தார்க்கம், மங்காப் புகழ் படைத்தவரும், எனது பரம மார்க்கதர்சினியு மான ஸித்த வித்யாதரி ஸ்ரீமதி வீணை தனம்மாளின் திவ்ய ஞாபகத்திற்கு இந்நூல் தக்க துணையாகுக !

அன்னையின் அடிமை,
ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார்.



ரங்கராமாநுஜ அய்யங்கார்.

ரங்கராமானுஜ அய்யங்காரு.

ஸித்த வித்யாதரி ஸ்ரீமதி வீணை தனம்மாள்.

సిద్ధ విద్యాధరి శ్రీమతి వీణ ధనమ్మగారు (1867-1938)

அறிமுகம்

வேத சந்ததியில் பிறந்து, இளமை முதல் இசைப் பயிற்சியில் ஊக்கமும் உழைப்புங்கொண்டு, காலம் சென்ற நாதசுரம் சின்னப்பக்கிரி, கோனேரிராஜபுரம் வைத்தியநாதய்யர், ராமநாதபுரம் பூச்சி அய்யங்கார், சிமிழி சுந்தரமய்யர் முதலியோரின் சங்கீதப் பாணியை நன்முகக் கிரகித்து, விடா முயற்சியால் நாளடைவில் விரிவான பாடாந்தரம் பெற்று, கடைசியாகப் பன்னிரண்டு ஆண்டுகள் வீணை தனம்மாளின் இசைமுறையில் ஏகாக்கிர பக்தியுடன் ஈடுபட்டு, வீணையிலும் வாய்ப்பாட்டிலும் தெளிவும் தேர்ச்சியும் அடைந்து, அரும் பாடுபட்டுச் சேகரித்த கலைச் செல்வத்தைச் சமுதாயத்திற்கு அர்ப்பணமாக்க இப் பொழுது "கிருதிமணிமாலை" என்ற இந்நூலை வெளியிட முன் வந்திருக்கும் திரு. ராமானுஜ அய்யங்கார் அவர்களைக் கலை யுலகம் நன்றியுடன் பாராட்டுமாக.

1921ஆம் பி. ஏ. வகுப்பில் படித்துவந்த இவர் காங்கிரஸ் மகாசபையின் ஆணையை மதித்துக் கல்விச் சாலையினின்றும் வெளியேறிச் சிலகாலம் பொதுஜன சேவையை மேற்கொண்டு, பின்பு சென்னை புரசவாக்கம் ஸர். எம். சி. டி. முத்தய்ய செட்டியார் உயர்தரப் பள்ளியில் அமர்ந்து, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக உபாத்தியைத் தொழில் நடத்தி வருகிறார். இயற்கையாகவுள்ள அடக்கத்துடன், இடைவிடாத கிலேசங்களுடன் தொடர்ந்த போராட்டமும் சேர்ந்தமையால், உற்சாகமும் ஆடம்பரமும் ஒழிந்த எளிய வாழ்க்கையில் இவருடைய பரந்த பொதுக் கல்வியறிவும் சாரீர சம்பத்தும், வீணை வாசிப்பின் தனிச்சிறப்பும் மறைந்து கிடப்பது மிகச் சிலருக்கு மட்டுமே தெரியும். 1937ஆம் ஒரு சந்தர்ப்பத்தில் ரசிகமானிகள் சிலரின் குறும்பான ஏகைப்பை உத்தேசமாகக் கண்டித்து, "ஆம். கேட்டதற்குத்தகுந்ததே. அவர் சங்கோசம் மிகுந்தவர். அவருடைய சௌகரியத்தை அறிந்து, அவர் நிம்மதியுடன் வாசித்துக் கேட்டால் அவருடைய யோக்கியதையை நீங்கள் அறிவீர்கள்", என்று பரிவுடன் தனம்மாள் சொன்னது இன்றும் என் செவிகளில் ஒலிக்கிறது.

அழகிய, நுட்பமான அம்சங்கள் நிறைந்த உருப்படிகள் ஆயிரத்துக்குமேல் இவருக்குப் பாடம் உண்டு. அவற்றைக் கூறியது கூறல் முதலிய இழுக்குகளில்லாமல், சுத்த நயமும், சுமகப் பொருத்தமும் விளங்க, நன்முகப் பண்படுத்திப் பாடுவதிலும், வீணையில் வாசிப்பதிலும், சொரூபம் எளிதில் தெரியும்படி விபரமாகச் சுரப்படுத்துவதிலும் இவர் மிகுந்த திறமையும் அனுபவமும் வாய்ந்தவர். மேலும் கலைவாணியின் தொண்டர் முன்னணியில் நின்று ஏற்கனவே அரிய சேவை புரிந்திருக்கிறார். திரு. பாபநாசம் சிவன் என்பாரின் "கீர்த்தனமாலை"யும், திரு. லலிதாங்கியின் "புரந்தரமணிமாலை"யும் இவருடைய சுயநலமற்ற தனி முயற்சியின் விளைவே.

பிராசீன சங்கீத முறையும் பழைய கீர்த்தனங்களும் தற்காலம் விரைவில் அழிந்து வருவதை யாவரும் அறிவர். திரு

வாளர் பொதுஜனம் சுலையிடும் துறைகளிலிருந்து உயர்ந்த லட்சியங்கள் பறந்தோடுவதும், அங்கே பாமரத்துவம் தாண்டவமாடுவதும் உலகெங்கும் காண்கிறோம். இசைச்சுலையும் இவ்விதிக்கு விலக்கல்ல. இந்நாட்டில் தொன்றுதொட்டுக் கலைமீதுள்ள பயபக்தியையும் இசைவாணரிடமிருந்த மதிப்பையும் உதறிவிட்டு, சீர்திருத்தம், முன்னேற்றம் என்ற பெயரால் உபவேதமும் தெய்வத் தன்மை வாய்ந்ததுமான அருங்கலையைப் பலசரக்குப்போன்ற விற்பனைப் பொருளாக்கித் தன் பக்குவமற்ற ஆசாபாசங்களுக்குத் தக்கபடி ஆட்டிவைக்கும் நிந்தை திருவாளர் பொது ஜனத்தைச் சாரும். இதனால் இசைக்கலைக்கும் இசைவாணருக்கும் நேர்ந்த எண்ணிறந்த தீமைகளை நினைக்குங்கால் உண்மையான கலையன்பர் மனம் வாட்டமுறும். தூய்மை, தெய்வபக்தி, உயர்ந்த சிந்தனை, மனத்தாழ்மை, கலோபாசனை அனைத்தையும் துறந்து, படாடோபமும் மாய்மாலமும் மிகுந்து, நவநாகரீகத்தில் தலைதூக்கி, இசைவணிகராய் அலையும் போலிப் பாகவதர்கள், போலி வித்துவான்கள் பலரின் நிலை அந்தோ !

காலப்போக்கின் விபரீதத்தைக்கண்டு மனந்தளராது, உன்னத லட்சியங்களில் சலியாத நம்பிக்கையுடன், இப்பொழுது நண்பர் ராமானுஜ அய்யங்கார் இவ்விசை நூல் தொகுதியை வெளியிடுகிறார். இத் திருப்பணியை ஆதரவுடன் வரவேற்று மென்மேலும் இத்தொண்டு செழிக்கும்படி இவருக்கு ஊக்கமளிக்க இசையன்பர்களை வேண்டுகிறேன்.

சதாசிவ யோகிதாசன்.

நூன்முகம்

இசை யுலகில் இந்திய ஸங்கீதம் பழமையானது. கிறிஸ்து சகாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்பே இது பக்குவ நிலை எய்தியது. பாரத நாடு முழுவதும் ஒரே லக்ஷ்ய லக்ஷண ஸம்பிரதாயம் பரவி நின்றது. பின்னர் முஸ்லிம் ஆட்சியின் விளைவாக வட இந்தியாவில் பூர்வ ஸங்கீத பத்ததி மாறியது. தென்னிந்தியாவில் மாத்திரம் அதுவேரூன்றிக் கர்நாடக ஸங்கீதம் என்ற பெயருடன் வளர்ந்து வந்தது. இதன் பிரத்தியேக அம்சங்கள் பல. அவற்றில் முதன்மையானது க்ருதி நிர்மாணம். பல்லவி, அநுபல்லவி, சரணம் என மூன்று அங்கங்களுடன் விளங்கும் க்ருதி 15-வது நூற்றாண்டில் தாளப்பாக்கம் சின்னையா என்பவரால் அமைக்கப்பட்டது. 16-வது நூற்றாண்டில் புரந்தர தாஸரின் பிரபாவத்தினால் இது நாடெங்கும் வியாபித்தது. ஸ்ரீ தாஸர் 5 லட்சம் க்ருதிகளையும், க்ஷேத்ரக்ஞர் 4200 பதங்களையும், ஸ்ரீ தியாகராஜஸ்வாமி 24000 க்ருதிகளையும் இயற்றியதாக நம்பிக்கை. இவர்களைப் பின்பற்றி எண்ணிறந்த வாக்கேயகார்கள் பல திராவிட மொழிகளில் அரிய ரத்னங்களை வழங்கினர். ஆனால் தற்போது அவற்றில் பெரும் பகுதி மறைந்து விட்டது. இப்பொழுதாவது தக்க முயற்சி செய்தால் ஸ்வரஸாஹித்ய ரூபமாகக் கன்னட உருப்படிகள் சுமார் 2000, க்ஷேத்ரக்ஞரின் பதங்கள் 100, தியாகராஜ கீர்த்தனைகள் 600 கிடைக்கும். கிடைப்பதைச் சேமித்துக் காப்பது என்ற ஆவலுடன் எவ்விதச் சுவடங்களையும் பொருட் படுத்தாது, பல ஆண்டுகளாக முயன்றதில் ஏறக் குறைய 1000 க்ருதிகளின் குறிப்புகள் கிடைத்தன. "இருந் தமிழே உன்னலிருந்தேனினையோர் விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்; திருந்த உதிப்பித்த பன்னூ லொளிர அடியேன் பதிப்பிக்கவே சடைச் சண்பார்," என்ற கருத்தையே கான வித்தைக்குப பொருத்தி, வாழ்வின் ஏக லக்ஷ்யமாக எண்ணி, உள்ளதை அச்சிட்டு வெளியிடும் ஸந்தர்ப்பத்தை நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்தேன். இத்தகைய வெளியீடுகள் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்த பலர் ஒன்றுகூடி ஒத்துழைத்துப் பூர்த்தி செய்யவேண்டிய முக்கிய ஸமூஹத் தொண்டாகும். எனினும் பல காரணங்களால் இந்த ஒருமைப்பாடு இதுவரையில் உருப் பெறவில்லை.

1947 ஜனவரியில் நடைபெறும் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் நூறுவதாண்டு விழாவின்போது தியாகராஜ கீர்த்தனைகளைத் தொகுத்து அச்சிடும் அவசியத்தைப்பற்றிப் பிரஸ்தாபங்கள் அங்கங்கே 1940-ஐ முதல் நடக்கின்றன. 100-ஐ ஆராதனை கடந்தும் பிரசுர ஏற்பாடு கிரியாம்சத்தில் எங்குங் காணப்படவில்லை. காலதாமதம் ஆவதைக்கண்டு, ஸ்ரீ தியாகப்ரும்மத்தின் கருணையே தஞ்சமென நம்பி, என் சிற்றறிவையும், எளிய முயற்சியையும் ஸாதனங்களாகக் கொண்டு 400 க்ருதிகளைத் தமிழ், தெலுங்கு, இரண்டு லிபிகளில் ஸம்பிரதாயப் பாடங்களை அனுஸரித்து, விஸ்தாரமாக ஸ்வரப்படுத்தி வெளியிடத் துணிந்தேன்.

இந்நாட்களில் எவ்வகையிலும் ஸாத்தியமில்லாத குருகுல வாஸத்தைச் சூழ்நிலை யறியாது பொதுப்பற்ற வகையில் பேசிப் போற்றும் அபிமானிகளின் கலாஸேவை பேச்சளவில்தான். ஸங்கீதத் தொழிலில் பிரபலமானவர் தினசரியைக் கவனித்தால் சாங்கோபாங்கமாகப் பாடம் சொல்லுவதற்கான அவகாசம், மனோநிலை, விச்ராந்தி, ஏகாந்தம், முதலிய அனுகூலங்கள் அவர் களுக்குத் துர்லபம் என்பது கண்கூடு. ஸங்கீதப் பள்ளிக்கூடங் கள், கோஷ்டிகானப் பயிற்சி, கோடைக் கல்வி போன்ற குறுக் குப் பாதைகள் முதலியன ஓரளவு பயன் தரத்தக்க நவீன முறைகள். இவற்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதுடன் நின்று விடாமல், கலையின் உயிர் நிலையான ராகம், தானம், பல்லவி முதலிய சுற்பனை அம்சங்களை விருத்தி செய்து, பிராசீன உருப் படிகளைத் தெளிவுடன் பாடம்செய்து பரிசீலனைக்கும் வழிதேட வேண்டும். இந்த அபிவிருத்திக்கு இன்றியமையாத ஸாதனம் ஸ்வரப்படுத்தும் பந்தாவை நிர்ணயமாக்கிக் கொள்ளுவதே. "எழுத்து மூலம் சுற்கும் ஸங்கீதம் ஒன்றுக்கு முதவாது," என் பது ஆதாரமற்ற கூற்று. ஸ்வரஸாஹித்ய ரூபமாகக் கமகம் முதலிய எல்லா அம்சங்களையும் தெளிவுற எழுதவும் பிறர் எழு தியதைப் படித்தறியவும் பயிலுதல் அவசியம். கலை வளர்ச்சி யின் நிமித்தம் தீவிரமான பிரசாரம் செய்யவேண்டிய அரிய ஸாதனம் இது ஒன்றே. இதன் மூலமே பழைய நிரூபணங் களை மறையாமல் காத்து உலகெங்கும் வழங்கக்கூடும். கமக அடையாளங்கள் பெரும்பாலும் பிரமையை உண்டு பண்ணுவ துடன் பல படிகளிலுள்ள வித்யோபாவிகளுக்குப் புலனுவது கடினம். மேலும் இந்தக் குறிகளைப்பற்றி விசதமான ஏகோ பித்த அபிப்பிராயமும் இல்லை. ஸாதனம் எதுவானாலும் பிர சாரத்துக்குத் தடையான ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிடு தல் பொருந்தும். "இது எங்கள் வீட்டு ஸங்கீதம். பிறருக்கு வராது," "நான் உழைத்துச் சம்பாதித்ததைப் பிறர் கைப்பற்ற விடுவேனோ?" "ஸ்வரப்படுத்தவாவது? நேராகப் பாடந்தான் சொல்லுவேன்," "கலியாணத் தேதி காலம். பிறகு பார்த்துக் கொள்ளலாம்," "என் குருவின் அனுமதி பெற்றுத் தான் சொல்ல முடியும்," — என்றெல்லாம் பிதற்றும் கேவலமான லோபித்தனம் பல அதமரிடம் குடிகொண்டிருப்பதை உரு ப்படிகள் சேகரிக்கும் தொல்லைக்கு ஆளாகாதவர்கள் அறிய மாட்டார்கள். இத்திய மனோபாவம் ஒழிந்தாலன்றிப் பழைய கலைச் செல்வம் அறவே அழிவது நிச்சயம். இந்த நிலையில் நன்முகப் பரிசீலனை செய்து விஸ்தாரமாக ஸ்வரப்படுத்திய உருப்படிகள் அடங்கிய அழகான புத்தகங்களை காலத்திற் கேற்ற ஸாதனங்களாகும்.

"க்ருதி மணிமாலை" என்ற இந்நூல் தொகுதி நான்கு பாகங்கள் கொண்டது. முதல் மூன்று பாகங்களில் அடங்கி யவை 400 தியாகராஜ க்ருதிகள். எஞ்சிய பாகத்தின் பொரு ளடக்கம், தீக்ஷிதர், சியாமா சாஸ்திரி, ஸுப்பராயசாஸ்திரி, க்ஷேத்ரக்ஞர் முதலியோரின் நிரூபணங்கள்; ஸ்ரீ நரஹரிம்ஹ பாகவதர், ஸுப்பராம தீக்ஷிதர், ராமானந்த யோகி, C. R. ஸ்ரீனி வாஸ அய்யங்கார், K. K. ராமஸாமி பாகவதர், K. V. ஸ்ரீனி வாஸய்யங்கார் முதலியோரின் பாடங்களைக் கவனித்து ஸம்பிர

தாயத்திற்சேற்ற பாடமே தியாகராஜ க்ருதிகளின் ஸாஹித்ய மாக எடுத்துக் கொள்ளப்பட்டது. சில நிரூபணங்கள் ஸ்வாமிகளுடைய தல்ல வென்று வதந்தி உண்டு. ஆனால் முடிவாகத் தீர்மானிப்பது ஸுலபமன்று. மேலும், அவை திடமான பிரசார பலம்பெற்றவை. ஸ்வர ரூபமான பாடம் (தாது) சென்ற முப்பது வருஷங்களில் அனுபவ ஸித்தமான பல சிட்டைகளின் பரிசீலனையின் பயனாக உருவானது. ரஸமான கற்பனைக்குத் தாராளமாக இடந்தருவது கர்நாடக ஸங்கீதம். க்ருதிகளைக் கையாளுவதிலும் இந்தச் சுதந்திரம் உண்டு. எனவே, அளவும் அவசியமுமே தாதுவின் விஸ்தாரத்தை நிர்ணயித்தன. ஆந்திர தேசத்திலும், தெலுங்கு எழுத்துக்களை இலகுவாகப் படிக்கக்கூடிய கன்னட தேசத்திலும் உள்ள ஸங்கீத அபிமானிகளின் நிமித்தம் தலைப்பில் தெலுங்கு ஸாஹித்யமும் தமிழில் உள்ள தாதுவின்கீழ் தெலுங்கில் மாதுவும் அமைந்துள்ளது. ஸப்த ஸ்வரங்களின் தமிழ் எழுத்துக்களை மாத்திரம் சற்பது தெலுங்கறியும் எவருக்கும் கடினமாகத் தோன்றுதென்ற நம்பிக்கை. மேலும் மதிப்பற்ற இசைக் களஞ்சியம் ஆந்திர பாஷையில் இருப்பதனால், அந்தப் பாஷையின் எழுத்தறிவு கலோபாவிகளுக்கு இன்றியமையாதது. அத்தகைய பழக்கம் இரண்டொரு நாள் முயற்சியில் தமிழருக்குக் கைகூடும் என்பது நிச்சயம். இதற்குத் தூண்டு கோலாகவும் இந்நூல் பயன்படலாம்.

"ச்ருதிமணிமாலை"யில் அடங்கிய 400 தியாகராஜ கீர்த்தனங்களைத் தவிர சுமார் 200 அங்கங்கே சிதறிக் கிடக்கின்றன. அவைகளைத் திரட்டி ஒரு பாகமாக வெளியிட ஆவல். அவற்றின் ஸ்வரஸாஹித்ய ரூபமான குறிப்புகளை அறிஞர்கள் அனுப்பினால், நன்றியுடன் வரவேற்பேன். விஷயதானம் செய்ய மனமுள்ளவர்கள் எனக்குத் தெரிவித்தால் அவர்களை நாடிச் செல்லவும் சித்தமாயிருக்கிறேன். இம் முகவுரையில் முன்னரே குறிப்பிட்டபடி, இதரக்ருதி கர்த்தாக்கள் பலரின் அருமை மணிகள் சுமார் 400 என்னிடம் உள்ளன. ஆண்டவன் அருளும் அன்பர்களின் ஆதரவும் இருந்தால் தொடர்ந்து இரண்டு பாகங்கள் மேலும் பிரசுரிக்க உத்தேசம். "க்ருதிமணிமாலை" எனது இருபத்தைந்து வருஷத்திய கனவு. இது நிஜவான விநோதம் இறைவனின் திருவிளையாடல்களில் ஒன்றாகும். இம் முயற்சி ஈடேறும் வண்ணம் எனக்குத் துணைநின்று பலகாலும் பேருதவி புரிந்த அன்பர்கள் பலர்; பொருளுதவி புரிந்தும் ஏனைய விதங்களில் ஊக்கங் காட்டியும் எனக்கு உற்சாக மளித்தவர் பலர். அன்னார் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி. சரித்திரக் கட்டுரைகளை உதவிய யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதி ஸ்வாமிகள், பஞ்சரத்னம், கோவூர் முதலிய க்ருதித் தொகுதிகளைக் குறித்த அனுபந்தம் எழுதித் தந்த பேராசிரியர் திரு. சாம்பமூர்த்தி அய்யர் அவர்கள், 'அறிமுகம்' என்ற தலைப்பின்கீழ் என்னிடம் கொண்ட அத்யந்த ப்ரேமையை உள்ளம் கனிந்து வெளிக்காட்டிய மித்ரமணி ஸதாசிவ யோகிதாஸன் அவர்கள், தியாகராஜ ஸ்வாமி, தீக்ஷிதர், ஸ்யாமா சாஸ்திரி, ஆகிய கர்நாடக ஸங்கீதமும் மூர்த்திகளின் மூவர்ணப் படங்களைக் கற்பித்த பலகலை நிபுணர் திரு. எஸ். ராஜம் அவர்கள்,

தற்கால நிலையில் ஏற்கவொண்ணாத பொறுப்பை உவகையுடன் ஏற்று, லாபங் கருதாது, மூன்று மலர்ச்சியுடனும், மிகுந்த ஆர்வத் துடனும் அச்சு வேலையை மேற்கொண்டு, விரைவில் பூர்த்தி செய்த யுனிவர்ஸல் பிரிண்டர்ஸின் நிர்வாஹகரான வினய ஸம்பன்னர், திருநிறை செல்வர் ஸ்ரீ வி. டி. கோபாலன் எம். ஏ. அவர்களுக்கும் என் நன்றி.

இந் நூற்றொருதியின்கண் மலிந்து கிடக்கும் பிழைகளை அன்பர்கள் எனக்கு அறிவித்தால், போதிய ஆதரவிருந்து இரண்டாவது பதிப்பு அவசியமென ஏற்படுங்கால் அவைகளை அகற்ற முயற்சிப்பேன். கர்நாடக ஸங்கீதம் ஸமுதாயத்தின் அருஞ்செல்வம். அதன் வளம் குன்றுமல் காப்பது எல்லோ ருடைய கடமையு மாகுமன்றே ?

"ஸபர்மதி"
எழும்பூர், சென்னை
ஸர்வதாரி-ஹேமந்த
சித்திரை-29வ

பகவத் பக்தாங்க்ரிரேணு,
ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார்.

ஸங்கீத ஜோதி தியாகராஜர்

ஓமே பிரம்மம்; ஓமே ஸர்வம்; ஓமே ஸாம கானம்" என் பது வேதமுனிவர் கண்ட உண்மை. அந்த ஓங்கார நிறைவே ஆகாசமாகிய பிரஹ்ம சரீரம்; அதனின்றே எல்லாப் பூதங் களும், தன்மாத்திரைகளும், ததுவங்களும், உலகங்களும் விரிந்து பரவின. பரமாத்மா, ஓங்காரமாகவே ஜீவாத்மாவுடன் உடல்களில் வசிக்கிறான். அதனாலேதான், "உள்ளத்தில் ஓங்கார மாய் நின்ற ஐயா!" என்று இறைவனைப் பரம பக்தர்கள் உபா சித்தனர். இந்த ஓங்காரத்தின் விரிவுதான் வாத்யம் சங்கீய மாகும். ஓங்காரத்தையே உயிராகக் கொண்டது இசைக் கலை. அதனாலேதான் அஃது எல்லா உயிர்களையும் அப்படி வசப்படுத் துகிறது. கண்ணன் குழலோசையில் மயங்கித் தற்போத மிழக்காத உயிர்களில்லை. இசை யினிமையில் பாம்பும் சொக் கும்; பசுவும் புலியும் பகையை மறந்து விளையாடும்; சிசுவும் லயித்துறங்கும். பரம பக்தியால் அந்தக்கரண சுத்திபெற்ற யோகிகள் அனாஹதகானமான இந்த ஓங்காரத்தில் எப்போ தும் லயித்திருப்பார்கள். அந்த லய முதிர்ச்சியால் விசுத்த சக்கரம் மலர்ந்தால் அருள்வாக் குதிக்கும். அருள் கனிந்து பொழியும் அமுதகான ரசம், நாதயோகப் பிரசாதமாகும். ஆழ் வார்கள், நாயன்மார்கள், இராமலிங்க சுவாமிகள், தாயுமான வர், முத்துத்தாண்டவர், அருணகிரிநாதர், புரந்தரதாஸர், மீரா பாய், கபீர், துளஸிதாஸர், குருநானகர் போன்ற மகான்கள் நாதயோகிகளே யாவர். பாஷை தெரியாத மக்களுக்குக்கூட, அவர்கள் பாடிய பாடல்கள் இன்பமளிக்கும். நாதவித்தை நாதமயமான ஜீவாத்மாவைத் தொடும்போதுதான் பேரின்பச் சிலிர்ப்புண்டாகிறது. எனெனில், இசைக் கலையாகப் பாடுவோ னும், அந்தராத்மனை நாதப்பொருளே; நாத கீதத்தைக் கேட்

பவனும் அதே அந்தரசத்மனே! ஆதலால் சங்கீதம் கலைகளுக்கு அரசாகி, ஆத்மவசீகர சக்தியாக விளங்குகிறது.


உலகிலுள்ள எல்லா நாடுகளும் சங்கீதத்தைப் போற்றி வளர்க்கின்றன. மேற்கே நாட்டுக்கு நாடு குண்டுச் சண்டை கிளம்பினாலும், பெதோவன், மொஜார்டு, ஹாண்டெல் போன்ற இசைப் புலவர்களிடம் யாருக்கும் பகையில்லை; எல்லாரும் அவர்களைப் போற்றுகிறார்கள். நாடு மொழி சாதி மத பேதங் களைக் கடந்து, அகண்ட சமரச சக்தியாகவே ஸங்கீத வாணி விளங்குகிறாள்! ஸங்கீத வாணியின் பூரணமான ஒளியைப் பெற்ற நாடு, நமது தமிழகமே! இங்கேதான் இசைக் கலை, மிக உச்சநிலை யடைந்து கர்நாடக சங்கீர்த்தனமாக அவதரித்து விளங்குகிறது. கர்நாடக சங்கீர்த்தனத்திற்கு இணையான இசைக் கலைகளெல்லாம் இந்தக் கர்நாடக சங்கீர்த்தன சூரிய னின் சில கதிர்களேயாகும். இக்கலை, பல்லாயிரம் ஆண்டுக ளாகவே வளர்ச்சிபெற்று வந்திருக்கிறது. நாரதரின் ஸங்கீத மகரந்தம், பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரம், சாரங்க தேவ ரின் ஸங்கீத ரத்னாகரம், லோசன கவியின் ராக தரங்கிணி, புரந் தர கீதங்கள், நாராயண தீர்த்தரின் கிருஷ்ண லீலா தரங்கிணி, இராமதாஸ கீர்த்தனங்கள், அஹோபிலரின் ஸங்கீத பாரிஜாதம், வேங்கடமகியின் சதுர்தண்டி ப்ரகாசிகை முதலிய உயர்ந்த சங்கீத நூல்கள், கர்நாடகக் கலையில் அடங்கிய மேள ஜன்ய ராக லக்ஷணங்களையும், கமக லக்ஷணங்களையும் விளக்குகின் றன. இந்த இலக்கணங்களுக்கெல்லாம் இலக்கியமாக அமை ந்த கீர்த்தனங்கள் பலவாம். அவற்றுள் முதன்மையானவை, தியாகராஜ கீர்த்தனங்களும், முத்துசாமி தீட்சதர் கிருதிகளும், சாமா சாஸ்திரிகள் கிருதிகளுமாகும். இவையெல்லாம் தெலுங் கிலும் சமஸ்கிருதத்திலும் இருக்கின்றன. எனினும், நாதமய மான அந்தராத்மாவைத் தொட்டு, கானசுகமளிப்பதால், இவை எல்லா உலகிற்கும் பொதுவான இசைச் செல்வங்கள் ஆகின் றன. மேற்சொன்ன மூவரும் சங்கீதத் திருமூர்த்திகளே! இவர் கள் சிருஷ்டித்த நாதக்கலைதான், இன்று கர்நாடக சங்கீத வெள்ளமாகப் பெருகி வருகிறது! இவருள் தியாகராஜர், பரம இராமபக்தர். அவர் பாட்டு பக்தி பரவசத்தில் உருகி உருகி வந்து, இராமாபிஷேகமான புண்ணிய தீர்த்தம் போன்றது. தீட்சதர், முருகன் அருள் பெற்ற வேதாகமப் புலவர்; ஸ்ரீவித்யா உபாசகர். அவரது சமஸ்கிருத கிருதிகள் நிரம்ப கமக லட்சணங்களுடன், கலைக்கு அழியாச் சிறப்பைத் தரு வன. சாமா சாஸ்திரிகளின் வாக்கோ, காமாக்ஷியம்மன் அரு ளிற் பூத்த நாதசக்தி வெள்ளமாக வந்து, நம்மைப் பரவசப் படுத்துகிறது. இம் மூன்று இசை மணிகளின் ஜீவனமெல்லாம் நாதோபாஸனையே!

கர்நாடக சங்கீர்த்தனத்தில் எத்தனையோ மாறுதல்கள் காலக்கிரமத்தில் ஏற்பட்டன. 1750-1850-ஆம் ஆண்டுகளில் நமது இசைக்கலை உச்ச நிலையை அடைந்தது. அக்காலத்தில் எழுந்த பாவஸங்கீர்த்தனங்களே, இன்னும் இசை யுலகை ஆளு கின்றன. அதைச் சங்கீத சகாப்தம் என்றே சொல்லலாம்! அதில் எத்தனையோ சங்கீத மணிகள் விளங்கினர். அவர்களுக் கெல்லாம் அரசராக, கலைச் செங்கோல் பிடித்துப் புகழ்மூடி

தரித்து விளங்கிய நாதாவதாரரே, ஸ்ரீமத் தியாகராஜப் பிரம்மம் ஆவார். அந்த நூற்றுண்டைத் "தியாகராஜ சகாப்தம்" என்பதும் பொருந்தும். தியாகராஜர், பக்தி பரவசரான சங்கீத ராஜர் என்பதை உலகெல்லாம் ஒப்புக்கொள்ளுகிறது! இவர் புகழ், நாளாக ஆக அகண்ட ஜீவநதிபோல் உலகெங்கும் விரிந்து இசைப்பயிரை வளர்த்து வருகிறது. இன்று பெதோவன் (Beethovan) அறிந்த வெள்ளைக்காரர் தியாகராஜரையும் அறிந்திருக்கின்றார்கள். தியாகப் பிரம்மத்தால் நமது நாட்டுக்கலை உலகளாவி விளங்குகிறது. இந்த மகாத்மாவின் வாழ்வே, சங்கீர்த்தனம்; சங்கீர்த்தனமே வாழ்வு. இந்த உண்மையை அறிவோம்.

காவேரிக் கரையில் பல அழகான க்ஷேத்திரங்கள் உள்ளன. அவற்றுள், திருவாரூர் = (திரு + ஆரூர்) மிகவும் புகழ் பெற்ற சிவஸ்தலம். "கமலையில் பிறக்க முக்தி, கையிலையில் இறக்க முக்தி" என்பது பழமொழி. இம்மூ அப்பர், சுந்தரர், சம்பந்தர் முதலிய எல்லா அடியார்களாலும் பாடப்பெற்றது. இங்கேதான் மனுநீதிகண்ட சோழன், பொது நீதி செலுத்தினன். இங்கே கோயில் கொண்டுள்ள தியாகராஜப் பெருமானின்மீது மோகங்கொள்ளாத அடியார் இல்லை. காவேரியின் நித்திய ஓங்கார ஸ்ருதியுடன் அடியாரின் அருட் பாடலும் கலந்தொலிக்கும் இந்த ஊரில், எத்தனையோ வித்துவான்கள் இருந்தனர். அவர்களுள் பிரம்ம குலத்தில் வந்த கிரிஜாப் பிரம்மம் ஒருவர். இவர் முகில்நாடு வகையைச் சேர்ந்த திரைலிங்கத் தெலுங்குப் பிராமணர்; பாரத்வாஜ கோத்திரர்; தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் நிரப்பப் படித்த சங்கீத வித்துவான். இவருடைய வேதாந்தப் பாடல்களை மெச்சி, தஞ்சை மன்னன் ஷாஜி ராவ், தக்க சன்மானம் அளித்து ஆதரித்தான். இந்த கிரிஜாப் பிரம்மமே, நமது தியாகராஜருடைய பாட்டனார். கிரிஜாப் பிரம்மத்திற்கு ஐந்து குமாரர்கள் உண்டு. அவருள் கடைசி மகனே, தியாகரின் தந்தை, இராம பிரம்மம். இராம பிரம்மம், சாந்தா தேவியுடன் நிறைமுறையான இல்லறங் காத்து, பரம பாகவதராக விளங்கினர். சாந்தா, ஒழுக்கமும் கற்பும் பொறுமையும், நல்ல சங்கீதப் பயிற்சியும், ஜபசாதனமுங் கொண்ட உத்தமி. தந்தை இராம பிரம்மம் சிவ விஷ்ணு பக்தியில் ஈடுபட்டு, நித்யோத்ஸவ திவ்யநாம பஜனையும், திவ்ய கதா காலட்சேபமுமாகவே வாழ்ந்தார். திருவாரூர் தியாகேசரிடம் அவருக்கு ஈடுபாடதிகம். சிவ புராணத்திலும் பாகவதத்திலும் அவர் நிபுணர். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகள் பிறந்தன. மூத்த பையன், பஞ்சநதம் என்ற ஜப்யேசன்; இரண்டாம் பிள்ளை, இராம நாதன்; மூன்றுவது மணிப்பிள்ளையே, 1759-ஆம் ஆண்டு பிறந்த தியாகராஜன். தியாகையர் 1759-ஆம் ஆண்டு பிறந்ததாகவும், 88 ஆண்டுகள் வாழ்ந்ததாகவும் சிலர் ஆராய்கின்றனர். அவருடைய பிரதம சிஷ்யரான வேங்கடரமண பாகவதர், தியாகப் பிரம்மம் 5-5-1767-ல் பிறந்ததாகச் சொல்லுகிறார். "கலி 4868, ஸர்வஜித் வருஷம், சித்திரை மாதம, 25-ஆம் தேதி, திங்கட்கிழமை, வைசாக சுத்த சப்தமி, பூச நட்சத்திரம், பகல் 12-மணிக்கு, கடக லக்கினத்தில் தியாகராஜ ஜனனம்" என்று பழைய சோதிடர் கணித்திருக்கிறார்கள்.

அவரது இராசி அம்சச் சக்கரங்கள்



பெற்றோர், தாம் வழிபட்ட க்ஷேத்ரேசர் பெயரையே கடைசிப்பிள்ளைக்குச் சூட்டினர். மூத்தவன், தந்திரப்புலி, முன்கோபி, பொறுமைசாலி, தியாகராஜன். தந்தை எவ்வளவோ புத்தி சொல்லிப் படிக்கவைத்தும், அவனுக்குப் படிப்பு ஏறவில்லை. நடுப்பிள்ளையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை. கடைக்குட்டித் தியாகப் பிரம்மமே தந்தைக்கேற்ற பிள்ளை. தந்தை திருவாரூர்த் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பையனைப் படிக்க வைத்தார். தியாகராஜரின் அறிவிற்கு இந்தப் படிப்பு போதாது. இராம பிரம்மம் திருவையாறு ஸப்தஸ்தானத்திற்குப் பஜனை செய்யச் சென்றார். அந்த ஊர் அவருக்குப் பிடித்திருந்தது. குடியேறத் தக்க வசதிகளும் இருந்தன. முதன்மையாக நல்ல கலாசாலையிருந்தது. ஆதலால் தந்தை, மனைவி மக்களுடன் திருவாரூரை விட்டுத் திருவையாற்றில், திருமஞ்சனத் தெருவில் ஒரு சிறு வீட்டிற் குடி புகுந்தார். எட்டாம் வயதில் தியாகராஜருக்கு உபநயனம் நடந்தது. காயத்ரியுடன் தந்தை, இராம தாரக நாமத்தையும் உபதேசித்தார். அன்றுமுதல் தந்தையின் இராம விக்கிரகத்தைத் தியாகராஜரே பூஜித்துவந்தார். ஸ்ரீ இராம கிருஷ்ணானந்தர், ஸ்ரீ இராமஷடாட்சரி மந்திரத்தை உபதேசித்தார். தியாகப்பிரம்மம், கணக்கற்ற இராம ஜபம்செய்து வந்தார்.

காவேரி, கொள்ளிடம், குடமுருட்டி, வெண்ணாறு, வெட்டாறு ஆகிய ஐந்து நதிகள் நாமசங்கீர்த்தனம் செய்யும் திவ்ய க்ஷேத்திரம், திருவையாறு. ஆற்றுப்பாட்டை உண்டு வளர்ந்த இதன் வயல்களிலும் சோலைகளிலும் கலைமகளும் திருமகளும் நடன மாடுகிறார்கள்! அருட்கலைக்கெல்லாம் தாயகம் ஐயாறு. அப்பர், சுந்தரர், சம்பந்தர் தேவாரங்களும், வேதாகமங்களும், புராண இதிகாசங்களும் முழங்கும் கலைக்கோயில் திருவையாறு. மகா வைத்தியநாதையர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், கீதை இலட்சுமணச்சாரியார் போன்ற இசைமணிகள் இருந்து விளங்கியதலம், ஐயாறு. அப்பர் கைலைக்காட்சி கண்டு, "கண்டறியாதன கண்டேன்!" என்று வியந்து பாடிய இந்தத் திருத்தலத்தின் பெருமை, தியாகராஜரால் உலகெல்லாம் விளங்குகிறது! இங்கேதான் இராம பிரம்மம் பரம பாகவதராய் உஞ்சவிருத்தியெடுத்துண்டு, பக்தி பரவசத்தில் வாழ்ந்தார். அவர் கவலையெல்லாம் தியாகராஜனை ஆளாக்குவதிலேயே இருந்தது. அவனை அவர் பள்ளிக்கூடத்திற் கனுப்பாமல், தாமே ஐந்தாண்டுகள் தெலுங்கும் சமஸ்கிருதமும் சொல்லிவைத்து, அந்தண ஒழுக்கமும் பயிற்றினர். தாய் சாந்தா, தியாகுவிற்கு இராமதாஸ், புரந்தரதாஸ் கீர்த்தனங்களும், அஷ்டபதியும் சொல்லித் தந்தாள். தியாகராஜன் குரலும் இசைத்திறமையும் கண்டு, "கண்மணீ,

நீ சங்கீத வித்வானவாய்'' என்று தாயார் சொல்லிவந்தாள்! தகப்பனாரின் உஞ்சவிருத்தியில், தியாகுவும் உடன் சென்று பாடுவதுண்டு. தந்தைக்கு மகனுடைய பாட்டில் மகிழ்ச்சியே! என்றாலும், தியாகு நன்றாகப் படித்துச் சமஸ்கிருத வித்வானாக வேண்டும் என்பதே அவர் விருப்பம். அதற்கேற்றபடி திருவையாற்றில் ஒரு சமஸ்கிருதக் கல்லூரி இருந்தது. அது அச்சுதப்ப நாயகர் காலத்தில் புகழ்பெற்ற, மகா மேதாவி மந்திரியான கோவிந்த தீட்சதர் நாட்டியது. தீட்சதர் அதை, நாலந்தா, தக்ஷசீலம் போல் நடத்த எண்ணி வியாகரணம், தர்க்கம், வேதம், ஆயுர்வேதம், சோதிடம், வேதாந்தம் எல்லாம் கற்பிக்க ஏற்பாடு செய்தார்; அறுபத்துநான்கு கலைகளையும் கற்பிக்க விரும்பினர். அதற்குள் அவர் ஆயுள் முடிந்தது. பிறகு நவாபுகாலத்தில் இக் கல்லூரி நலிவுற்றது. தியாகராஜர் காலத்தில் மீண்டும் தலை தூக்கியது. இராமாயணம் பாரதம் பாகவதம் வேத வேதாந்தாதி கிரந்தங்களை இங்கே தக்க ஆசிரியர்கள் நன்றாகக் கற்பித்தனர். தியாகராஜர் இக்கல்லூரியிற் சேர்ந்து, நான்காண்டுகள் சமஸ்கிருதம் கற்றார். முதன்மையாக வால்மீகி இராமாயணம் அவரை உருக்கியது. தியாகராஜர் இராம காந்தத்தில் ஈடுபட்டார். வால்மீகியைப் படிக்கப்படிக்க, இராமபக்தி அவருடைய இரத்தத்தில் ஊறிப்போனது. அப்போதே தியாகராஜர் இராம லக்ஷ்மணராஜர்! பத்ராசலம் இராமதாஸர் வரலாறும் கீர்த்தனங்களும் இந்த இராமபக்தியைத் தீவிரப்படுத்தின. ''அந்த ராமமயம்'' என்ற கீர்த்தனத்தைப் பாடி தியாகராஜர் ஆனந்தக் கூத்தாடுவதுண்டாம்! இச்சமயம் தகப்பனார் ஸ்ரீ ராம விக்கிரகத்தைப் பூஜைபண்ணித் தினம் கானம் செய்து வந்தார். தியாகு, அப்பா பூஜைக்கு மலர் பறித்து வந்து கைங்கரியம் செய்வதும், அவருடன் இராம ஜபம் செய்வதுமானான். தந்தையும் இராம பிரம்மம்; அவர் பூசித்ததும் இராமனுருவம்; தன்னை வசீகரித்ததும் இராமாயணம்; தன் உள்ளத்தில் உதித்ததும் இராமதாரகம்! எல்லாம் இராம மயமாகவும் இராம ஜயமாகவும் அமைந்தன! தந்தை இராம பிரம்மம், இராமபக்தி பரவசத்திலேயே தம்மை மறந்தவர். உலகப் பொருள்களில் அவருக்கு ஆசையே இல்லை. அபரிக்ரக விரதத்தைப் பூரணமாக அவர் நிறைவேற்றினர். அவர் தஞ்சாவூர் மன்னர் தானமாகத் தந்த வீட்டை முதலில் மறுத்து, பிறகு கட்டாயப் படுத்தியதால் பெற்றுக்கொண்டு, மற்றொரு ஏழைப் பிராமணனுக்கு அதைத் தானம் கொடுத்துத் தாம் எளிய மனையில் வாழ்ந்தார். தந்தையின் வைராக்கியம் பன்மடங்காக மகனிடம் குடிகொண்டது. தியாகுவுக்குக் கல்லூரிப் படிப்புக்கூடப் பிடிக்கவில்லை. 'இராமாயணம் ஒன்றே தனக்குப் போதிய அறிவுச் செல்வம்' என்று கொண்டான் வாலிபக் காலை. அவன் உள்ளம், புரந்தரதாஸ் இராமதாஸ் பக்தபோதனை மகான்கள்போல் இராமனைப் பாடிக் கொண்டும், பக்தி செய்துகொண்டும், கல்லாபோதாகப் போக்கவேண்டும் என்று கருதியது. தாயார் சாந்தாவும் அப்படியே நினைத்தாள்; தியாகுவைத் தக்க சங்கீத ஆசிரியரிடம் விடவேண்டு மென்றே அடிக்கடி சொல்லிவந்தாள். தகப்பனாரோ, பிள்ளை பண்டிதனாகி ஆசிரியத் தொழில் செய்யவேண்டுமென்று விரும்பினர். தியாகுவின் சித்தம்

தாயார் வழியே சென்றது. கல்லூரியில் தர்க்க வியாகரணம் படிப்பதிலும், காதுகுளிர பக்தி கீதங்கள் கேட்பதிலுமே அவர் கருத்தூன்றினர்; அத்துடன் சோதிடமும் கற்றுத் தேர்ந்தார்.

அக்காலம் தஞ்சை யரசில் பல வித்வான்கள் இருந்தனர். துளஜாஜி, சரபோஜி ஆகிய மராட்டிய மன்னர்கள் தஞ்சையில் அரசு செலுத்திக் கலையைப் போற்றினர். அவர்களுடைய ஆதரவில் முன்னூறுக்கு மேற்பட்ட சங்கீத நிபுணர்கள் வாழ்ந்தனர். ராஜ சபையில் தனது திறமையைப் புலனுக்க அவர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷத்தில் ஒரு தினமே கிடைக்கும். ஆகையால் சலியாது உழைத்துச் சந்தர்ப்பம் நேருங்கால் அதைச் செவ்வனே பயன்படுத்திக் கொள்ள அனைவரும் காத்திருந்தனர். அத்தகைய வித்துவான்களில் முதன்மையானவர் ஸொண்டி வெங்கட ஸுப்பையா. அவர் க்ருஷ்ணலீலா தரங்கிணியின் கர்த்தாவான நாராயண தீர்த்த யதீந்திரரின் சீட மரபினர். தெலுங்கு வருஷப்பிறப்பன்று அரசர்முன் வினைகை நடத்தும் உரிமை அவருடையது. அன்னாரின் புதல்வரான ஸொண்டி வெங்கடரமணையா என்பவரே தியாகராஜரின் குருநாதர். சிஷ்யரின் வரப்பிரஸாதமான இயலிசைத் திறமையையும், அகண்டமான மனோதர்மத்தையும் அவர் நன்முக அறிந்து உளம் பூரித்தார். அந்த உத்தம ஸங்கீதத்தைப் பலரும் கேட்டனுபவிக்கவேண்டுமென்று ஆவல்கொண்டு, ஒரு நாள் ஒரு பெரிய ஸபையில் தியாகராஜரைப் பாடச் செய்தார். அன்று தியாகராஜர் "தொருகு இடுவண்டிஸேவ" என்ற பிலஹரிக்ருதியை முறைப்படி விஸ்தாரமாகப் பாடி அனைவரையும் பரவசமாக்கினர். ஆசானும் அகமகிழ்ந்து, "தொருகுனு இடுவண்டி சிஷ்யுடு" என்று வியந்து போற்றினர். பின்னர் தஞ்சையில், தம் குருநாதரின் தந்தையின் இல்லத்தில், அரண்மனை நிகழ்ச்சியொன்றை முன்னிட்டு வந்திருந்த திரளான வித்துவத்கோஷ்டியின்முன் தியாகராஜர் "மரி மரி நின்னே" என்ற காம்போஜி க்ருதியைப் பாடிப் புகழ்பெற்றார். இதன் பின்னரே சரபோஜி மன்னர் தியாகராஜரைக்காண ஆவல்கொண்டு செய்தியனுப்பினர். ஸொண்டி வெங்கடரமணையா தஞ்சை மராடிய மன்னனுக்குக் கண்போன்ற கலாரத்னம்; எல்லா வித்வான்களின் மரியாதையையும் பெற்ற சங்கீத கலாநிதி. இவர் அதிஷ்டவசமாகத் திருவையாறு வடக்குத் தெரிவிலேயே இசைவிருந்தளித்து, பல மாணவர்களையும் பயிற்றிக்கொண்டிருந்தார். இவருடைய காணுமிருதம் தியாகராஜர் உள்ளத்தைக் கவர்ந்தது. இவர் தம்பூராச் சத்தம் கேட்டதுமே தியாகராஜர் ஓடிப்போய் வணக்கமுடன் இருந்து, சங்கீதரசம் பருகிவந்தார். நாதவாணியும் தியாகையர் உள்ளத்தில் வீணைமீட்டத் தொடங்கினள்! வீட்டில் இராமமூர்த்திக்குப் பூமலர் தூவும்போதே, தியாகையரும் அன்புவெள்ளத்திற் பூத்த பாமலரைத் தூவி வந்தார். தியாகையர் முதலில் பாடிய பாட்டு, தேசியத் தோடியில் "நமோ நமோ ராகவாய அநிசம்" என்பதேயாம். "சுகமுனிவரால் வணங்கப் பெற்றவன், தீனபந்து, சகலலோக தயாசிந்து, பாபாந்தகாரத்தைப் போக்கும் சூரியன், தொண்டருக்குக் கற்பகம்போன்றவன், தீன தயாளு, நல்லறிஞன், ஆயுராரோக்ய மளிப்பவன், சர்வஜன ரக்ஷகன் கஜேந்திரனைக் காத்தவன்-தியாகராஜன் சேவிக்கும் இத்தகைய

இராகவனுக்கு வணக்கம்'' என்பது அப் பாடலின் பொருளாகும். இப்படியே மகன் பாடும் பாடல்களைத் தந்தை இராம பிரம்மம் பார்த்து, தக்க வித்வான்களிடம் காட்டினர். பாட்டிலுள்ள அருளும் பொருளும் அன்புணர்வும் பாவனாரசமும் கண்ட பெரியோர் ''தியாகராஜன் பக்திமான், புத்திமான், வாகவி, சங்கீதமணி'' என்று புகழ்ந்தனர். தியாகராஜருக்குக் கேள்வியாலும், தந்தையிடம் கற்றதாலும் புரந்தர இராம தாஸர்களின் கீர்த்தனைகள் பல பாடமாயிருந்தன. அவற்றையே இலக்கணப்படி பயிற்றிய பிறகு, வேங்கடரமணர் ஸ்வர ஸாஹித்தியம் செய்துவைத்தார். இந்த வித்வானின் தாய்ப் பாட்டனாரான காளஹஸ்தி ஐயர், வீணை வித்வான்; அவரிடம் அரிய இசை நூல்கள் இருந்தன. வித்வானின் தகப்பனார் வேங்கடசுப்பையரும், நல்ல இசையேடுகளை வைத்துச் சென்றார். அவற்றையெல்லாம் தியாகராஜர் கூர்ந்து படித்து, புதுப்புது விஷயங்களை அறிந்துகொண்டார். ஆயினும், சங்கீத சாகரத்தை எளிதில் தாண்ட முடியவில்லை. பல சந்தேகங்கள் உதித்தன. அவற்றை வித்வான்கள்கூட நீக்க முடியவில்லை. முடிவில் தமக்கு இராம ஷடாட்சரியை உபதேசித்த கிருஷ்ணனந்தரிடம் கேட்டார். அவர், நாரதமந்திரம் உபதேசித்து, ''ஸ்ரீ நாரதரையே உபாசித்தால் ஐயந் தீரும்; இசைவளம் பெருகும்'' என்றார். தியாகராஜர், பக்தி சிரத்தையுடன் வரநாரதரைக் குருஸ்வாமியாக உபாசித்து வந்தார். நாரதர் கருணையால் தியாகராஜருக்கு ''ஸ்வரார்ணவம்'' என்ற அரிய ஸ்வர ரகசிய நூல் கிடைத்தது. அந்த நூல் சமய சஞ்ஜீவிபோல் உதவியது. நாரதீயம், ஸ்வரார்ணவம் முதலிய அரிய இசை நூல்கள் பூஜையில் வைத்துப் பாதுகாக்கப் பட்டுவந்தன. குருவின் அனுமதி பெற்றுச் சீடர்கள் அவ்வப்போது அவைகளிலிருந்து குறிப் பெடுத்துக் கொள்ளுவார்கள். அம்முதல் நூல்களும், சீடர்களின் குறிப்புகளும் நாளடைவில் மறைந்தது பிற்காலத்தவரின் துரதிருஷ்டமே.

தியாகராஜர், தினந்தோறும் 1,25,000-ம் இராமஜபம் வீதம், முப்பத்தெட்டாம் வயதிற்குள் 96 கோடி இராமஜபம் உருவேற்றினர்! கடைசிநாள் உள்ள முருகி ஸ்ரீராமனைப் பாடும் போது, கதவுதட்டிய சத்தம் கேட்டது; ஓடித் திறந்து பார்த்தார். ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் விசுவாமித்ர யாக ஸம்ரக்ஷணத்திற்காகச் செல்லும் காட்சியைக் கண்டார்! உள்ளஞ் சிலிர்த்தார்; ஆனந்த பரவசமானார். பரம பக்தியால் உடல் சிலிர்க்கக் கண்ணீர் பெருக, ''ஏல நீதயராது'' என்ற அடாணா கீர்த்தனத்தைப் பொழிந்தார்; ராம சைதன்யராக விளங்கினர்.

பேரின்ப அருவிபோலத் தடதடத்துச் செல்லும் இக் கீர்த்தனத்தைக் கேட்டு இராமசேஷா சாஸ்திரிகள், கிருஷ்ண சாஸ்திரிகள் போன்ற புலவர்மணிகள், ''நாரதரே இப்படிவந்து பாடுகிறார்!'' என்று போற்றினர்கள்.

தந்தை இராம பிரம்மம், பிள்ளைகள் மூவருக்கும் திருமணம் செய்துவைத்தார். முதல் இரண்டு பிள்ளைகள், தமது நிலைக்குத் தக்கபடி வேலை பார்த்து உலகுடன் ஒட்டி வாழ்ந்தனர். அவர்களுக்கும் தியாகராஜருக்கும் வெகுதூரம். பரம பாகவதரான தம்பியை அவர்கள் ''இராமப் பைத்தியம்''

என்றே நினைத்து வருந்தினர். "தோலினே சேஸின பூஜாபலமு" என்ற பாட்டில் தியாகராஜர் தமது குறைகளை முறையிடுகிறார். தியாகராஜர் பார்வதியம்மையாரை முதல் மனைவியாகக் கொண்டார். ஐந்தாண்டுகள் பதிகைங்கரியம் செய்து, அந்த உத்தமி உடலை உதறிச் சென்றாள். பிறகு அவள் இறுதி விருப்பப் படியே, அவளது தங்கை கமலாம்பாளை இவர் மணந்தார். இந்த அம்மாள் கற்பரசி; நாயகன் நோக்கமறிந்து நடந்த உத்தமி. இவள் வயிற்றில் ஒரு பெண் பிறந்தது. சீதாலக்ஷ்மி என்ற அந்தப் பெண்ணை சுவாமிகள் பிரியமாக வளர்த்து, தக்க வயதில், அம்மாள் அக்கிரகாரம் குப்புசாமி ஐயருக்குக் கன்னிகாதானம் செய்வித்தார். கலியாணம் சிறப்பாக நடந்தது. பக்தர்கள் காணிக்கையாகப் பல பொருள்களைத் தந்தனர். தியாகராஜர் அனைத்தையும் இராமார்ப்பணமே செய்தார். வாலாஜாப் பேட்டை வேங்கடரமண பாகவதர், தமது சீடர் பல்லவி எல்லய்யர் எழுதிய அழகான கோதண்டராம சீதா லக்ஷ்மணர் படத்தையும், உயர்ந்த சால்வை புடவை முடலியவற்றையும் குருவுக்குச் சமர்ப்பித்தார். தியாகராஜர் மற்றப் பொருள்களையெல்லாம் ஒதுக்கினர். ஸ்ரீராம படத்தைமட்டும் பெருமகிழ்ச்சியுடன் ஏற்று, 'நனுபாலிம்ப நடசிவச்சிதிவோ!' (என்னை ஆட்கொள்ளவே நடந்துவந்தாயோ, ஸ்ரீராமா!) என்ற மோகன கானத்துடன் உச்சிமேல் வைத்துக் கொண்டாடி, பூஜையில் வைத்தார். சீதாலக்ஷ்மிக்கு, "தியாக ராஜன்" என்ற ஒரு மகனிருந்தான். அவனும் இசை பயின்று, "வயலின்" வாத்தியந் தேர்ந்து, குரவம்மாள் என்ற பெண்ணை மணந்து இல்லறங் காத்தான். ஆனால் இப்பிள்ளை நோய்வாய்ப்பட்டு, முப்பதாம் ஆண்டில் வானுலகெய்தினன். அத்துடன் தியாகய்யர் சந்ததி ஒய்ந்தது. தியாக கீர்த்தனங்களே, அவரது அமரப் புதல்வர்கள்!

தியாகராஜர் புகழைத் தந்தை இருந்து பார்ப்பதற்கில்லை. மகன் சங்கீத சாதனம் செய்யுங் காலத்திலேயே ஒரு நாள், அவர் உயிர் இராம நாமத்துடன் பிரிந்தது. அப்போது இராம பிரம்மம் அருமை மகனைப் பக்கத்தில் அழைத்து, "தியாகு, உனக்கு நான் உலகோர் போற்றும் செல்வம் வைக்கவில்லை. நான் உஞ்சவிருத்தியாற் பிழைத்தேன். ஸ்ரீ ராமனை பஜனை செய்து வாழ்ந்தேன். உனக்கும் ஸ்ரீ ராம தனத்தையே தருகிறேன். தியாகு, நீதான் எனக்கேற்ற பிள்ளை. உயிருள்ள மட்டும் ஸ்ரீராம மூர்த்தியை உபாசனைசெய்; அவனுக்கே வாழ்; அவனையே பாடு; அவனருள் உன்னை நடத்தட்டும். ஓம்! ஸ்ரீராம், ஜயராம், ராமஜயம்" என்று சொல்லி, ஸ்ரீராமபாதஞ் சேர்ந்தார்!

தந்தை யுரைகள் தியாகராஜரின் இராம பக்தியைச் சுடரோங்கத் தூண்டிவிட்டன. தியாகராஜர் சதா இராம நாமமும், இராம கானமுமாகவே உயிர்த்தார். நான்கு காசு சம்பாதித்து வயிறு வளர்ப்பதே வாழ்வென நினைத்த அண்ணன்மார்களுக்குத் தம்பியின் பக்தியும் பாட்டும் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றின. "தம்பி, நீ தண்டாகப்போய்ப் பாடிக்கொண்டிரு" என்று அவர்கள் வற்புறுத்தினர்கள். தியாகராஜர் தந்தையளித்த இராம விக்கிரகத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்றக் குடும்பச் சொத்துக்களைத் தமயன்மாருக்கே விட்டுவிட்டுத் தனியிடம் புகுந்தார். எளிய சிறிய மனையில், கூடத்தில் அழ

கான மேடையமைத்து அலங்கரித்து, ஸ்ரீ ராமனைக் கொலுவிருத்தி, வாழ்வெல்லாம் அவனுக்கே அர்ப்பணித்தார் பரமபக்தர். "கொலுமவரே கதா கோதண்டபாணி" என்ற தோடி ராக கீர்த்தனமும், "கொலுவையுன்னாடே" "உபசாரமுலனு சேகோனவையா" என்ற பைரவி கீர்த்தனங்களும் தியாகராஜரின் சகுணோபாசனையை விளக்கும். பள்ளியெழுச்சி, அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், சிரமபரிகாரம் செய்தல், இரவில் திருப்பள்ளி சேர்த்தல், தாலாட்டல், பலவகையான இராஜோபசாரங்களைச் செய்தல், திருவிழா எடுத்தல் முதலிய எல்லா வழிபாடுகளையும் பாமாலைகளாகச் செய்து தியாகராஜர், தமது மூச்சையெல்லாம் நித்திய கீதாஞ்சலி யாக்கினர். "மேலுகோ தயா நிதீ, மேலுகோவையா, ஆரகிம்பவே, சேதுலார, துளஸி பில்வ, விடமு சாயவே, ஜோஜோராம ஆனந்த கன, லாலிலாலேய லாலி" முதலிய கீர்த்தனங்கள் சுவாமிகளின் தாஸ்ய வாத்ஸல்ய பாவபக்திகளைத் தெளிவாக்குகின்றன. தியாகராஜர் மதுரபாவனையை மேற்கொள்ளவில்லை; இராமதாஸர் கொண்ட தாஸ பாவபக்தியையே சாதகமாகக் கொண்டார். "நாஜீவாதார" என்னும் அழகான கீர்த்தனத்தில், "எனது பார்வையின் ஒளி, என் மூக்கிற்கு வாசனை, எனது ஜபவர்ணத்தின் ரூபம், நான் பூசிக்கும் மலர், எல்லாம் நீயே! நீயே எனது ஜீவாதாரம்" என்றார்.

தியாகையரின் பக்தி மகிமையும், கான மகிமையும் நாடெங்கும் பரவியது. தியாகராஜர் சரியான உயரம், ஒல்லி, மாநிறம், கனியான முகப்பொலிவுடையவர். அவர் மார்பு அகன்றிருக்கும்; நெற்றி உயர்ந்திருக்கும்; கன்னங்கள் உப்பியிருக்கும்; குரல்வளை உரத்திருக்கும்; கண்கள் ஞானக்கனற் பிழம்பாயிருக்கும்! அவர் கழுத்தில் துளசி ஜபமாலை யணிவார்; இடுப்பில் ஜரிகை வேட்டியைப் பஞ்சகச்சம் வைத்துக் கட்டியிருப்பார்; மேலே ஓர் அங்கவஸ்திரம் போடுவார். பாடும் போது இது நழுவிவிடும். அவர் வலக்கையில் இரண்டு மோதிரங்கள் அணிந்திருப்பார்; எப்போதும் ஜபமாலை வைத்துக் கொண்டு ராமஜபம் செய்வார். உஞ்சவிருத்தி காலத்தில் தலையில் சிகப்புப் பட்டை, குஞ்சம் வைத்துக் கட்டுவார். இதற்குப் ப்ரபன்ன பாகையென்று பெயர். நெற்றியில் கோபிசந்தனம் இடுவார்; பாடும்போது இடக்கையில் சிப்பளாக் கட்டை வைத்திருப்பார். தம்பூரா பக்கத்திலேயே இருக்கும். பாட்டு வந்ததும் மீட்டிக்கொண்டு இராமசந்நிதியில் பரவசமாகப் பாடுவார். அவர், உடலுயிர்மன மெல்லாம் இராமார்ப்பணமே செய்தார். தெய்வ விரோதமான ஆடல் பாடல் பேச்சுக்களை அவர் வெறுத்தார். சீடர்களும் அவரிடம் பயபக்தியுடன் நடப்பார்கள். தெய்வாபசாரம் ஏதாவது செய்தால், இவர் பொறுக்கமாட்டார். ஒரு தரம் அவரது மாணவர்கள் ஒரு கலியாண வீட்டுக் கச்சேரிக்குப் போனார்கள். அங்கே ஒரு கணிகை ஜாவளி பாடி யாடினாள். அதைக் கேட்டுவந்து மாணவர், திண்ணையில் அமர்ந்து பாடிக்கொண்டிருந்தனர். தியாகையருக்குப் பெருங்கோபம் வந்துவிட்டது: "ஸ்ரீ இராமனைப் பாடும் இந்தப் பக்தவிலாசத்தில், வேசையின் ஜாவளியா பாடுவது? இப்படிப்பட்ட அபராதிகள் ஸ்ரீராம க்ரகத்தில் இருக்கக் கூடாது; போங்கள்" என்று துரத்திவிட்டார். பிறகு அவரது

தருமபத்தினி கணவனின் முன்கோபத்தை ஆற்றி, "தெரியாது செய்துவிட்டார்கள்; பிழையை மன்னிக்க வேண்டும்; ரோஜா என்முல் முள்ளும் இருக்கும்; முள்ளைக் கிள்ளி யெறிந்துதான் பூவைக் கொள்ளவேண்டும்; மனிதர் என்முல் குற்றமுங் குணமும் இருக்கும். இதமாகச் சொன்னல் யாரும் கேட்பார்கள்" என்று அமைதியாகச் சொல்லவே, தியாகராஜர் சினந்தணிந்து மனைவியை மெச்சி, சீடர்களை மீண்டும் புன்னகையுடன் வரவேற்று, "சாந்தமுலேக சௌக்யமுலேது" என்ற சாமாராகக் கிருதியைப் பாடினர். பெரிய வேதாந்தியானலும் யோகசித்தனலும், கல்விமானலும் கோபம் பொல்லாது; சாந்தமின்றிச் சௌக்கியமில்லை என்பது அவர் கருத்து. "அசாந்தஸ்ய குதஸ்ஸுகம்?" (சாந்தமற்றோருக்குச் சுகமேது?) என்ற கீதையின் கருத்தமைந்தது அக் கீர்த்தனம்.

தியாகராஜர் காலை நான்கு மணிக்கே எழுந்து, திருப்பள்ளி யெழுச்சி பாடுவார்; காவேரியில் குளித்து வந்து நித்திய கர்மானுஷ்டானங்களைக் கருத்துடன் செய்வார்; பிறகு ஸ்ரீ ராமமூர்த்தியைப் பாமாலையாலும் பூமாலையாலும் வழிபட்டுப் பால் நிவேதித்துப் பருகுவார். வாரம் இரண்டொருமுறை பக்க வாத்தியங்களுடன் உருக்கமாகப் பாடிக்கொண்டு உஞ்ச விருத்திக்குச் செல்வார்; அதில் வந்ததைக்கொண்டே மாணவரையும் குடும்பத்தையும் அவர் காப்பாற்றினர். யாராவது மலர் கனிகள் அளித்தால், இராமார்ப்பணம் செய்து, ஒரு பாட்டுடன் நிவேதித்தே அவர் பயன்படுத்துவது வழக்கம். அவர் மாணவரிடம் எதுவும் பெற்றுக்கொண்டதில்லை. கச்சேரிகள் செய்து பணத்திற்கும் பாடியதில்லை. அவர் ஏகாதசி விரதம் ஒழுங்காகக் காப்பார். துவாதசியன்று விசேஷமான திருவாராதனம் நடத்தித் துளசித் தீர்த்தம் உட்கொண்டு பிறகே பாரணை செய்வார். அன்று துளசி பூஜைசெய்து, "துளசி, ஜகத்ஜனனி, அம்மராவம்ம" முதலிய துளசி மகாத்மிய கீர்த்தனங்களைப் பாடி வணங்குவார். பகல் 12 மணிக்கு நிவேதனம்செய்து உண்டபிறகு, சிறிது சிரம பரிகாரம் செய்துகொண்டு, சிஷ்யர்களுக்குத் தமது கீர்த்தனங்களை முறையாகச் சொல்லிக் கொடுப்பார். அவரவர் பக்குவத்திற் கேற்றபடியே பாடம் நடத்துவார். பண்டிதர்களைப்போல் அவர் பாடம் சொல்லவில்லை. பரம பாகவதர்போல் மாணவருக்குப் பக்தி பரவச முண்டாகவும், தமது பக்தி கானங்களை அவர்கள் நாடெங்கும் பாடிப் பகவத் கைங்கரியம் செய்யவுமே தியாகராஜர் சிஷ்யர்களைப் பழக்கினர். தஞ்சாவூர் இராமா ராவ் என்னும் அரிய மாணவர் ஒருவரே குருவிடம் தாராளமாகப் பழகி, "அது பாடுங்கள், இப்படிப் பாடுங்கள்" என்று நயமாக வேலை வாங்குவார். மற்றச் சீடர்களெல்லாரும் பயபக்தியுடன் இருப்பார்கள். அவர்களுள் முதன்மையானவர்கள், திருவொற்றியூர் வீணை குப்பையர், திருவையாறு ஐயா பாகவதர், வாலாஜாப்பேட்டை வேங்கடரமண பாகவதர், மானம்பூச்சாவடி வேங்கட சுப்பையர், தில்லைஸ்தானம் இராமையங்கார், லால்குடி இராமையர், உமையாள்புரம் கிருஷ்ண பாகவதர், சுந்தரையர், அமிர்தலிங்கம் பிள்ளை, நேமம் சுப்பராமையா, நங்கவரம் நீலகண்டையா, ஸொஜ்ஜிரி சீதாராமையா, கன்னையா பாகவதர், வேங்கடாசலபதி பாகவதர், கணேசப்பகாரு, கும்ப-

கோணம் ஆராவமுதையங்கார், வாலாஜாப்பேட்டை பொட்டி ஜோசியர் முதலியோராவார். பின்னிருவரும், ஜோசியம் கற்றனர். மற்றவர்கள் முறையாக ஸங்கீதமும் ஸாகித்தியமும் கற்றனர். தியாகராஜர் இவ்வாறு சங்கீத குருகுலமும் கானர்ச்சனமும் நடத்திவந்தார். மாலையில் சந்தி ஜபமும் இராம ஜபமும் ஆனதும், சுவாமிகள் சிஷ்யர்களுடன் மெய்ம்மறந்து ஸ்ரீ ராம பஜனை செய்வார். ஸ்ரீராமநவமி, கிருஷ்ண ஜயந்தி, ஏகாதசி முதலிய புண்ணிய நாட்களில் பஜனையும் தீபப்பிரதக்ஷிணமும் பலமாயிருக்கும். ஸப்தஸ்தான உத்ஸவ காலங்களில் சுவாமிகள், கோயிலிலும் சுவாமி புறப்பாட்டிலும் பரவசமாகப் பஜனை நடத்துவார். தமது பாடலேயன்றி, இராமதாஸ், புரந்தரதாஸ், ஜயதேவர் முதலிய மகான்களின் பாடல்களையும் உருகிப் பாடுவார். அவர் முதலில் பிடிவாதமாக இராமபக்தியே செய்து இதர தெய்வங்களைப் பாராதிருந்தார். "அதிலாவண்ய இராமா, உன் மனசு, உன் சொகுசு வேறுதான்! நீ யிருக்கும்போது தாமஸ தெய்வங்களை நான் தொழப்போமோ?" என்றும் பாடினர். அவர் பத்தினி சிவ பக்தை; தருமசம்வர்த்தினி உபாசகி. அரியும் சிவனும் ஒன்றென்று அவள் நாயகனிடம் சொல்லுவதுண்டு. இவர் தருமசம்வர்த்தினி யம்பாள் பவனியைக்கூடப் பார்ப்பதில்லை. தமது தங்க இராமனையே தியானிப்பார். கனவில் அவனுருவைக் காண்பார். ஒரு சமயம் இக்கனவுக் காட்சி வரவில்லை. அவர் உடம்பும் நோயால் படுத்தது. அச்சமயமே ஈசுவரன் பல வடிவாக வந்து பக்தர்களைக் காக்கிறான் என்பதை அறிந்தார்; பிறகு சிவ பரமாகவும், சக்தி பரமாகவும் பாடத் தொடங்கினர். "கருணஜூடெ வம்மா" (கருணை பாரம்மா) என்ற தோடி ராகக் கீர்த்தனத்தில், "சந்திர கலாதரன் மனவியே, பஞ்சநத நகர நாயகியே, உன் பக்தி வரந்தா; என்னைக் கைவிடாது கா" என்று பாடுகிறார். ஸாவேரியிலுள்ள "கன்ன தல்லிநீவு" என்ற பாட்டிலும், திரிபுரசுந்தரியிடம் பக்தி வரம் வேண்டுகிறார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளியுபாசனை சித்திபெற்று, இராமன் கண்ணன் சிவன் பிரம்மம் ஆகிய எல்லாத் தெய்வ பாவனைகளிலும் சித்தி பெற்றதுபோலவே, தியாகராஜரும் இராம பக்தியில் சித்தி பெற்று, மற்றெல்லாத் தெய்வ வடிவங்களையும் சம பக்தியுடன் பாடி வணங்கினர். "சம்போ மஹாதேவ" என்று பந்துவராளி கீர்த்தனமும் "சிவசிவசிவ, சிவேபாஹிமாம்" என்ற கல்யாணி கீர்த்தனமும் தியாகராஜரின் சிவபக்தியை விளக்கும். தெய்வ ரசம் கண்டால் சமரசம் உண்டாகும். வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களுக்கேற்ற பாடல்களும் பல உண்டு.

அந்தக் கால நிலை படுமோசமாயிருந்தது. சுதேசி இராஜ்யங்கள் ஒவ்வொன்றாக அன்னியர் கைவசம் வந்தன. ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் பெருஞ் சண்டை நடந்தது. அதன் பயனாக இருபுறத்திலும் சேர்ந்த இந்தியர் வருந்தினர். நாடெங்கும் கொள்ளையும் போரும் பஞ்சமும் சூழ்ந்தன. நான்கு மைசூர்க் கலகங்கள் நடந்ததில், பிரெஞ்சுக்காரர் கை தளர்ந்து, ஆங்கிலேயர் ஆட்சி வலுத்தது. தஞ்சையில் நாயக்கர் ஆட்சி ஒய்ந்து, மராட்டியர் ஆட்சி வந்தது. ஸ்ரீரங்கபட்டணத்தில் திப்பு சுல்தான் வீழ்ந்த ஆண்டிலேயே தஞ்சையும் ஆங்கி

லேயர் கைக்கு வந்தது. மராட்டியரை வென்று, நவாபு கொடி போட்டான். பிறகு ஐதராலி வந்து தஞ்சை ஜில்லாவைப் படு கொள்ளை யடித்தான். அதன்பிறகு, சரபோஜி மகாராஜா அரி யணை வகித்தான். 1789 ஆம் ஆண்டில் அவனும் கும்பினிக் காரரிடம் அரசைத் தந்து ஜீவனும்சம் வாங்கிக்கொண்டு சுகமா கக் காலந் தள்ளினன். சரபோஜி 1832-ல் இறந்தான். பிறகு சிவாஜி அரசனனன். தியாகராஜர் காலத்தில் இந்த இரண்டு மன்னரே பேருக்கு ஆண்டனர் தஞ்சையை. அதிகாரமெல் லாம் ஆங்கிலேயரிட மிருந்தது. பிடிவீலைப் பஞ்சம் நாட்டைப் பற்றிக்கொண்டது. கலையைத் தேடுவாரில்லை. மன்னர் ஆத ரவும் கிடையாது. பொது ஜனங்களுக்கும் வயிற்றுப்பாடே பெரும்பாடா யிருந்தது. பக்தி சிரத்தை, விசுவாசம், தெய்வ நம்பிக்கை, ஆராதனை, வேதாப்யாசம், கான வித்தை எல்லாம் ஆதரவற்றன. சங்கீதத்தின் தாயகமான தஞ்சையும் மைசூரும் குழப்பத்தில் ஆழ்ந்தன. வித்துவான்களெல்லாம் ஆதரவில்லா மல், வேறு சமஸ்தானங்களைத் தேடிச் சென்றனர். அக்காலம் இராமனாதபுரம், சிவகங்கை, திருவனந்தபுரம் ஆகிய மூன்றுமே வித்துவான்களைப் போற்றின. திருவாங்கூரில் மார்த்தாண்ட வர்மன் தன் அரசைப் பத்மநாபருக்கே அர்ப்பணம் செய்தான். அவனுக்குப் பிறகு வந்த இராமவர்மா, அஸ்வதித் திருநாள், அவிட்டம் திருநாள், கௌரிலக்ஷ்மி பாய் முதலியோர் சிறந்த ரசிகர்கள். இவர்கள், வித்துவான்களையும் புலவர்களையும் ஆத ரித்தார்கள். இவர்களுக்குப் பிறகு வந்த சுவாதித் திருநாளோ, (1829 — 1847) தலை சிறந்த சங்கீத ஸாகித்திய வித்துவான். இவர் வித்துவான்களுக்கு ஏராளமான சன்மானம் தந்தார். தியாகராஜர் புகழையும் கேட்டு மகிழ்ந்து, அவர் இசைச் செல் வத்தைப் பல வித்துவான்கள் பாடச் செவிமடுத்தார்.

தியாகராஜரின் சூழ்நிலை, அவருடைய பக்தி மார்க்கத்திற்கு நேர் விரோதமா யிருந்தது. எப்படியாவது பணம் சம்பாதித்து வயிறு நிரப்புவதே பெரும்பாலாரின் முயற்சி. ஈசுவர நம்பிக்கை யில்லை. கற்றறிந்த வித்துவான்களும் செல்வரைப் புகழ்ந்து பாடிப் பிழைக்கத் தொடங்கினர். காலநிலையைத் தியாகராஜர் தெளிவாயறிந்து கலிநருலகு, தோலினேசேலின முதலிய கீர்த்த னங்களில் முறையிட்டிருக்கிறார். தியாகராஜரை அந்தச் சுற்றம் அறியவில்லை. கேலியும், கிண்டலும், வசையும், அலட்சியமுங் கொஞ்சமன்று. பொருமைப் புயல் ஆத்திரக் கோடை யிடி யுடன் வீசி யடித்தது. இப்புயல் முத்தண்ணுக்களிட மிருந்தே கிளம்பி ஊரெல்லாம் பரவியது. "இவனென்ன மகா வித்து வானே? சும்மா இராமா, இராமா" என்று அபயக்குரல் வைக் கிறான். இராமன் பெயரால் பக்தி நடித்து ஊரை ஏமாற்றுகி றான். சங்கீதத்தில் இவனுக்கென்ன தெரியும்? ஏதோ பழைய மெட்டுக்களில் வார்த்தையைத் திணித்துக் குரலைக் கொண்டு வித்தை காட்டுகிறான். தாள மேளங்களைக் காட்டி, மகா பக் தன்போல் நடித்து, ஊரை ஏமாற்றுகிறான். ஏதாவது வேலை வெட்டி பார்க்காமல் சும்மா இராமக் கூப்பாடு போடுகிறான்". இந்தமாதிரி யெல்லாம் சுற்றிலும் புஸ்வாணங்கள் பொறுமைத் தீப்பற்றிக் கிளம்பின. தியாகராஜரின் செவிக்கு இவை எட்டும். அவர் காதில் படும்படியே பகைவர் கிண்டல் செய்வார்கள்.

சாது பதிற் பேசாமல் ஸ்ரீ இராமன் பாதங்களைப் பற்றி, "அப்பனே, என்னை ஏன் இந்த நாத்திகர்களிடையே வைத்தாய்? ஹரி பக்தி யில்லாதவர்களிடையே நான் இருப்பதும் உன் சம்மதமோ? ஸ்ரீ ராமா, எனக்கொரு வழிகாட்டு. சாந்தமாக உன்னையே துதித்துக்கொண்டிருக்கும் பாக்கியத்தைத் தா. தாயாதிகள் போரும் உலகோர் பொருமையும் என் அமைதியைக் கெடுக்காமல் அருள்" என்று முறையிடுவார்.

தியாகராஜர் கீர்த்தனங்கள் எத்தனையோ உள்ளங்களுக்கு ஆறுதலளித்தன. பொருமைக்காரர்களுக்கு மட்டும் அவர் புகழும் இசையும் சங்கட மளித்தன. தியாகராஜரின் முத்தண்ண ஜப்யேசனுக்கு, "தம்பிக்கு பைத்தியம் பிடித்து விடாது குடும்பத்தைக் கவனிக்காமல் இந்த இராம விக்கிரகத்தைக் கட்டி அழுகிறான்" என்ற எரிச்சல் பற்றிக்கொண்டது. அத்துடன் நல்லோர் தம்பியைப் புகழ்வதைக் கேட்டுப் பொறுமையும் சேர்ந்து மனம் அக்னிஜ்வாலையானது. "அட பாட்டுத்தான் பாடுகிறானே, நாலு சபைகளிற் பாடி குடும்பத்திற்கு வரும்படி சம்பாதித்தாலும் பரவாயில்லை யென்னலாம். அதேது? சோற்றுக்குத் தாளம் போடுகிறான். உஞ்சவிருத்தி தப்பினால், வழியில்லை; சிஷ்யக் கூட்டத்திடமும் ஒன்றும் வாங்குவதில்லை; பணக்கருத்தே யில்லை; வீட்டுக் கருத்தில்லை; எப்போதும் இராமக் கூப்பாடுதான்!" என்று முத்தண்ண, தியாகராஜர் பாட்டு எழுதி வைத்திருந்த புத்தகத்தையும் தீ வைத்துக் கொளுத்தி விட்டான். ஏராளமான கீர்த்தனங்கள் அவனால் மறைந்தன.

தியாகராஜர் உள்ளம் இந்தக் கொடுமையால் கொதித்துக் கொண்டிருந்தபோது, மற்றொரு பெருங்கொடுமை நடந்தது. அண்ணன்மார் இருவரும், தம்பியின் பைத்திய அமளிக்கு காரணம் அந்த இராமவிக்கிரகமே என்றெண்ணி அமாவாசை நிசியில் தியாகராஜர் வீட்டிற் புகுந்து இராம விக்கிரகத்தை மெல்லத் திருடிக்கொண்டு போய்க் காவேரி வெள்ளத்திற் போட்டு விட்டு, "இனி இவன் இராமப் பித்தம் தெளியும். குடும்பக் கருத்துடன் வாழ்வான்" என்று மகிழ்ந்தனர்.

மறுநாட் காலை திருப்பள்ளியெழுச்சி காண வந்த தியாகராஜர் திகைத்து நின்றார்! ஸ்ரீ ராம விக்கிரகத்தைக் காணவில்லை! அண்ணன்மார் கொடுமையை உடனே உணர்ந்தார். உலகில் சாதுக்களுக்கு துஷ்டர்களால் வரும் துயர்களை நினைத்து விம்மினார். தமயன்மார்களை ஒன்றும் கேட்கவில்லை. கேட்டாலும் "போடா பைத்தியம்" என்பார்கள். தம் குறைகளை ஸ்ரீ ராமனிடமே முறையிட்டார் பரமபாகவதர். அந்த முறையீடு அற்புதமான கீர்த்தனங்களாக எழுந்து, இன்றைக்கும் நம் உள்ளத்தை உருக்குகிறது! "அநியாயமு ஸேயகுரா" என்ற காபி ராகப் பாட்டில் "ஹே ராமா, நீ எனக்கு அநியாயம் செய்யலாமா? அரசே, நான் உன் அடியான். எத்தனையோ பிழை செய்தவர்களை யெல்லாம் நீ காப்பாற்றினாய்; ஜடபரதர் ஆற்று வெள்ளங்கொண்ட மான் குட்டியைக் காக்கவில்லையா? கடலில் மூழ்கும் மந்திரமலையை நீ ஆமையாகவந்து தாங்கவில்லையா? தனக்குத் தீமையே செய்த துரியோதனனையும், சித்திரரதன் கட்டிய கட்டிலிருந்து விடுவிக்கத் தருமபுத்திரர் தம்பியை ஏவ

வில்லையா? ஹே ராமா, என் அண்ணன்மார் தொல்லையிலிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டிய நீயும் அநியாயம் செய்யலாமா? என்னைக் காப்பது உன் பாரமே யன்றே?'' என்று முறையிட்டார். நபோமணி ராகத்தில் ''நாயேட வஞ்சன ஸேயகுரா'' என்ற பாட்டைப் பாடி, ''இராமா, நான் மாயத்தில் மயங்கி, பெண்ணே, பொன்னே என்று திரியும் உலகாயதர்களுடன் சேர்ந்து மச்சரனுக வாழவில்லை; மற்றவர்களைப்போல் வெளிப் பகட்டுக்காக பக்தி நடிக்கவில்லை; உன்னை அந்தரங்க சுத்தியுடன் நம்பிய என்னை வஞ்சிக்காதே; தாயாதிகளின் போர் தாங்காமல், உன்பால் முறையிடுகிறேன். என்னைக் காப்பாற்றப்பா!'' என்று கதறினர். பைரவத்தில் மரியாத காதையா என்னும் பாட்டில், ''சரிசமனை சகோதரர் முன்னே என்னை இகழ்ச்சி செய்தல் உனக்குச் சரியில்லை; ஐயா, என்னைக் காப்பாற்று!'' என்று முறையிட்டார். ராநிது ராது என்ற பாடலில் தமது ஊழ்வினையை நொந்துகொண்டார். தோலினே ஜேஸின பூஜாபலமு என்ற பாட்டில், ''ஹரிதாசர்கள் இல்லாத இந்த நாத்திகபுரியில் என்னைப்போட்டு ஒரு வழியும் காட்டாமல் இருக்கிறாயே. இது நான் பூர்வஜன்மத்திற் செய்த வினைப் பயனு?'' என்று வருந்தினர்.

ஸ்ரீ ராம மூர்த்தியைக் காணுமல், பூசிக்காமல் ஒரு நொடியும் இருக்க மூடியவில்லை; உயிர் துடிக்கிறது; அன்னபானமில்லாமல், உறக்கமில்லாமல், இராமசைதன்யர் இராம விரகத்தால் அலறினர்; முடிவில் அண்ணன்மார் தன்னுயிரான இராம விக்கிரகத்தை ஆற்றிலேதான் எறிந்திருக்கிறார்கள் என்பதை ஊகித்தார்; காவேரிக்கரை யோரமெல்லாம் இராம மோகங் கொண்டு முறையிட்டலைந்தார். அந்த முறையீடுகள் கருணரசமும் பக்திரசமும் சேர்ந்த அற்புதமான நாதச் சித்திரங்களாக உலகுள்ளமட்டும் விளங்கும்.

தமயன்மார்களோ, ''கத்திக்கத்தி ஓழியட்டும், பைத்தியம்'' என்று ஏளனம் செய்துகொண்டிருந்தார்கள். இச்சம்பவம் நடந்து ஓராண்டு பறந்துபோனது. நாதனைப் பிரிந்த பத்தினி போலத் தியாகராஜரும் துன்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தார். பக்தன் முறைகளைப் பரமாத்மன் கேளாமலா இருப்பான்?

ஒருநாள் தியாகராஜர் நீண்டநேரம் பஜனை செய்து ஸ்ரீராம மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே உறங்கினர். கனவில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தோன்றி, ''அன்பா, கவலைப்படாதே! என் விக்கிரகம் ஆற்றுமணலில் புதைந்திருக்கிறது. தோண்டியெடுத்துவா'' என்று சொல்லி அந்த இடத்தையும் குறிப்பிட்டு மறைந்தார். தியாகராஜர் உடனே ஆனந்த பரவசராகி, ஓடிச் சென்று, குறித்த இடத்தில் மணலைத் தோண்டினர். முன்னிலும் அதிகக் காந்தியுடன் பளபளவென்று மிளிரும் தங்க விக்கிரகம் கிடைத்தது! அதை மிகவும் அன்பார்வத்துடன் மார்போடணைத்து முத்தமிட்டு, உச்சிமேல் வைத்துக் கொண்டாடி, ''ராராமா இண்டிதாக'' என்ற அசாவேரிக் கீர்த்தனம் பாடி, வீட்டிற்குக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்து, சோடசோபசாரமும் செய்வித்து, மறுநாள் மிகச் சிறப்பாக ஊர்வலம் நடத்தினர். அப்போது அரிய பெரிய இசைமலர்கள் அவர் வாக்கிற் பூத்தன; வஸந்தாவில் ''எட்ல தோரிகிதிவோ'' (எப்படித்தான் நீ மீண்டும்

கிடைத்தாயோ), ஆகிரியில் "சல்லரே ராமசந்துருனி பை பூல" (ஸ்ரீராமச்சந்திரன்மேல் மலர் தூவுங்கள்), ஹுஸேனியில் "ரகுவிரா ரணதீரா", எதுகுல காம்போதியில் ஸ்ரீராம ஜய ராம ச்ருங்கார ராமயனி" முதலிய கீர்த்தனங்கள் அன்று பக்தகோடி களைப் பரவசப்படுத்தின.

ஊர்வலம் அமிர்த வர்ஷமான கானத்துடன் திரும்பி வருகிறது. பக்தர்கள் மலர் தூவி வணங்குகிறார்கள். அப்போது தியாகராஜர், "ஸ்ரீராமா, நீ மீண்டும் கிடைத்ததற்காக நன்றி. என் மனம் குளிர்ந்தது! ஆனல், என்னுயிரான உன்னை ஆற்றில் எறிந்து, நாளும் என்னை இடும்பை செய்யும் என் சகோதரர் களிடமும் தாயாதிகளிடமும் சற்றே கருணைவைத்து, அவர் களுக்கும் உன் அன்பு பெருகச் செய்யமாட்டாயா, இராமா?" என்று வேண்டினர். அந்த வேண்டுகோள் உடனே பலித்தது. ஜப்யேசனும் ராமநாதனும் ஓடிவந்து, தம்பி காலில் விழுந்து, "தியாகு, நீ தெய்வப்பிறவி. நாங்கள் தாமஸகுணத்தால் உன்னை அறியாமற் செய்த கொடுமைகளை நீயே பொறுத்தாய். பரம சாதுவாகிய உன்னை என்ன பாடு படுத்திஞேம்! எங்களை நீ மன் னித்து, உன் பக்த கோடிகளுடன் சேர்த்து உபதேசம் செய்ய வேண்டும்" என்று பணிந்தனர். அவர்கள் மனைவியரும் ஸ்ரீராம னுக்கு ஆரதி எடுத்துச் சேவித்தனர். தியாகராஜர் அனைவரையும் மகிழ்ச்சியுடன் ஏற்று, எல்லாம் ஸ்ரீராமன்செயல் என்று மகிழ்ந் தார். அன்றுமுதல் அண்ணன்மாரும் பஜனையில் ஈடுபட்டனர்.

அப்பரைப் போலவே தியாகராஜரும், 'நாமார்க்கும் குடி யல்லோம்; கடவுளுக்கே ஆளாவோம்' என்னுங்கொள்கை யுடையவர். அவர் கீர்த்தனங்கள் முழுதும், மாசற்ற தெய்வ மாலைகளே! அதில் நரத்துதி வாடையே இல்லை. சிற்றின்ப வாடையும் கிடையாது. சிற்றின்ப வர்ணனைகள் வரக்கூடிய "நௌகா சரித்திர"த்திற் கூட, பக்திபரவசமே காண்கிறோம்! தியாகராஜர் பணத்தை மதித்ததில்லை; பணத்திற்காகப் பாடியது மில்லை; ஸ்ரீ ராமனுக்கே தம் கலையை அவர் அர்ப்பணித்தார். அவர் புகழ் நாடெங்கும் பரவியது. திருவாங்கூர், மைசூர், சிவகங்கை, இராமனுதபுரம், எட்டையபுரம் சமஸ்தானங்களி லெல்லாம் அவர் பாடல்கள் முழங்கின. இந்த ஸமஸ்தானுதி பதிகள் அவரை அழைத்துச் சன்மானம் செய்ய ஆவலாயிருந் தனர். தஞ்சாவூரைப் பற்றிக் கேட்கவேண்டுமா? சரபோஜி ராஜர் கலாநிபுணர், கலாபிமானி, புலவர் கற்பகம். தியாகராஜ ரின் கீர்த்தனங்கள் அவர் சபையில் தினந்தோறும் முழங்கின! எத்தனையோ வித்துவான்கள் அவரைத் துதித்துப் பாடினர். சரபோஜிக்கு ஒரு பேராசை எழுந்தது. நாடெங்கும் புகழ் பெற்ற தியாகராஜர் வாக்கினல் தம்மைப் பாடினல் தமது புகழ் என்றென்றும் இருக்கும். அரசைவிடக் கவிதைக்கு நிலைப்பதி கம் என்று எண்ணங்கொண்டார். உடனே தியாகராஜரை அறிந்த ஒரு ராயரை அழைத்தார். பெருந்தொகை தந்து, காதில் ஏதோ ஓதினர். "காரியத்தை முடித்துவாரும். பாகவதரைக் கையோ டழைத்து வாரும்," என்றனுப்பினர்.

ராயர்வாள் வந்து வணங்கிச் சமயம்பார்த்து, தியாகராஜர் முன்னே பணமூட்டையை வைத்தார். அதைப் பக்தர் தொடக் கூட இல்லை. 'வந்த செய்தியென்ன' என்று மட்டும் கேட்டார்.

ராயர்: சரபோஜி மாஹாராஜா கொடையிலே கர்ணன்; கலையிலே புதன்! பாட்டிலே துகாராம். அவர் தங்களுக்குப் பத்து வேலி நிலமும், தங்கத்தேரும் தருவார்.....

தியாக: எனக்குத் தருவானேன்?

ராயர்: தங்கள் பாட்டுங் கலையும் பக்தியும் ஒழுக்கமும் அவரை அப்படி வசப்படுத்திவிட்டன! அரசருக்கு ஒரு விருப்பம். அதைப் பூர்த்தி பண்ணினால், மேற்சொன்ன பரிசும் இங்கே பெரிய மாளிகையும் தங்களுக்கு இன்றே கிடைக்கும்!

தியாக: [பேச்சில்லை] ஸ்ரீராமா!

ராயர்: தங்கள் திருவாக்கினால் சரபோஜி மகாராஜாமீது இரண்டொரு கீர்த்தனம் பாடி, இராஜசபையில் இசைத்தாலே போதும். அவ்வளவுதான், இராஜா கனகாபிஷேகம் செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார்.

தியாக: ஐயா, என்ன சொன்னீர்? இராமனைப் பாடும் வாக்கால், நரனைப் பாடுவதா?

ராயர்: நரனா? அரசனல்லவா?

தியாக: இந்தக்காலம் அரசர் வாழ்வு தெரிந்ததுதானே? கொலையும் கொள்ளையும் அக்கிரமங்களும் செய்து, பொருள் குவித்து இயக்கும் மனிதர்களைப் பாடவா ஸ்ரீராமன் எனக்கு வாக்கை அளித்தான்?

ராயர்: பேசாமல் அரசனைப் பாடுங்கள். தங்கள் வறுமை தீரும். பொன்குவியும், நவநிதியும் பெருகும். சுகமாயிருக்கலாம்.

தியாக: அப்பனே, எனக்குப் பொன்வேண்டுமானால் தங்கராமனை உருக்கிச் செலவிட்டிருப்பேனே! பொன் எனக்கு மண்ணைத் தோன்றுகிறதே! நீ சொல்லும் நிதி சுகமில்லையே. கருணை நிதியான இராமன் சந்நிதியே சுகமெனக் காண்கிறேன்! மனமே, நீ சொல்லு உண்மையாக. அரசனுடைய நிதி சுகமா, இராமஸந்நிதி சேவை சுகமா? பாலும் தயிரும் வெண்ணெயுமாகச் சாப்பிடும் செல்வர் வாழ்க்கை பெரிதா? தாசரதியான இராமனின் தியானமும் பஜனையுந் தரும் அமிர்தரசத்தை உண்ணும் பேரின்பம் பெரிதா? தெள்ளத்தெளிந்த ஞான கங்கையில் நீராடல் சுகமா? அல்லது துர்விஷயக் கேணியில் விழுதல் சுகமா? மமதை பிடித்த நரஸ்துதி சுகமா? என்னைக் காக்கும் அருட் பெருமானை இறைவனைப் பாடுதல் சுகமா? சொல், மனமே!

கல்யாணியில் "நிதி சால சுகமா" என்று இப்பொருள் கொண்ட கீர்த்தனத்தை தியாகராஜர் ஆவேசமாகப் பாடினார். வந்த ஆள் மறுபேச்சில்லாமல் நமஸ்காரம் செய்து சென்று, அரசனிடம் நடந்ததைச் சொன்னார். அரசனுக்குச் சேருக்கும் சினமும் பற்றிக்கொண்டன "நான் தஞ்சை அரசன் என் மேல் பாடக் கட்டளையிடுவது. இந்த உபாதானச் செம்பு அதை மறுத்துப் பாடுவதா? என் ஆட்சியிலிருக்கும் இந்த மனிதன் என்னை அலட்சியம் செய்வதா?" என்று சீறியெழுந்து, "எப்படியாவது தியாகராஜரை நம்முன் அழைத்து வாருங்கள்" என்று சில ஊழியர்களை அனுப்பினான். சேவகர்கள் புறப்பட்டதுமே அரசனுக்கு வயிற்றுவலி பொறுக்க முடியாமல்

வருத்தியது. மருந்து மாயம் ஒன்றிலும் அது தீரவில்லை. தியாகராஜருக்குச் செய்த குற்றமே இப்படி வந்ததென்று ஓர் உணர்ச்சி பிறந்தது. உடனே பிழை வருந்தி, தானே திருவையாறு சென்று, தியாகராஜரை வணங்கித் தனது நோயைத் தீர்த்தருள வேண்டினான் மன்னன். தியாகையர், ஸ்ரீ ராமனையே தியானித்து, "அப்பனே, எல்லாம் நின்செயல். இந்த அரசன் நோயைத் தீர்க்கவேண்டும்" என்று வேண்டினார். உடனே வயிற்றுவலி நின்றது. மன்னன், மகிழ்ச்சியும் மரியாதையும் பயபக்தியும் மிகுந்து, தியாகராஜரை வணங்கி இராமப் பிரசாதம் பெற்று அன்று பஜனையில் தியாக கீதம் கேட்டுப் பூரித்து ஊர் வந்துசேர்ந்தான். அன்றுமுதல் தியாகராஜரை அவசர புருஷராகவே அரசன் கருதினான். தியாகராஜர், தியாகத்திற்கு ராஜரே! அவர் தமது இசைச் செல்வத்தை யாருக்கும் விற்கவில்லை. எல்லாருக்கும் கொள்ளுமட்டும் அள்ளி யள்ளித் தந்தார்! போகராஜரான மன்னர் இந்தத் தியாக ராஜரை எவ்விதத்திலும் மயக்கமுடியவில்லை.

தஞ்சை மன்னன் அடிக்கடி மறைவாக வந்து தியாகராஜ ரின் பக்தி கானத்தைக் கேட்பதுண்டு. எப்படியாவது தியாகை யர் வீட்டை அழகாகக் கட்டித்தரவேண்டும் என்று அவன் நினைத்தான்; பலிக்கவில்லை. ஒருநாள் தியாகையர் வீட்டுப் பின்புறம் ஒரு கொட்டகை போட்டால் மாணவருக்குச் சங் கீதம் சொல்லித்தரச் சௌகரியமாக இருக்கும் என்று யாரு டனோ பேசிக்கொண்டிருந்தார். இந்தச் செய்தி எப்படியோ அரசனுக்கு எட்டியது. வீட்டைப் பெரிதாகக் கட்டலா மென்று இரகசியமாக அவன் ஏற்பாடு செய்தான். தியாகை யர் அப்போது திருவாரூர் சென்றிருந்தார். மூன்று நாளைக்குப் பிறகு வந்து பார்த்தார். தாம் நினைத்ததுபோன்று கொட்டகை அழகாக அமைந்திருந்தது. அன்றுதான் அரசனும் வீட்டை அமைப்பதாக ஆள் அனுப்பினான். தியாகையர் நினைத்த கொட்டகை பூர்த்தியாய்விட்டது என்பதைக்கண்டு ஆள் ஏமாந்து சென்றான். அக் கொட்டகையைப் போட்டவர் செல்வ ரன்று. ஐயம்பேட்டையிலிருந்து இசைப் பயிற்சிக்காக வந்து, வணக்கமாக அமரும் வேங்கடரமண பாகவதரே! தக்க ஆட் களை அழைத்துவந்து, கிடுகும் மூங்கிலும் கொண்டு ஒரேநா ளில் தாமும் உடனிருந்து கொட்டகையை அமைத்தார். கூலி பத்தினி கூலி தந்தாள். பக்தர் மறுத்துவிட்டார். இந்த அன் பருக்குத் தியாகராஜர் இராமதாரக மந்திரத்தை உபதேசித்துத் தமது கீர்த்தனங்களையும் ஏராளமாகச் சொல்லித்தந்தார்.

திருவாங்கூர் மன்னரும், பேரிசைச் செல்வருமான சுவா தித்திருநாள் மன்னர் எப்படியாவது தியாகராஜரை அழைத்து வரச் சொல்லி, வடிவேலு என்ற புகழ்பெற்ற வயலின் வித்து வானை அனுப்பினர். திவான் சுப்பராவ் இசைப்புலவர்; அவ ரும் ஓலை தந்தார். வடிவேலு வெகுநாள் பிரயாணம் செய்து திருவையாறு சேர்ந்து சமயம்பார்த்துக் காத்திருந்து, தியாகரா யரைக் கண்டு வணங்கி மெல்லத் தன் கருத்தை வெளியிட்டார்.

வடிவேலு: திருவாங்கூர் புண்ணியநாடு. அரசர் சுவா தித்திருநாள் நீதிமன்னர். பெரிய சங்கீத சாகித்திய வித்து வான். அவரைச் சுற்றிக் கோவிந்தமாரார், சிவானந்தம், சின்

னையா, பொன்னையா, ரவிவர்மன், கூரோப்தி, மேருசாமி, பரமேச்வர பாகவதர் முதலிய மகாவித்துவான்கள் சங்கீத விருந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். அடியேனும் அங்கே 'லயலின்' வாசிக்கிறேன். திவான் சுப்பராவ், இராணி ருக்மணி பாய் எல்லாரும் நல்ல ரசிகர்கள்.

தியாக: சரி, சந்தோஷம்!

வடிவேலு: அவர்கள் அத்துடன் சந்தோஷப்படவில்லை. தாங்கள் ஒருமுறைவந்து இராஜசபையில் பாடினாலே அவர்களுக்குச் சந்தோஷம். தங்கள் பாட்டைக் கன்னையா பாகவதர் பாடக்கேட்டு அரசர் மெச்சித் தங்களை அழைத்துவரச் சொன்னர்; தயவு செய்ய வேண்டும்.

தியாக: அப்படியே, அங்கே வித்துவான்கள் பாடுவது போதுமே! நான் இராமசபையில் பாடிக்கொண்டு, அவன் அருளுக்கே வாழ்கிறேன். இதுதான் எனக்குத் திருப்தியாயிருக்கிறது. நான் ஸ்துதி பாடுவதில்லை.

வடிவேலு: சுவாமி, தாங்கள் அங்கே அரசனைப் பாட வேண்டாம்; தாங்கள் இராமன்மேல் பாடுங்கள். எப்படியாவது தங்கள் கானம் அங்கே அரங்கேற வேண்டும். தங்களுக்குச் சாம்ராஜ்யத்தில் உயர்ந்த பதவி கிடைக்கும்.

தியாகராஜர் உடனே "பதவி நீ ஸத் பக்தி" "ராம பக்தி ஸாம்ராஜ்ய" மென்ற இரண்டு உருக்கமான வைராக்கிய கீதங்களைப் பாடினர்.

தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் வெகு தூரத்திலிருந்தும் ராம பக்தர்கள் பலர் தியாகராஜரைத் தரிசிக்க வந்தனர். அவர்களை அவர் நன்கு வரவேற்று இசையின்பம் பருகுவார். மலையாள நாட்டிலிருந்து கோவிந்த மாரார் என்னும் மகாவித்துவான் ஒரு சமயம் அவரைத் தேடி வந்தார். மாரார் ஆறு காலங்களிலும் பாடுவதில் நிபுணர். "ஷட்கால கோவிந்தர்" என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். அவர் வந்த தருணத்தில் தியாகராஜர் நிஷ்டையில் இருந்தார். இடையில் குறுக்கிட்டு மாரரின் வருகையை அறிவிக்கச் சீடர்கள் அஞ்சினர். சற்று நேரத்தில் நிஷ்டை கலைந்த தியாகராஜர் மாரார் காத்திருப்பதை அறிந்தார். ராம பக்தர் ஒருவரைக் காக்க வைத்ததற்காகச் சீடர்களை வெகுண்டார். வந்த அதிதியிடம் மன்னிப்புக் கேட்டார். ராம சன்னிதியில் தான் பாடவேண்டும் என்ற விருப்பத்தை மாரார் அறிவித்தார். அன்று ஏகாதசி. வழக்கம் போல பஜனை முடிந்தது. மாரார் பாடத் தொடங்கினர். அவரது தம்புரா மிகப் பெரியது; தந்திகள் கனமானவை. அவற்றினின்று "கும்" மென்றெழுந்த ஒலி, சேர்ந்திசைக்கும் பல வாத்தியங்களின் நாத வெள்ளத்தையும் மறைக்கும் வண்மை பெற்றது. அத்தகைய தம்புராவை மீட்டிக்கொண்டு பாடிய மாராரின் குரலின்நிறைவும் இனிமையும் தானென்ன! நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீ ஆகிய கனராக பஞ்சகத்தில் விஸ்தாரமாக ஆலாபனை, தானம் முதலியவை நடந்தபின் தியாகராஜருடைய வேண்டுகோளின்படி நீலாம்பரி ஆலாபனை தொடங்கி, இரவு 11-மணிமுதல் 2-மணிவரை நீடித்தது. தியாகராஜர் தேர்ந்

தெடுத்த ஒரு பல்லவியையும் மாரார் காலை 6-மணி வரை ஷட் காலங்களில் அனாயாஸமாகப் பாடினார். இந்தப் பக்தருடைய கானத்தில் தியாகராஜர் பரவசமானார். லயத்தின் பெருமையை வியந்து, 'ஷோடச காலமும் இவருக்கு எளிதே' என்று கூறிப் பாராட்டினார். அக்கால வழக்கத்தை யொட்டி அவர் தம்புரா வின் சிரத்தில் ஒரு பட்டு நூலைச்சாற்றி அவரிடம் தமக்குள்ள பெருமதிப்பை வெளியிட்டார். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மாரார்ின் கோரிக்கையை முன்னிட்டு ஸ்வாமிகள் பாட ஆரம் பித்து "எந்த ரோமஹானுபாவுலு" என்ற ஸ்ரீராக க்ருதியைக் கவனம் செய்தார். இச் சம்பவம் நடந்தது 1838-ல்.

மாயவரம், ஆனைதாண்டவபுரம், சிதம்பரம் முதலிய ஸ்தலங்களில் வசித்துச் சிவபக்திச் செல்வராய் விளங்கி, நந்தனார் சரித்திரத்தை இயற்றிப் புகழ் படைத்த கோபால க்ருஷ்ண பாரதியார் ஸ்வாமிகளைத் தரிசிக்க ஆவல் கொண்டு திருவை யாற்றை யடைந்தார். தன்னைத் தெரிவித்துக் கொள்ளாமல் ஸ்வாமிகளின் பஜனையைக் கேட்டு அனுபவித்துக் கொண்டிருந் தார். தியாகராஜர் புதிதாக வந்தவரை உற்று நோக்கி, "எந்த ஊர்?" என்று கேட்டார். "அடியானுக்கு மாயூரம்," என்ற பதில் கணீரென்று வந்தது. தியாகராஜர், "அப்படியா? அங்கே கோபாலக்ருஷ்ண பாரதியார் என்ற சிவநேசர் இருக் கிறாரே. அவர் ஸௌக்கியமா?" என்று விசாரித்தார். "அடியவன் தான்," என்ற மொழியைச் செவியுற்றதும் தியாக ராஜர் அளவற்ற சந்தோஷ மடைந்தார். சற்று நேரம் இரு வரும் அளவளாவிய பின்னர், "ஆபோகியில் க்ருதி அமைத்த துண்டோ?" என்று தியாகராஜர் பாரதியாரைக் கேட்டார். அவர் சற்று நேரம் மௌனமாயிருந்தார். பின்னர் சம்பாஷணை வேறு பாதையில் சென்றது. அன்றிரவு பாரதியார் பஞ்ச நதீசு வரர் ஆலயத்திற்குச் சென்று தரிசனம் செய்து மீண்டும் ஸ்வாமிகள் இல்லத்தில் தங்கினார். மறு நாட் காலையில் "சபா பதிக்கு" என்ற ஆபோகி ராகக்ருதியை ஸ்வாமிகளிடம் பாடிக் காட்டினார். அதைச் சிரத்தையுடன் அவர் கேட்டு மகிழ்ந்து, "நேற்றிரவு நான் பிரஸ்தாபித்த பொழுது யாதும் சொல்ல வில்லையே," என்று வினவினார். பாரதியார், "தங்கள் அனுக் கிரஹத்தினால் ஈசன் ஸன்னிதியில் என் கற்பனை உருவெடுத்து இப்பாமாலை மலர்ந்தது," என்று பணிவுடன் மொழிந்து, தியாக ராஜரின் பழுத்த வைராக்கியம், மனத்தாழ்மை, இறைவனிடம் ஊறிய பக்தி, முதலியவற்றைக் கருதிக் கசிந்து விடை பெற்றார்.

காமாட்சியம்மனிடம் இடையறாத அன்பு பூண்டு, மனங் கவரும் இசை மணிகளை அன்னைக்குச் சூட்டிச் சங்கீத மும் மூர்த்திகளில் ஒருவராகப் புகழ் பெற்ற சியாமா சாஸ்திரிகள் அடிக்கடி தியாகராஜரிடம் தமது கிருதிகளைப் பாடிக் காட்டுவ துண்டு. அவருடைய தவப் புதல்வரான காயக சிரேஷ்டர் ஸுப்பராய சாஸ்திரி தியாகராஜரிடம் சில காலம் இசை பயின்று வந்தார்.

தந்தை இராம பிரம்மத்தின் நண்பர் உபநிஷத் பிரஹ்ம ஸ்வாமிகள், காஞ்சீபுரம் மடாதிபதியா யிருந்தார். அவர் தியாகராஜரின் அருளிசையைக் கேட்க விரும்பித் தியாகரைக் காஞ்சீபுரத்திற்கு அழைத்தார். துறவிகளை நன்கு மதிக்கும்

தியாகர் உடனே க்ஷேத்திர யாத்திரைக்குப் புறப்பட்டார். அந்தக் காலத்தில் ரயில் இல்லையாதலால் ஒரு பல்லக்கு ஏற்பாடு செய்து, சீடர்கள் குருநாதரைச் சுமந்து சென்றனர். வழியி லுள்ள திருத்தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு சங்கீத ராஜர் வாலாஜாபேட்டைக்கு எழுந்தருளினர். அதுவே தமது அருமைச்சீடர் வேங்கடரமண பாகவதர் ஜவுளி வியாபாரம் நடத்திய ஊர். இவர் ஐயம்பேட்டையிற் பிறந்து, சங்கீதத்தில் ஆர்வங் கொண்டு, குருநாதரை அடுத்து வணக்கமுடன் கைங் கரியம் செய்து, நாதவித்தையைப் பூரணமாக அப்யசித்துப் பிறகு வியாபார நிமித்தம் தங்கிய வாலாஜாப்பேட்டையில் பெரிய பஜனைமடம் கட்டி, உருக்கமாகத் தியாககீர்த்தனங்களைப் பாடி ராமபஜனை செய்தார். இவர் குலத்தினர் வழி வழியாக ஸ்ரீ ராமபஜனையே காலக்ஷேபமா யிருக்கிறார்கள். இந்தப் பக்தர் அமைத்த பஜனைமடத்தில் தங்கி, தியாகராஜர் பல கீர்த்தனங் களைப் பாடினர். பிறகு திருப்பதியை நோக்கினர்.

பக்தர் கீழ்த்திருப்பதியைச் சேவித்து ஸ்ரீ ராமநாம லஹரி யில் மூழ்கி மெய்ம்மறந்து, மலையேறி ஸ்ரீநிவாசப் பெருமாள் சேவைக்கு ஆவலாகச் சென்றார். பூஜை முடிந்த சமயமானதால் திரைபோட்டிருந்தது. பட்டரைச் சுவாமிதரிசனம் செய்ய வேண்டுமென்று கேட்டார் பரம பாகவதர். "இன்னும் ஒருமணி நேரங்கழித்தே தரிசிக்கலாம். இப்போது திரையை விலக்க முடியாது" என்று கண்டிப்பான பதில் வந்தது. மனி தரிடம் முறையிட்டுப் பயனில்லை. தியாகராஜர் "திருப்பதி வேங் கடரமண, திரையை-பொருமைத் திரையை, மனத்திலிருந்து விலக்க லாகாதா? மாயத்திரை விலகி உன் சுடர்வடிவைக் காணலாகாதா? நல்ல பசியுடன் உண்ணப் போகும்போது சோற்றில் ஈ விழுந்தாற்போல் இருக்கிறதே, இந்த மத்ஸரமான திரை; அதை விலக்கியருள்" என்று கௌளிபந்துவில் பாடவே, அதிசயமாகத் திரை நீக்கப்பட்டது! ஸ்ரீநிவாசப்பெருமாளே பக்தர் கண்குளிரச் சேவித்து, "வேங்கடேசனே, உன்னைச் சேவிக்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். ஸ்ரீ நாயகா-பர மானந்தா, யோகி ஹ்ருதயா, நான் முன்னே என்ன நோன்பு நோற்றேனே! உன் தரிசனம் கிடைத்தது. உனது நாமகான சுகமும் கிடைத்தது!" என்று மத்தியமாவதியிற் பாடினர். அதைக்கேட்ட கோயிலதிகாரிகளும் மற்றோரும் தியாகராஜரின் பக்தியையும் வாக்கையும் இசையையும் வியந்து போற்றினர் கள். கோயில் மரியாதைகளுடன் தியாகராஜர் பெருமாள் சேவைசெய்து திரும்பினர்.

வழியில் புத்தூரில் ஒரு பெண் அழுங் குரல் கேட்டது. தியாகராஜர் செய்தியை விசாரித்தறிந்தார். சேஷையர் என் னும் ஒரு பிராமணர் மனைவியுடன் இரவில் அந்த ஊருக்கு வந்து தங்க இடமில்லாமல், கோயிற் சுவரிலேறிக் குதிக்குக் கதவைத் திறந்தாவது உள்ளே தங்கலாம் என்று முயன்றார். இருட்டில் கீழிருப்பது தெரியாது ஓர் ஆழக்கிணற்றில் தொபுக்கென்று விழுந்தார். நாயகன் திரும்பி வராததைக்கண்டு மனைவி அலறி னாள். காலையில் கிணற்றிலிருந்து பிணத்தை வெளியேற்றக் கண்டதும் மனைவி மார்பில் அடித்துக்கொண்டு விம்மி யழுதாள். தியாகராஜர் பெண்ணைச் சமாதானப்படுத்தி, தஞ்சாவூர் இராம

ராவை "லோகாவன சதுர பாஹிமாம்" என்ற பேகடகீர்த்தனமும் தில்லைஸ்தானம் - இராமையங்காரை ஸ்ஹானுவில் "ஏமான திச் சேத" என்னும் பாட்டும், வேங்கடரமண பாகவதரை பிலஹரி யில் "நாஜீவாதார" என்ற அரிய கீர்த்தனமும் பாடச் செய்தார். பின்னர் இறந்த ஆளின் மேல் மெல்லத் தடவிக்கொடுத்து, தாரக மந்திரம் சொல்லி முகத்தில் நீர் தெளித்தார். உடல் ஹா! என்று உயிர்த்தது, கண் திறந்தது! சேஷையர் எழுந்து நின்று சுவாமிகளை நமஸ்கரித்தார். மனைவி, 'சுவாமிகளால் கணவனுயி ரும் என்னுயிரும் பிழைத்தன' என்று வணங்கி நன்றி கூறினுள்.

தியாகராஜர் பிறகு காஞ்சீபுரம் சென்று, ஸ்ரீ உபநிஷத் சுவாமிகளைப் பார்த்து ஆசிபெற்றார். காஞ்சி வரதராஜப்பெரு மானை உருக்கமாகப் பாடினர். ஏகாம்பரேசரையும் காமாக்ஷி யம்மனையும் வணங்கிப்பாடி, அங்கிருந்து வாலாஜாப்பேட் டைக்கு வந்தார். வேங்கடரமண பாகவதர் அமோகமாகப் பஜனை ஊர்வலம் நடத்தினர். மைசூர் வித்வான் சதாசிவராயர், தியாகராஜ சுவாமிகள் மேல் தோடியில் ஒரு கீர்த்தனம் பாடி னர். பன்னிரண்டுநாள் வாலாஜாப்பேட்டையில் தங்கி, தியாக ராஜர் புறப்பட்டார். வீணை குப்பையர் சென்னைக்கு வர வேண்டுமென்று அழைக்கவே, தியாகராஜர் சம்மதித்தார்.

கோவூர் சுந்தரேச முதலியார் தியாகராஜரைச் சிறப்பாக வரவேற்றார். இவர் தமிழ்ப் புலவர், சிவபக்தர், இசைமணி, ரசிகமணி, பெரியவர்களிடம் பக்தியுள்ளவர். இவர் வேண்டு கோளின்படி தியாகராஜர் சிலநாட்கள் அந்த ஊரில் தங்கி அவ் வூர் ஆலயத்தில் விளங்கும் சுந்தரேசர்மேல் "சம்போ மஹாதேவ" (பந்துவராளி), "நம்மி வச்சின" (கல்யாணி), கேரி ஸேவிம்பராரே (கரகரப்பிரியா), "ஈவஸுதநீவண்டி தைவமு" (ஸஹானு) ஆகிய கீர்த்தனங்களைப் பாடினர். தியாகராஜருக்கு ராஜமரியாதை களுடன் சிறப்புச் செய்ய வேண்டினர் முதலியார். தியாக ராஜர் "நான் புவியரசனல்லேன்; நான் பாதசாரி, பக்தன், பிச்சையெடுத்துண்பவன்; எனக்கேன் தடபுடல் மரியாதை கள்? எல்லாம் இறைவனுக்கே செய்யும்" என்றார். முதலியார் திவ்யநாமபஜனை செய்துவந்தார். ஆனல் சமீபத்தில் தீப்பிடித்து அவருடைய பொருள் நஷ்டமானது. அதைக்குறித்து அவர் தியாகராஜரிடம் ஒரு பாடல் சொன்னர்:

"பாரோர் பலரைச் சபைகூட்டி, நாளும் பஜனை செய்தும்,
பேராகிய பிள்ளையார் பிடிக்கக் குரங்கா னதுபோல்,
சீரார் இராம! செயல்வேறுபட்ட இத்தீங்கினை நான்
யாரோடு சோல்வேன்? கோபால நீயருள் வாய் சிறிதே!"

தியாகராஜருக்குத் தமிழ் நன்றாக எழுதப்படிக்க வரும். வீட்டு மொழி தெலுங்காதலால் அவர் தெலுங்கிலேயே பாடினர். முதலியார் பாட்டை உடனே ஒரு கீர்த்தனமாகப்புனைந்து தியாக ராஜர் "எவரிதோ நே தெல்புது" (யாரோடு சொல்வேன்) என்று மானவதி இராகத்திற் பாடினர். முதலியார் மிக்க மகிழ்ந்து தியாகையருக்கு ஆயிரம் பொன்னளித்தார். ஐயர் தொட மறுத்தார். முதலியார் ஒரு பல்லக்குத் தயாரித்து, அதில் ஆயி ரம் பொன்னை மெல்ல மறைத்து வைத்து, இரண்டு சீடர்களுக்கு மட்டுமே அதைத் தெரிவித்தார்.

காலை மூன்று மணிக்குத் தியாகராஜர் பல்லக்கில் திரு வொற்றியூருக்குப் பயணமானார். மாணவர் சிவிகையைச் சுமந்து சென்றனர். ஒரு காட்டு வழியே சென்றபோது, கவண்கற்கள் பட் பட்டென்று வந்து விழுந்தன. "கள்ளர், கள்ளர்" என்று சீடர் கத்தினர். சுவாமிகள் "ராமா, முன்னும் பின்னும் வந்து எம்மைக் காப்பாற்று" என்று பாடிக் கொண்டே இறங்கி, "கள்வருக்குப் பயப் படுவதேன்? நம் மிடம் என்ன இருக்கிறது? மடியிலே கனமிருந்தால் அல்லவோ வழியிலே பயம்?" என்றார். குப்பையர் "சுவாமி, கோவூர் முதலி யார் தந்த ஆயிரம் பொன் பல்லக்கில் உள்ளது" என்றதுமே தியாகராஜர் சட்டென்று பணத்தை எடுத்து, "இந்தாருங்கள், திருடரிடம் தாருங்கள்" என்று வீசினார். தஞ்சாவூர் இராமராவ், "சுவாமி, முதலியார் அன்புடன் தந்த பணம்" என்றார். தியா கர், "இந்தப் பணத்தாலே செருக்கும் ஆபத்தும் வினையும். எனக்கெதற்கு இது? இராமார்ப்பணமான பக்தர்கள் இதில் ஆசைவைக்க மாட்டார்களே! திருடர்களுக்குத் தாருங்கள் இதை" என்று கண்டிப்பாகச் சொன்னார். இராமராவ் "சுவாமி, இது தங்களுக்காகத் தந்ததன்று. ஸ்ரீராமநவமி, கிருஷ்ண ஜயந்தி உற்சவங்கள் நடத்தவே முதலியார் தந்தார். இது இராமபிரான் காணிக்கை. தாங்கள் வைத்திருக்க வேண்டும்," என்று சமாதானம் சொன்னார். "அப்படியானால் இந்தப் பணத்தை அவனே காத்துக் கொள்ளட்டும்; இராமா, நீயே முன்பின் துணையாக வந்து (முந்து வெனுக) விருப்பத்தைச் செய்" என்று மேலே பயணந் தொடர்ந்தார் பக்தர். பிறகு, கல் விழவில்லை; விடிந்ததும் நாகலாபுரம் திருடர்கள் ஓடிவந்து தியாக ராஜர் காலில் விழுந்தனர். சுவாமிகள், "இதோ பணம், எடுத்துச் செல்லுங்கள்" என்று மறுபடியும் பணமூட்டையைக் காட்டி னார். திருடரோ, "சுவாமி, நாங்கள் பணத்திற்காகவே கல் வீசிக் கொள்ளையடிக்க வந்தோம். ஆனால் தங்கள் பல்லக்கின் முன்பின் இரண்டு சுந்தர வீரர்கள் காவல் காத்து எங்கள்மேல் கல்வீசினர். அவர்களை மீறிக் கிட்ட வரமுடியாமல் உயிர் பிழைத்துப் பின் சென்றோம். விடிந்ததுமே அவர்கள் மறைந் தனர். அந்த மகான்களை யாரென்று அறியவந்தோம். மறு படியும் அவர்களைக் காணவேண்டும்!" என்றனர். தியாக ராஜர், "எந்தபாக்யமு மாபாலகல்கிதிவி" என்ற சாரங்காராகக் கீர்த்தனம் பாடி, "அன்பர்காள், நீங்கள் எவ்வளவு புண்ணியம் செய்தீர்கள்; அந்த இருவர், இராமலட்சுமணர்களே!" என்று இன்பக் கண்ணீர் சொரிந்தார். பக்தர்களைக் காக்கும் பகவானின் கருணையை வியந்தார். திருடர்களுக்கு ஸ்ரீராம மந்திரம் உபதேசித்தார். திருடர்கள் தியாகராஜரைக் குருவாக வணங்கி இராமநாம கோஷத்துடன் சிவிகையை வழி நடத்திச் சென்றனர். சுவாமிகள் முதலியார் பணத்தை வட்டிக்குக் கொடுத்து அதிலிருந்து ஸ்ரீராம நவமி, கிருஷ்ண ஜயந்தி முதலிய உற்சவங்களை நடத்தினார்.

வீணை குப்பையர் தியாக சிஷ்யர்களில் தலைசிறந்தவர். அவர் பரம்பரை வித்துவான். அவர் தகப்பனார் சாம்பமூர்த்தி சாஸ்திரிகள் பெரிய பாடகர், வைணிகர். 'சாம்புடு வாயிஞ்சி சாம்புடே வினவலே' (சாம்பசிவர் வீணை வாசித்து, சிவசாம்

பனே கேட்க வேண்டும்) என்றொரு பழமொழி யுண்டு. குப்பையர் வடமர், சாமவேதி, புரத்வாஜகோத்திரர், பெரிய இசைப் புலவர். தியாகராஜருடன் இருந்து கவனத்திலும் புகழ் பெற்றார். அவரை, 'திருவொற்றியூர் குப்பையர், வீணை குப்பையர் பாடல் குப்பையர், கானச் சக்கரவர்த்தி' என்றழைப்பர். அவர் மகன் தியாகையரும் சிறந்த இசைப்புலவர். சங்கீத ரத்னவளி யுடன் தந்தையின் கிருதிகளையும் அவர் வெளியிட்டார். 'பல்லவி ஸ்வரகல்பவல்லி' என்ற நூலில் குப்பையரின் வர்ணங்களையும் தில்லானுக்களையும் கீர்த்தனங்களையும் வெளியிட்டார். 'வயலின்' பொன்னுசாமி, பல்லவி சீதாராமையர், கொத்தவாசல் வெங்கடராமையர் போன்ற பெரும்புலவர் குப்பையரின் மாணவர். குப்பையர் வேணுகோபால பக்தர். தமது கிருதிகளில் 'கோபால தாஸ' என்ற முத்திரை வைத்தார். இவரிடம் தியாகராஜருக்குத் தனியன்பு உண்டு.

வீணை குப்பையர் அழைப்பிற் கிணங்கி, தியாகராஜர் திருவொற்றியூர் சென்றார். அங்கே தியாகராஜ ஸ்வாமியையும் திருபுராம்பிகையையும் பாடிப் பணிந்தார். "தாரினி தெலுசுகொண்டி", "கன்னதல்லி", "சுந்தரி நின்னு வர்ணிம்ப" போன்ற கீர்த்தனங்கள் பிரசித்தமானவை. பிறகு, குப்பையர் தியாகராஜரைச் சென்னையில் தம் வீட்டிற்கு அழைத்து வந்து உபசரித்தார். அங்கே தியாகையர் பஜனை நடத்திக் கோபாலகிருஷ்ணனைப் பாடினர். நான்கு கீர்த்தனங்கள் பாடினர். பிறகு குப்பையருக்கு வீணை யளித்த கோவூர் சுந்தரேச முதலியார் தியாகையரை, பந்தர் தெரு, நான்காம் எண்ணுள்ள தமது வீட்டில் வரவேற்றுச் சிறப்பாக உபசரித்தார். இங்கிருந்து தியாகராஜர் பஜனை நடத்தி, ஏழு நாட்கள் தேவகாந்தாரி ராகத்தில் பல கீர்த்தனங்கள் பாடி, பக்த கோடிகளை மகிழ்வித்தார். குப்பையர் முயற்சியால் சென்னையில் தியாக கிருதிகள் பரவின. முத்தியால்பேட்டை இராமசாமித் தெருவில் வீடு வாங்கிக் கொண்டு, குப்பையர் சென்னையில் சங்கீத சேவை செய்து வந்தார்.

தியாகையர் க்ஷேத்ர தரிசனம் செய்துகொண்டே, திருவிடைமருதூருக்குவந்து, மஹாலிங்க ஸ்வாமியைப் பாடி வணங்கி, கோவிந்தபுரம் சென்று அங்கே போதேந்திர ஸ்வாமி மடத்தில் தங்கி, பஜனை செய்தார். சதாசிவ ப்ரம்மேந்திரரும் ஐயாவாளும் தோன்றிய திருவிசைநல்லூருக்குச் சென்றார். அங்கிருந்து நாகபட்டணம் சென்று நீலாயதாட்சியைப் பாடினர். திருச்சிறுப்பள்ளியிலிருந்து ஸ்ரீரங்கம் சென்று அரங்கநாதரை, 'ஓ, ரங்கசாயி' என்ற காம்போதி கிருதியால் துதித்தார். பிறகு புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் கண்டு, இராமேசுவரம், தனுஷ்கோடி முதலிய புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்தார். 'கோடி நதுலு' என்ற கீர்த்தனம் தனுஷ்கோடியில் பாடப் பெற்றது. அங்கேயிருந்து தியாகராஜர் மதுரைக்கு வந்து மீனாட்சிகையை இசை பாடி வணங்கினர். 'மனஸுனில்ப' என்ற ஆபோகிக் கீர்த்தனம் மதுரையில் எழுந்தது.

இவ்வாறு க்ஷேத்ராடனம் செய்து, தியாகராஜர் திருவையாறு வந்து சேர்ந்தார். முன்னே திருவையாறு வந்து பிறகு

ஸ்ரீரங்கம், இராமேசுவரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குச் சென்றதாகவும் சொல்வார்கள். எப்படியோ மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாகச் சேவித்தார் தியாகராஜர். அத்துடன் காலநிலையையும் உலகியல்புகளையும் நன்றாகக் கண்டுகொண்டார். உறவினர், நமது தியாகராஜர் பல இடங்களைச் சுற்றிப் பாட்டுக்கச்சேரி செய்து, திரளான பணம் கொண்டுவந்திருக்கிறார் என்று ஊகித்தனர். எல்லோரும், 'அப்பா, என்ன செல்வம் கொண்டுவந்தாய்?' என்று ஆவலாகக் கேட்டனர். தியாகராஜர், 'பெரிய செல்வம் கொண்டு வந்திருக்கிறேன்! இதோ கிடைத்தற்கரிய செல்வம்!' என்று திருப்பதிப் பிரசாதத்தையும், இன்னும் பல க்ஷேத்திரங்களின் பிரசாதத்தையும் உற்றார் உறவினருக்குத் தந்து, 'ஈசுவர கிருபையைவிட வேறென்ன செல்வம் வேண்டும்? அவன் பக்தவத்ஸலனாயிருக்கும் உண்மையை இந்த யாத்திரையில் கண்டுகொண்டேன். அது போதும். என் வாழ்வை இராமார்ப்பணம் செய்தேன். அவன் என்னை ரக்ஷிக்கிறான்' என்றார்.

தியாகராஜர் யாத்திரையிலிருந்து வந்ததுமுதல் தீவிரமான ஜபயோகமும், காலஞ்ஜலியும் பஜனையும் செய்து வந்தார். தமது மாணவர்களையெல்லாம் பக்திகானப் பிரசாரர்களாகப் பயிற்றினார். அவருள் குப்பையர், வேங்கடரமணர், ராமராவ் முதலியோரை முன்பே சொன்னோம். தியாகையரின் உறவினரான மானம்பூச்சாவடி வேங்கடசுப்பையர், சிறந்த 'வயலின்' வித்வான். குப்பையருக் கடுத்தபடி இவரே தியாகராஜரிடம் பூரணமாக இசை பயின்றவர். இவர் தியாகராஜ கீர்த்தனங்களைச் சுத்தமாகக் கற்றுத் தேர்ந்து, பல பெரிய வித்வான்களை உண்டாக்கினார். மஹா வைத்திய நாத ஐயர், பெரிய வைத்தி, பட்டணம் சுப்பிரமணிய ஐயர், சரப சாஸ்திரிகள், பிடில் வேங்கட சுப்பையர், பஞ்சாபிகேசையர் முதலியோர் இவர் மாணவர்கள். இவர்கள் தியாக கிருதிகளை நாடெங்கும் பரப்பி, கந்தர்வஜோதிகளாக விளங்கினர்! வேங்கட சுப்பையரும், பட்டணம் சுப்பிரமணியரும் அரிய கீர்த்தனங்கள் பாடி, 'வேங்கடேசனுத' என்று முத்திரை யிட்டளித்தனர்.

ஸ்ரீ தியாகராஜர் இயற்றிய ஏராளமான கீர்த்தனங்களில் இப்போது சுமார் 505 உருப்படிகளே வழங்குகின்றன. 24000 கிருதிகள் பாடியதாகச் சொல்லுகிறார்கள். இவற்றைத் தவிர, திவ்யநாம கீர்த்தனங்கள், உத்ஸவ ஸம்ப்ரதாய கீர்த்தனங்கள், பிரஹலாத பக்த விஜயம், என்ற நாடகமும் ஸௌகா சரித்திரமும் தியாகராஜர் அருளியவை.

தியாகராஜருக்கு முன்பு சங்கீதம் கவிதையுடன் இணைந்திருந்தது. அருணாசலக் கவிராயரின் இராமாயணக் கீர்த்தனங்கள் புகழ்பெற்றபோது, தியாகையர் பதின்மூன்று வயதுப் பையனாயிருந்தார். அக்கீர்த்தனங்களில் அமைந்த இராக தாளங்களே அக்காலத்தில் பொதுவாக வழங்கின. தீக்ஷிதர் (1775—1835) சமஸ்கிருதத்தில் அற்புதமான இசைநுணுக்கங்கள் அமையப் பாடினார். அவற்றை மிகவும் வருந்திக் கற்றே பாட முடியும். சாமா சாஸ்திரிகள் தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் அற்புதமான இசைச் செல்வத்தைத் தந்து, 1827-ஆம் ஆண்டில் காலஞ்சென்றார். அவர் ஸாஹித்யங்களும் வருந்திக்

கற்றே பாடத்தக்கன. இருவரும் அபூர்வ ராகங்களை உயிர் கொடுத்து வளர்த்தனர். தியாகராஜர், இந்த இருவருக்கும் பிறகு நீண்டகாலம் வாழ்ந்து, சங்கீதத்திற்குச் சிகர ஜோதியாக விளங்கினர். பாட்டுகளுக்கு ஸ்வரசஞ்சாரம் சங்கதி போடுதல் எல்லாம் அவர் ஏற்படுத்திய பத்ததியே. சதுர்தண்டிப் பிரகாசிகை கற்றுத்தான் அவர் இராகதாள நுட்பத்தைத் தெளிந்ததாகத் தெரிகிறது. எழுபத்திரண்டு மேளகர்த்தா இராகங்களில் சுமார் 47 இராகங்களையும் பல ஜன்ய ராகங்களையும் கையாண்டார். அவர் மொத்தம் சுமார் 200 இராகங்களில் பாடியிருக்கிறார். தியாகராஜர் பிரஸித்த ராகங்களில் பலவகைப்பட்ட க்ருதிகளையும், எளிதில் கையாளக்கூடாத கடினமான ராகங்களிலும் புதிதாகத்தான் கற்பனை செய்த ராகங்களிலும் பல க்ருதிகளையும் இயற்றியுள்ளார்.

கடைசியாக, க்ருதிகளைக் கவனம் செய்வதற்கான லக்ஷ்ய லக்ஷணங்கள் தியாகராஜரிடம் சரண் புகுந்தன என்றே கருத வேண்டும். பூஜா காலங்களிலும், பாராயணம், ஆலய வழிபாடு முதலிய சந்தர்ப்பங்களிலும், அவருடைய கற்பனை வெள்ளம் பெருக்கெடுக்கும். உடனிருக்கும் சீடர்கள் அதைக் குறிப்பாலுணர்ந்து, எழுத்தாணியும் ஓலையும், அல்லது மாம்பலகையும் மாக்கல் துண்டும் எடுத்து, அவரவர்கள் தேர்ச்சிக் கெட்டிய வரை குறித்துக்கொள்ளுவதில் கண்ணுங் கருத்துமாயிருப்பர். பிறகு கூடிச் சிந்தனைசெய்து தெளிவுடன் பாடம் செய்து குருநாதரிடம் பாடிக் காட்டி, அவருடைய ஆமோதிப்பைப் பெறுவார்கள். இப்படித் தாதுவும் மாதுவும் தனிமுயற்சி, க்லிஷ்ட கற்பனை சிறிதுமின்றி, அருள் வாக்காக அமைந்த விஞ்ஞதமே தியாகராஜரின் பெருமை.

தியாகராஜ கீர்த்தனங்களில் தெலுங்கு, ஸமஸ்கிருதம் கலந்து மணிப்பிரவாளமாக வரும். ஆந்ர பாகவதம், ராமதாஸரின் வாக் விசேஷங்கள், புரந்தரதாஸரின் ஸாஹித்யம் முதலியவை எளிதில் நினைவுக்கு வருமாறு அமைந்தது தியாகராஜரின் எழில் நிறைந்த அருள்வாக்கு. ஆயினும் அது இலக்கியமன்று; கவியின் கண்ணுல் அதனை நோக்கி யாப்பணிவைத் தளக்கக்கூடாது. பல இடங்களில் வசனத்தையும் அவர் உயர்ந்த இசைத் திறமையுடன் கையாண்டிருக்கிறார். தியாகராஜர் வார்த்தை கடுமையன்று; அவர் நோக்கம் கவிதையன்று; இசை! இசையில் நரஸ்துதியும் ஆபாசமும் கலக்கரமல், சும்மா சிற்றின்பங்களையே போட்டுப் புரட்டாமல், அவர் உள்ளார்ந்த இராமபக்தி பரவசத்தில் ஊறிய உணர்ச்சியையே இயல்பான சொல்லிசையால் விளக்கினர். அவர் தெலுங்கு, மிக எளிதாக மனதில் படுகிறது; சொல்லச் சொல்லச் சொல்லுக்குள் மறைந்த உணர்ச்சி வேகமும், உணர்ச்சிக்கேற்ற இசைப் பண்பும், தியாகையரிடம் காணலாம்.

தியாகராஜர் இறுதிநாட்களை முற்றிலும் ஜபதபங்களிலேயே கழித்தார்; சீடர்கள் பாடுவதைச் செவிமடுத்தார்; ஸ்ரீமத் பாகவதத்தைத் தினமும் பாராயணம் பண்ணி வந்தார். அவரது தருமபத்தினியும் நாயகனைப்போலவே தெய்வ பக்தியில் ஈடுபட்டிருந்தாள். இருவரும் இல்லறந் தாண்டிய வானப்பிரஸ்தர்சிரமத்தைக் கைக்கொண்டார்கள் என்றே சொல்லவேண்டும்.



நாதோபாஸகரும், ச்ருதிலய ஸோதரரும், கர்னாடக
ஸங்கீதத்திற்குப் புதியதோர் அழகினைக் கற்பித்தவருமாகிய
மஹாவித்துவான்
கோனேரிராஜபுரம் வைத்தியநாதையர் அவர்கள்.

నాదోపాసకులు, శ్రుతిలయసహోదరులు, కర్ణాటక సంగీతమునకు
నూతన శోభను కల్పించినవారులైన మహావిద్వాన్, కోనేరిరాజపురం,
వైద్యనాథ అయ్యరుగారు (1878–1920).

ராக லக்ஷணம்

1. அடாணை. தீர சங்கராபரண ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபநிஸ் ஸ்நிதாபமகாரிஸ. காந்தாரம், தைவதம், நிஷாதம், இவைகள் உபயோகப்படுகிறவகைகள் பலவாகும். பதநிஸ, காமரிஸ, ஸ்நிதநிஸ் முதலிய ஸஞ்சாரங்களும் வழக்கத்தில் உண்டு. தேசிய பாஷாங்க ராகம். எப்பொழுதும் பாடக்கூடியது.

2. அம்ருத வாஹினி. நடபைரவி ஜன்யம். ஷாடவம். ஸரிமபதநிஸ் ஸ்நிதமகரிஸ.

3. அஸாவேரி. 8வது மேளமாகிய ஹனுமத்தோடியின் ஜன்யம். ஔடவ வக்ர ஸம்பூர்ணம். ஸரிமபதஸ் ஸ்நிஸ் பத மப ரிகாரிஸ. ரிமப போன்ற இடத்தில் சதுச்ருதி ரிஷபம் ஸ்புரிப்பதால் இது பாஷாங்கராகமாகக் கருதப்படுகிறது. சுத்த ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த தைவதம் இவைகள் ஜீவஸ்வரங்கன். காலை 9 மணிக்கு மேல் பாடக்கூடியராகம். கருணை ரஸம் பொருந்தியராகம்.

4. ஆனந்த பைரவி. நட பைரவி ஜன்யம். ஷாடவ வக்ர ஸம்பூர்ணம். பாஷாங்க ரக்திராகம். ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், கைசிகிநிஷாதம், ஜீவஸ்வரங்கள். ஸஞ்சார விசேஷங்களில் அந்தர காந்தாரமும், காகலிநிஷாதமும், அவரோஹணத்தில் பஞ்சச்ருதி தைவதமும், ஸம்பிரதாயத்தில் உபயோகப் படுகின்றன. மந்த்ர ஸ்தாயி நிஷாதத்திற்கு கீழ் ஸஞ்சாரம் காணப்படவில்லை. பரம மங்களகரமான ராகம். எப்பொழுதும் பாடக்கூடியது. வெங்கடமகியவர்கள் ஸம்பிரதாயத்தில் இது உபாங்க ராகமாக கருதப்படுவது லக்ஷ்யத்திற்கு விரோதம்.

5. ஆபேரி. நடபைரவி ஜன்யம். ஸகமபநிஸ் ஸ்நிதபமகரிஸ. ஔடவ ஸம்பூர்ண ராகம். பாஷாங்கராகம். தீக்ஷிதர் ஸம்பிரதாயத்தில் இது உபாங்கராகமாகக் கருதப்படுகிறது. இந்த ராகத்தில் உள்ள தியாகராஜ ஸ்வாமியின் 'நகுமோமுகனலேனி' என்ற க்ருதியை அனுஸரித்தால் இது சதுச்ருதி தைவதத்தையுடைய பாஷாங்கராகம் என்று கருத வேண்டும். கமநி ஜீவஸ்வரங்கள் ப்ரத்யாஹத கமகம் ராகக் கலையை நன்றாக காட்டும்.

6. ஆரபி. தீர சங்கராபரண ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபதஸ் ஸ்நிதபமகரிஸ. கனராகங்களில்ஒன்று. உபாங்க ராகம். ரிஷபம் ஜீவன்யாஸ ஸ்வரம். தைவதம் சாயாஸ்வரம். சாயாலக ராகங்களில் ஒன்று. எப்பொழுதும் பாடத்தகுந்தது.

7. ஆஹிரி. ஹனுமத் தோடியின் ஜன்யம். வக்ர ஸம்பூர்ண ராகம். ஸரிஸம கம பதநிஸ் ஸ்நிதாபமகரிஸ. பிராசீன முறையில் மிகவும் போற்றப்பட்ட ரக்தி ராகங்களில் ஒன்று. முற்பகலில் பாடக்கூடாது என்பது நம்பிக்கை. அந்தர காந்தாரம் பிரயோகப்படுவதால் பாஷாங்கமாகும்.

8. ஈச மனோஹரி. ஹரி காம்போஜி ஜன்யம். ஸம்பூர்ண வக்ர ஸம்பூர்ணம். ஸரிகமபத. நிஸ் ஸ்நித பமரீமகரிஸ. உபாங்கராகம். எப்பொழுதும் பாடக்கூடியது.

9. கண்ட. நடபைரவி ஜன்யம். ஸகரிகமபதபநிஸ். ஸ்நிதபமகரிஸ உபாங்கம். ரக்திராகம். வக்ரப்ரயோகங்களுடன் விளங்கும் ராகம். மாலையில் பாடக்கூடியது.

10. கமலாமனோஹரி. மாயாமாளவ கௌள ஜன்யம். ஔடவஷாடவம். ஸகமபநிஸ். ஸ்நிதபமகஸ். இதை

33-வது ராசாங்க ராகமான சாங்கேய பூஷணி, 27-வது மேளகர்த்தாவாகிற ஸரஸாங்கி இவைகளின் ஜன்யமாகவும் சொல்வதுண்டு. உபாங்கராகம். எப்பொழுதும் பாடத் தகுந்தது.

12. கடாஸ். ஹரிகாம்போஜி ஜன்யம். வக்ர ஷாடவ ஸம்பூர்ணம். ஸமக பதநிஸ் - ஸ்நிதபமகரிஸ. ஸ்நிஸ் என்னுமிடத்தில் காகலி நிஷாதம் த்வனிப்பதால் பாஷாங்க ராகமாகக் கருதப்படுகிறது. மந்தரஸ்தாயி நிஷாதத்திற்குக் கீழ் ஸஞ்சாரம் சாண்பதரிது. மனோஹரமான தேஸீய ராகம். ப்ருங்காரம், பக்தி இவ்விரண்டு ரஸங்களுடன் கூடியராகம். ரிஷபம் அல்பப் பிரயோகம்.

13. கரஹரப்ரிய. நான்காவதான வேதசக்ரத்தின் நான்காவது ராகமான 22வது மேளகர்த்தா. சதுஸ்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம் காகிகி நிஷாதம். ஸர்வஸ்வரகமக வரிக ரக்தி ராகம். எப்பொழுதும் பாடத்தகுந்தது. அநேக ஜன்ய ராகங்களையுடையது.

14. கருடத்வனி. தீர ஶங்கராபரண ஜன்யம். ஸரிகமபதநிஸ் ஸ்தபகரிஸ. ஸம்பூர்ண ஔடவ ராகம்.

15. கலாநிதி. கரஹரப்ரியா ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். ஸரிகம ஸபமதநிஸ் - ஸ்நிதபமகரிஸ.

16. களாவதி. சக்ரவாக ஜன்யம். ஔடவ வக்ர ஷாடவம். ஸரிமபதஸ் - ஸ்தபமகஸரிஸ. உபாங்கராகம்.

17. கல்கட. 13வது மேளமான காயகப்ரியாவின் ஜன்யம். ஸரிகபதஸ் - ஸ்நிதபகரிஸ. உபாங்க ராகம். மத்யம வர்ஜம்.

18. கலகண்டி. 13வது மேளமான காயகப்ரியாவின் ஜன்யம். ஸரிமபதநிஸ் - ஸ்நிதபமரிஸ. உபாங்க ராகம். காந்தார வர்ஜம்.

19. கல்யாணி. 65வது மேளராகம். ருத்ர சக்ரத்தின் ஐந்தாவது ராகம். தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் ஶாந்த கல்யாணியெனப் பெயருள்ளது. ஸப வர்ஜ. ஸஞ்சாரமும், ஜண்டைப்ரயோகங்களும் ரக்தியானவை. ஸ்புரித, த்ரிபுச்சகமகங்கள் ராகத்தின் கலையைத் தெளிவாகக் காட்டும். எப்பொழுதும் பாடலாம். ஆனல் சாயங்காலத்தில் பாடுவது வழக்கம்.

20. கானடா. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிகம பமதநிஸ். ஸ்நிபமகமரிஸ என்பதே கர்னாடக ஸம்ப்ரதாயத்தை ஒட்டியது. ஆனல் தற்காலம் த்வாதச ஸ்வரங்களும் சேர்ந்து ஔத்தர ஸஞ்சாரங்களும் கூடி சில கமகமாத்திரம் பிராதானமாகக்கொண்டு இந்த ராகம் விளங்குகிறது. எப்பொழுதும் பாடத்தகுந்தது.

21. கானவாரிதி. இந்த ராகம் வாகதீச்வரியின் ஜன்யமென்று காணப்படுகிறது. ஆனல் ஹரிகாம்போஜி மேளத்தில் ஸரிகம பதநிஸ் - ஸ்நிதநிதமகஸ என்ற லக்ஷணத்துடன் கேனேரி ராஜபுரம் ஐயரவர்கள் பிரசாரம் செய்து வந்த தாதுவே இந்நூலில் உபயோகப்பட்டுள்ளது.

22. காந்தாமணி. 61வது மேள ராகம். ருத்ர சக்ரத்தில் மூதலாவது ராகம். சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், ப்ரதிமத்யமம், சுத்த தைவதம், சுத்த நிஷாதம். தீக்ஷிதர் ஸம்பிரதாயத்தில் குந்தலம் எனப்பெயர் வழங்குகிறது.

23. காபி. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஔடவ வக்ர ஸம்பூர்ணம். ஆரோஹணத்தில் காந்தார தைவத ஸ்வரங்கள் வர்ஜம். ஸரிமபநிஸ். ஸ்நிதநிபமகரிஸ. தேஸீய ரக்தி ராகம்.

பாஷாங்கம். கானடாவைப்போல இந்த ராகமும் தற்காலம் த்வாதச ஸ்வரங்களுடன் பற்பல ஸஞ்சாரங்களுடன் விளங்குகிறது. எப்பொழுதும் பாடத்தகுந்தது.

24. காம்போஜி. ஹரிகாம்போஜி ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ஆரோஹணத்தில் நிஷாத வர்ஜம். பாஷாங்க ராகம். ஸர்வஸ்வரகமக ரக்தி ராகம். ஸ்நிபதஸ் என்ற ப்ரயோகத்தில் காகலிநிஷாத ப்ரயோகம் ஸம்ப்ரதாயமானது. மத்யமும் நிஷாதமும் ஜீவஸ்வரங்கள். மிக்க ரஞ்சனையுடன் கூடிய ரக்தி ராகம். எப்பொழுதும் பாடத்தகுந்தது.

25. குண்டக்ரிய. மாயாமாளவ கௌள ஜன்யம். ஸரிம பநிஸ் - ஸ்நிபதபமகரிஸ - உபாங்கம.

26. குர்ஜரி. 15வது வேளகர்த்தா மாயாமாளவ கௌளையின் ஜன்யம். ஸரிகமபதநிஸ் - ஸ்தநிதபமகரிஸ - ஸம்பூர்ண வக்ர ஸம்பூர்ண ராகம்.

27. கேதாரம். தீர ஶங்கராபரண ராகத்தின் ஜன்யம். ஔடவவக்ர ஷாடவராகம். ஸமகமபநிஸ் - ஸ்நிபமகரிஸ - நிஷாதமும், காந்தாரமும். ஜீவஸ்வரங்கள். த்விதிய கனபஞ்சக ராகங்களில் ஒன்று. எப்பொழுதும் பாடத்தக்கது.

28. கேதாரகௌள. ஹரிகாம்போஜியின் ஜன்யம்.உபாங்கம் ஸரிமபநிஸ். ஸ்நிதபமகரிஸ. ரீககாம ரீகரிஸ' என்னும் ப்ரயோகம் மிகவும் ரஞ்சனையுள்ளது

29. கோகில வராளி. நடபைரவி ஜன்யம். ஸரிகரிமபத நிதஸ் - ஸ்தநிதபமரிகரிஸ.

30. கௌரிமனோஹரி. 23 வது மேளராகம். சதுஶ்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்தமத்யமம், சதுஶ்ருதி தைவதம், காகலி நிஷாதம். தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் இதற்கு கௌரீ வேளாவளி எனப்பெயர். நான்காவது வேத சக்ரகரத்தின் ஐந்தாவது ராகம்.

31. கௌளிபந்து. மாயாமாளவ கௌளையின் ஜன்யம். ஸரிமபநிஸ். ஸ்நிதப தமகரிஸ. மத்தியமநிஷாதங்கள் ஜனக ராகத்தினுடைய வைகளிவிடச்சற்று அதிகமாக ஸ்புரிப்பது லக்ஷ்ய முறையில் அறியலாம். இதன்மூலமே ப்ரதிமத்யமச்சாயை மிகுந்திருப்பதாகத் தெரியும். உபாங்கம். எப்பொழுதும் பாடக்கூடியது.

32. கௌள. மாயாமாளவ கௌளையின் ஜன்யம். ஸரிமபநிஸ். ஸ்நிபமரிகமரிஸ. ஔடவ வக்ரஷாடவம். கனபஞ்சக ராகங்களிலொன்று. உபாங்கராகம்.

33. சாயாதரங்கிணி. ஹரிகாம்போஜியின் ஜன்யம் - ஸரிகமபதநிஸ் - ஸ்நிதநிபமகரிஸ ஸம்பூர்ண வக்ரஸம்பூர்ண ராகம்.

34. சிந்தாமணி. ஷண்முகப்ரியாவின் ஜன்யம். ஷாடவ உபய வக்ரராகம். ஸரிபமபதநிஸ் - ஸ்பதபமகரிஸ - 'பதநிஸ்' என்னும் ப்ரயோகத்தில் சதுஶ்ருதி தைவதம் வருவதால் பாஷாங்கமாகிறது. 'நிமதநி' ராகச்சாயாஸ்வரங்கள். பரிகரி என்பது ஒரு விசேஷ ரக்தி ப்ரயோகம். கருணரஸப்ரதானமானராகம். இரவில் பாடத்தகுந்தது. ஶியாமா சாஸ்த்ரிகளைத் தவிர மற்ற வாக்கேயகாரர்கள் இந்த ராகத்தில் உருப்படிகள் செய்ததாகத் தெரியவில்லை.

35. ஜங்காரத்வனி. 19 வது மேளராகம். சதுஶ்ருதி ரிஷபம் ஸாதாரணகாந்தாரம் சுத்த மத்யமம், சுத்ததைவதம், சுத்த நிஷாதம். வேத சக்கரத்தின் முதல் ராகம்.

36. ஜயமனோஹரி. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிகமதஸ் - ஸ்நிதமரிகரிஸ. உபாங்க ராகம்.

37. டக்கா. மாயாமாளவ கௌளையின் ஜன்யம். ஸரிஸகமபமகமதநிஸ்தஸ் - ஸ்நிதமபமகமரிகஸ. உபயவக்ர ராகம்.

சாயாலக ராகம்.

38. தரங்கிணீ. ஹரிகாம்போஜியில் ஜன்யம். ஸரிமப தஸ் - ஸநிதபமகரிஸ. ஔடவ ஸம்பூர்ண ராகம். சாயாலக ராகம்.

39. தர்பார். கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிமபதநிஸ் ஸ்நிதபமரிகரிஸ - ஷாடவ வக்ர ஸம்பூர்ணம். காந்தாரமும், நிஷாதமும் ஜிவஸ்வரங்கள். தேஸீயராகம். உபாங்கம். பெரும் பாலும் லக்ஷ்யமுறையே ஏற்பட்டுள்ளது. எப்பொழுதும் பாடத் தகுந்தது.

40. திவ்யமணி. 48-வது மேள ராகம். 8-வதான வஸு சக்ரத்தின் 6-வது ராகம். சுத்த ரிஷபம், ஸாதாரண காந் தாரம், ப்ரதிமத்யமம், ஷட்ஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம்.

41. தீபகம். காமவர்த்தனி ஜன்யம். ஸகமபதபஸ் ஸ்நிதநிபமகரிஸ. உபய வக்ர ராகம். ஔடவ ஸம்பூர்ணம்.

42. தீவ்ரவாஹினி. ஷட்விதமார்கிணியின் ஜன்யம். ஸரி கமபதபநிஸ் - ஸ்நிதபமகரிகமரிஸ. உபய வக்ர ராகம்.

43. தேனுகா. 9-வது மேள ராகம். 2-வதான நேத்ர சக்ரத் தின் 3-வது ராகம். சுத்த ரிஷபம், ஸாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.

44. தேவகாந்தாரி. தீர ஸங்கராபரணத்தின் ஜன்யம். ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ. 'பதநிஸ்' என்ற ப்ரயோகம் உண்டு. இந்த ப்ரயோகத்தில் தைவதம் தீர்க்கம். 'பாதநி தப' என்றும் ப்ரயோகத்தில் கைசிகி நிஷாதம் வருவதால் இது பாஷாங்கமாகிறது. 'ஸரிகமாகரி' என்பது ஒரு ரக்தி யான விசேஷ ஸஞ்சாரம். வீர ரஸம் பொருந்திய ராகம். எப்பொழுதும் பாடக்கூடிய ராகம். தீவ்ர அந்தர காந்தார (ச்யுத மத்யம காந்தாரம்) ஸ்ருதியை இந்த ராகத்தில் தெளி வாய்க் காணலாம். ஸுப்பராம தீக்ஷிதர் இந்த ராகத்தை 22-வது மேளத்தின் ஜன்யமாயும் உபாங்கராகமாயும் தீர்மா னிக்கிறார்.

45. தேவமனோஹரி. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிம பதநிஸ் - ஸ்நிதநிபமரிஸ. ஷாடவ வக்ர ஷாடவம். 'ரிமநி' ராகச் சாயா ஸ்வரங்கள். கமகவரிக ரக்தி ராகம். எப்பொழு தும் பாடலாம்.

47. தோடி. 8-வது மேள ராகம். இரண்டாவதான நேத்ர சக்ரத்தின் இரண்டாவது ராகம். சுத்த ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், கைசிகி நிஷாதம். கடபயாதி ஸங்க்யைக்காக ஹனு என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி ராகம். எப்பொழுதும் பாடலாம். தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் இதற்கு ஜனதோடி என்பர்.

48. நகோமணி. 40-வது மேளமாகிய நவநீதத்தின் ஜன்யம். வக்ர ஔடவ ஸம்பூர்ணம். ஸரிகரிமபஸ் - ஸ்நிதபமகரிஸ. ஆரோஹணத்தில் தைவதமும், நிஷாதமும் வர்ஜம்.

49. நவநீதம். 40-வது மேள ராகம். ரிஷி சக்ரத்தின் நான்காவது ராகம். சுத்த ரிஷபம், சுத்த சாந்தாரம், சது ச்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்.

50. நவரஸ கன்னட. ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஸகமபஸ் - ஸ்நிதமகரிஸ. ஸ்வராந்தர ஷாடவ ராகம். ஆரோ ஹணத்தில் ரிஷபமும், தைவதமும், நிஷாதமும், அவரோ ஹணத்தில் பஞ்சமமும் வர்ஜம்.

51. நவரோஸ். தீர ஸங்கராபரணத்தின் ஜன்யம். பதநி ஸரிகமப - மகரிஸநிதப. உபாங்கம், மத்யஸ்தாயி பஞ்சமத் துடன் இதன் ஸஞ்சாரம் முடிவதால் இதற்கு பஞ்சமாந்த்ய

ராகம் எனப் பெயர்.

52. நளினகாந்தி. ஸரஸாங்கியின் ஜன்யம். ஸகரிமபதநிஸ் ஸநிபமகரிஸ. வக்ர ராகம். தைவத வர்ஜம்.

53. நாகாநந்தினி. 30-வது மேள ராகம். ஐந்தாவது பாண சக்ரத்தின் 6-வது ராகம். சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், ஷட்ஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம். தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் நாகாபரணம் எனப் பெயருள்ளது.

54. நாடகுரஞ்சி. ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஸரிகம நிதநிபதநிஸ் - ஸ்நிதமகரிஸ. உபயவக்ர ஸம்பூர்ண ராகம். 'பதபம' 'மகஸ' என்ற ப்ரயோகங்கள் ரஞ்ஜனியுள்ளவை. ஸாயங்காலத்தில் பாடப்படும் ராகம்.

55. நாட்டை. 36-வது மேளமாகிய சலநாட்டையின் ஜன்யம். ஸம்பூர்ண ஔடவராகம். ஸரிகமபதநிஸ்-ஸ்நிபமரிஸ. ஷட்ச்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்த மத்யமம், பஞ்சமம், ஷட்ச்ருதி தைவதம், காகலிநிஷாதம். சனபஞ்சக ராகங்களிலொன்று.

56. நாதநாமக்ரிய. 15-வது மேளமாகிய மாயாமாளவ கௌளையின் ஜன்யம். ஸம்பூர்ண ராகம். நிஸரிகமபதநி - நிதபமகரிஸ. பாஷாங்கம், நிஷாதாந்த்ய ராகங்களிலொன்று.

57. நாராயண கௌள. ஹரிகாம்போஜி ஜன்யம். ஸரிம பநிதநிஸ் - ஸ்நிதபமரிகரிஸ. ரிஷபமும், நிஷாதமும் ரஞ்ஜனியுள்ள ஜீவந்யாஸ ஸ்வரங்கள். உபாங்கம். எப்பொழுதும் பாடத் தகுந்தது.

58. நாராயணி. ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஔடவ ஷாடவம். காந்தார வர்ஜம். ஸரிமபதஸ் - ஸ்நிதபமரிஸ. உபாங்கம்.

59. நீலாம்பரி. தீர ஸங்கராபரணத்தின் ஜன்யம். பாஷாங்க ரக்தி ராகம். ஸரிகமபநிநிஸ் நிதநிஸ் - ஸ்நிபம கரிகஸ. மத்யமம் ரஞ்ஜனியுள்ள ஜீவஸ்வரம். மந்த்ரஸ்தாயியிலும் மத்யமஸ்தாயியில் 'பநிதநி' என்னும் ப்ரயோகத்திலும் கைசிகி நிஷாதம். மாலை வேளையில் பாடக்கூடியது. மந்த்ரஸ்தாயி நிஷாதத்திற்குக்கீழ் ஸஞ்சாரம் காணப்படவில்லை.

60. பந்துவராளி. இது புராதன ராகம். காமவர்த்தினி என்ற 51-வது மேள கர்த்தா ராகம். சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், ப்ரதிமத்யமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலி நிஷாதம். ஸர்வஸ்வர கமகவரிக ராகம். எல்லாஸ்வரங்களும் ஜீவஸ்வரங்கள். எப்பொழுதும் பாடலாம்.

61. பரஸ். 15வது மேளமாகிய மாயாமாளவ கௌளத்தின் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ஸகம பதநிஸ்-ஸ்நிதப மகரிஸ. வக்ர ஸஞ்சாரங்கள் ராகத்தின் அம்சம். காந்தாரம் ந்யாஸ ஜீவஸ்வரம். தேசீய ராகம். கமக விசேஷங்களில் கைசிகி நிஷாதம் இருப்பதால் பாஷாங்க ராகமாகக் கருதப்படுகிறது. மந்த்ரஸ்தாயி நிஷாதத்திற்கும், தாரஸ்தாயி காந்தாரத்திற்கும் இடையே ஸஞ்சாரங்கள் காணப்படுகின்றன. எப்பொழுதும் பாடத்தகுந்தது.

62. பலஹம்ஸ. ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஸரிமபதஸ் ஸ்நிதபமரிமகஸ. உபாங்கம். சதுச்ருதி ரிஷபம் சாயாஸ்வரம்.

63. பவப்ரிய. 44-வது மேள ராகம். ஏழாவது வஸு சக்ரத்தின் 2-வது ராகம். சுத்தரிஷபம், ஸாதாரண காந்தாரம், ப்ரதி மத்யமம். சுத்ததைவதம், கைசிகி நிஷாதம்.

64. பஹுதாரி. ஹரி காம்போஜியின் ஜன்யம். ஸகமபத நிஸ்-ஸ்நிபமகஸ. ஆரோஹணத்தில் ரிஷபமும் அவரோஹணத்

தில் தைவதமும், ரிஷபமும் வர்ஜம்.

65. பிலஹரி. தீரசங்கராபரண ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிகபதஸ்-ஸ்நிதபமகரிஸ. பாஷாங்கம். தநிப என்ற ப்ரயோகத்தில் சைசிகி நிஷாதம். ரிஷபம், தைவதம், நிஷாதம், இவைகள் ராகச்சாயாஸ்வரங்கள். எப் பொழுதும் பாடத்தகுந்தது. ஆனால் விசேஷமாக காலை இரண் டாம் ஜாமத்தில் பாடப்பட்டு வருகிறது.

66. புன்னாகவராளி. ஹனுமதோடியின் ஜன்யம். ஸரிகமப தநி-நிதபமகரிஸநி, நிஷாதாந்த்ய ராகம். 'சரிகா' 'ரிகமபதபா' என்றும் இடங்களில் சதுச்ருதி ரிஷபம். பாஷாங் கம். ஆரோஹணத்தில் சதுச்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், அவரோஹணத்தில் சுத்த ரிஷபம், மந்த்ரஸ்தாயி நிஷாதம் இவைகள் ராகச்சாயாஸ்வரங்கள். இரவில் பாடத் தகுந்தது. கருணரஸப்ரதானமான ராகம்.

67. பூஷாவளி. வாசஸ்பதியின் ஜன்யம். ஸரிகமபதஸ் - ஸ்நித பமகரிஸ.

68. பூர்ணசந்த்ரிகா. தீர ஸங்கராபரண ஜன்யம். ஸரி கம பதபஸ்-ஸ்நிபம ரிகமரிஸ. உபய வக்ர ராகம். ஆரோஹ ணத்தில் நிஷாதமும், அவரோஹணத்தில் தைவதமும் வர்ஜம்.

68. a. பூர்ணஷட்ஜம். கரஹரப்ரியஜன்யம். தைவதவர்ஜம். ஸரிகமகிநிஸ்- ஸ்நிபமகரிஸ.

69. பூர்வகல்யாணி. 53-வது மேளமாகிய கமன ஸ்ரமத்தில் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். ரக்திராகம். காந்தாரம் ஜீவஸ்வரம். தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் இதை கமகக்ரிய என்பர். எப்பொழு தும் பாடத்தகுந்தது.

70. பேகட. தீரஸங்கராபரணத்தின் ஜன்யம். ஸகரிகம பத நீதபஸ் - ஸ்நிதபமகரிஸ. வக்ர ஸம்பூர்ணம். பாஷாங்க ராகம். ரக்தி ராகம். மத்யம நிஷாதம் ஜீவஸ்வரங்கள். ப்ரயோக விசே ஷங்களில், ப்ரதிமத்யமச்சாயையும், சுத்த, சைசிகி, காகலி நிஷாதங்களும், ஸ்புரிப்பது கவனிக்கத்தக்கது. எப்பொழுதும் பாடக்கூடிய ராகம்.

71. பைரவி. சில நூற்றாண்டுகளுக்கு முன் இது உபாங்க ராகமாக இருந்தது. நாளாவட்டத்தில் சதுச்ருதி தைவத ப்ர யோகம் அதிகரித்தது. கடைசியாக வெங்கடமகியின் காலத் தில் இது முழு பாஷாங்கமாக மாறியது. முற்காலத்து 19 மேளத்தில் 7-வது பரஹித்த ராகமாக விளங்கியது. தீக்ஷிதர் ஸம்ப்ரதாயத்தில் 20வது மேளம் நாரீரீதிகௌள. பைரவி ராகம் நட பைரவியின் ஜன்யம். பாஷாங்கம். ஸம்பூர்ணம். ரிஷபம், காந்தாரம், தைவதம் நிஷாதம், ஜீவஸ்வரங்கள். ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி ராகம். எப்பொழுதும் பாடத்தகுந்தது.

72. மணிரங்கு. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிமபநிஸ்-ஸ்நிபமகரிஸ. உபாங்கம். ஔடவ ஷாடவ ராகம்.

73. மத்யமாவதி. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிமபநிஸ்-ஸ்நிபமரிஸ். ஔடவ ராகம். உபாங்க ராகம். ரிஷபம், மத்யமம், நிஷாதம், ஜீவந்யாஸ ஸ்வரங்கள். ரக்தி ராகம். மத்யாஹ்ன வேளைக்குகந்ததெனினும், காலவரையை மீறி ராகங்களை கானம் செய்த தோஷ பரிஹாரமாக மங்களகரமான இந்த ராகத்துடன் கானம் முடிவு பெறுவது வழக்கம்.

74. மந்தாரி. காமவர்த்தனி ஜன்யம். ஷாடவராகம். ஸரி கம பநிஸ்-ஸ்நிபமகரிஸ.

75. மாஞ்சி. நடபைரவியின் ஜன்யம். ஸம்பூர்ண வக்ரஸம் பூர்ணம். ஸரிகம பதநிஸ்-ஸ்நிதபமபகரிஸ. பாஷாங்கம்.

76. மாதவ மனோஹரி. கரகரப்ரியாவின் ஜன்யம். உபய வக்ரராகம். ஸரிகம நிதநிஸ்-ஸ்நிதம பதம கரிஸ.

77. மாயாமாளவ கௌளை. அச்னி சக்ரத்தின் மூன்ருவது ராகம். 15-வது மேளராகம். சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்யம், சுத்ததைவதம், காகலி நிஷாதம். எண்ணிறந்த ஜன்ய ராகங்களையுடையது. எப்பொழுதும் பாடலாம்.

78. மார்க்கஹிந்தோள . நடபைரவி ஜன்யம். ஸரிகம பதநிஸ்-ஸ்நிதமகஸ.

79. முகாரி. 20-வது மேளமாகிய நடபைரவியின் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபதஸ்-ஸ்நிதபமகரிஸ. ஆரோஹணத்தில் காந்தார நிஷாதம், வர்ஜமாயிருப்பினும் வக்ரமாக ப்ரயோகிக்கப்படுகின்றன. பாஷாங்க ரக்தி ராகம். ஜனக ராகத்தையனுசரித்து ஆரோஹணத்திலும், அவரோஹணத்திலும், சில ஸஞ்சார விசேஷங்களில் சதுச்ருதி தைவதம் உபயோகப்படுகின்றது.

80. மோஹனம். 65-வது மேளமான மேச கல்யாணியில் ஜன்யம். ஸரிகபதஸ்-ஸ்தபகரிஸ. காந்தாரம், தைவதம் ஜீவஸ்வரங்கள். உபாங்கம். எப்பொழுதும் பாடத்தகுந்தது.

81. யதுகுலகாம்போஜி. ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ. பாஷாங்க ரக்தி ராகம். மத்யமம், தைவதம் சாயாஸ்வரங்கள். எப்பொழுதும் பாடத்தகுந்தது.

82. ரஞ்ஜனி. 59வது மேளமாகிய தர்மவதியின் ஜன்யம் ஸரிகம தநிதஸ் -ஸ்நிதமகஸ. வக்ர ராகம்.

83. ராகபஞ்சரம். ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஸரிமபதநிதஸ் ஸ்நிதமரிஸ.

84. ராமப்ரிய. 52வது மேளராகம். சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், ப்ரதிமத்யமம், சதுச்ருதி தைவதம். சைகிகி நிஷாதம். தீக்ஷிதர் இதை ராம மனோஹரி என்றழைக்கிறார்.

85. ரமா மனோஹரி. ராமப்ரியா ஜன்யம். ஸம்பூர்ண வக்ரம். ஸரிகமபதநிதஸ் - ஸ்நிதபமரிமகரிஸ.

86. ரீதி கௌளை. கரஹரப்ரிய ஜன்யம். வக்ரஷாடவ வக்ர ஸம்பூர்ணராகம். ஸகரிகம நிதநிஸ் - ஸநிதமகமபமக ரிஸ. பாஷாங்க ராகம். மந்த்ரஸ்தாயி நிஷாதம், காந்தார மத்யம நிஷாதங்கள் ஜீவஸ்வரங்கள். கமகநிஸ் ரஞ்ஜனையுள்ள ப்ரயோகம். சுத்ததைவதம் அல்ப ப்ரயோகம்.

88. லதாங்கி. 63வது மேள ராகம். சதுஸ்ருதி ரிஷபம், அத்தர காந்தாரம் ப்ரதிமத்யமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம். 11வது ருத்ர சக்ரத்தின் 3வது ராகம்.

90. வராளி. 39வது மேளகர்த்தா ராகம். ரிஷிசக்ரத்தின் 3வது ராகம். கடபயாதி ஸங்கயைக்காக 'ஜால' என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. வெங்கடமகி ஸம்பிரதாயத்தில் தாலிவராளி எனப்பெயர். ஸர்வஸ்வர கமகவரிக ராகம். கனபஞ்சகத்திலொன்று. காந்தாரம், மத்யமம் ராகச் சாயாஸ்வரங்கள். கருணரஸம் பொருந்திய ராகம். எப்பொழுதும் பாடலாம். சுத்த ரிஷபம், சுத்த காந்தாரம், ப்ரதிமத்யமம், பஞ்சமம், சுத்த தைவதம், காகலி நிஷாதம்.

91. வஸந்த. 17வது மேளமாகிய ஸூர்ய காந்தத்தின் ஜன்யம். ஸரிகமதநிஸ் ஸ்நிதமகரிஸ. உபாங்கம். காலை நேர ராகம்.

93. விஜய வஸந்தம். வருணப்ரியாவின் ஜன்யம். ஸகரிமபஸ் - ஸ்நிதபமகரிஸ. ஆரோஹணத்தில் தைவதமும் நிஷாதமும் வர்ஜம்.

94. விஜயஸ்ரீ. 41-வது மேளமாகிய பாவனியின் ஜன்யம். ஸரிகமபநிஸ் - ஸ்நிபமகரிஸ.

95. மேகவாஹினி. சக்ரவாகத்தின் ஜன்யம். ஸரிகம பதநிதஸ் - ஸ்நிதபமகரிஸ.

96. ஸஹான. 28வது மேளமாகிய ஹரிகாம்போஜியின் ஜன்யம். வக்ர ஸம்பூர்ணம். பாஷாங்கம். வக்ர ஸஞ்சாரங்கள் ராக ரஞ்சனையைக் கொடுக்கும். ஸரிகமபம தாநிஸ் - ஸ்நித பமகாமரீகரிஸ.

97. ஸாவேரி. மாயா மாளவ கௌளையின் ஜன்யம். ஔடவ ஸம்பூர்ணம். ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ. அந்தர காந்தாரம், சுத்த மத்யமம், சுத்த தைவதம் சாயா ஸ்வரங்கள். காந்தார நிஷாதஸ்வரங்கள் ஜனக ராகத்திற்கு ஏற்பட்டதில் சற்று குறைவாகவே ஸ்புரிப்பது அனுபவத்தில் காணலாம். 'ஸநிஸநிசா' 'ஸரிமாகரி' என்ற ப்ரயோகங்களில் காகலி நிஷாதமும், அந்தரகாந்தாரமும், 'பதநிபமகரிஸ' என்னுமிடத்தில் கைசிகி நிஷாத ஸாதாரண காந்தாரஸ்வரங்களும் காணப்படுகின்றன. ஆகவே இது பாஷாங்கம். ஸர்வஸ்வர்கமகவரிக ரக்தி ராகம். பகல் இரண்டாம் ஜாமத்தில் பாடத்தகுந்தது.

98. ஸாரங்க. மேசகல்யாணியின் ஜன்யம். ஸம்பூர்ண வக்ர ஸம்பூர்ண. ஸரிஸபமபதநிஸ் - ஸ்நிதபமரிகம ரிஸ. பாஷாங்க ராகம். 'ரிகமரிஸ' என்னும் ப்ரயோகத்தில் சுத்தமத்யமம்.

99. ஸாரமதி. நடபைரவியின் ஜன்யம். ஸரிகமபதநிஸ் - ஸ்நிதமகஸ - ஸம்பூர்ண ஔடவம். அவரோஹணத்தில் பஞ்சமமும், ரிஷபமும் வர்ஜம்.

100. ஸிந்து ராமக்ரிய. மாயா மாளவ கௌளையில் ஜன்யம். ஷாடவ வக்ர ஷாடவ ராகம். ஸகம பதநிஸ் - ஸ்நிபத பமகஸ. ரிஷப வர்ஜம்.

101. ஸம்ஹ வாஹினி. ஸரஸாங்கியின் ஜன்யம். ஸகம பதநிஸ் - ஸ்நிதபமகரிஸ.

102. ஸிம்ஹேந்த்ர மத்யமம். 57-வது மேள ராகம். சதுச்ருதி ரிஷபம் ஸாதாரண காந்தாரம், ப்ரதிமத்யமம், சுத்ததைவதம், காகலி நிஷாதம்.

103. ஸித்தஸேன. கரஹரப்ரியாவின் ஜன்யம். உபய வக்ர ராகம் ஸகரிகமபதஸ் - ஸ்நிதமபமரிகரிஸ. ஆரோஹணத்தில் மட்டும் நிஷாதம் வர்ஜம்.

104. ஸுத்த தேசி. நடபைரவியின் ஜன்யம். ஷாடவ ஸம்பூர்ணம். ஸரிமபதநிஸ - ஸ்நிதபமகரிஸ. ஆரோஹணத்தில் காந்தார வர்ஜம்.

105. ஸுத்த பங்காள. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிமபதஸ். ஸ்தபமரிகரிஸ வக்ரராகம்.

106. ஸுத்த ஸாவேரி. ஹரிகாம்போஜியின் ஜன்யம். உபாங்க ராகம். ஔடவம். ஸரிமபதஸ் - ஸ்தபமரிஸ.

107. ஸுப்ரதீப. ஸௌர்யகாந்தத்தின் ஜன்யம். வக்ர ராகம். ஸரிமபதநிஸ் - ஸ்நிதபமகமரிஸ.

108. ஸுரடி. 28-வது மேளமாகிய ஹரிகாம்போஜியின் ஜன்யம். ஔடவ வக்ர ஸம்பூர்ண ராகம். ஸரிமபநிஸ் ஸ்நிதபமகபமரீஸ. உபாங்கராகம். ரி, ம, நி, ராகச்சாயா ஸ்வரங்கள். கைசிகி நிஷாதம் இந்த ராகத்திற்கு மூர்ச்சனா ஸ்வரம். லக்ஷியத்தில் மந்த்ரஸ்தாயி நிஷாதத்திற்குக் கீழ் ஸஞ்சாரம் காண்பது அரிது. கமக வரிக ராகம். மிக மங்களகரமான எப்பொழுதும் பாடத்தகுந்த ராகம்.

109. ஸைந்தவி. கரஹரப்ரியாவின் ஜன்யம். நிதநி ஸரி கமபநி - தபமகரிஸ. நிஷாதாந்த்ய ராகம்.

110. ஸௌராஷ்ட்ரம். ஸ்ரீர்யகாந்த்தின் ஜன்யம். வக்ர ராகம். ஸரிகமபதநிஸ் - ஸ்நிதாபமகமரீஸ. பாஷாங்கம். 'பதநிதபா' என்னுமிடத்தில் கைசிகிநிஷாதம். ரிஷப, காந்தார தைவத கைசிகிகாகலி நிஷாத ஸ்வரங்கள் ராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடலாம்.

111. ஷண்முகப்ரிய. 56வது மேள ராகம். சதுஸ்ருதி ரிஷபம், ஸாதாரண காந்தாரம், ப்ரதிமத்யமம், பஞ்சமம், சுத்த தைவம், கைசிகி நிஷாதம். ஸர்வஸ்வர கமகவரிக ரக்தி ராகம். ரி,க,ம,நி ராகச்சாயா ஸ்வரங்கள். எப்பொழுதும் பாடலாம். தீக்ஷிதர் இதை சாமர மென்கிறார்.

112. ஸங்கராபரணம். 29வது மேள ராகம். ஐந்தாவ தான பாண சக்ரத்தின் ஐந்தாவது ராகம். சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், ஸுத்த மத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம்; கடபயாதி ஸங்க்யைக்காக 'தீர' என்ற இரண்டு எழுத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

113. சுத்ததன்யாசி. நடபைரவியின் ஜன்யம். ஔடவ உபாங்கராகம். ஸகமபநிஸ் - ஸ்நிபமகஸ - உதயரவிசந்த்ரிகா என்ற மற்றொரு பெயரும் உண்டு.

114. ஹம்ஸநாதம். 60வது மேளமாகிய நீதிமதியின் ஜன்யம். ஷாடவ ராகம். ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ.

115. ஹமீர்கல்யாணி. மேச கல்யாணியின் ஜன்யம். ஸரிகமபதநி பதபஸ் ஸ்நிதபம கமகரிஸ. பாஷாங்கம். 'கமகரிஸ' என்னுமிடத்தில் சுத்த மத்யமம்.

116. ஹரிகாம்போஜி. 28வது மேளராகம். ஐந்தாவதான பாணசக்ரத்தின் நான்காவது ராகம். சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம், சுத்தமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம். அநேக ஜன்யராகங்களையுடையது.

117. ஸ்ரீராகம். கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிமபநிஸ் ஸ்நிபதநிபமரிகரிஸ. உபாங்கம். கன பஞ்சக ராகங்களில் ஒன்று. ரி, நி, சாயாஸ்வரங்கள். மங்களகரமான. ராகமாகையால் எப்பொழுதும் பாடலாம்.

118. ஸ்ரீரஞ்சனி. கரஹரப்ரியாவின் ஜன்யம். ஸரிகமத நிஸ் - ஸ்நிதமகரிஸ. உபாங்கம்.

கீர்த்தனங்களின் கருத்துரை

த்யாகராஜ ஸ்வாமியின் ஸாஹித்யம் ஆழ்ந்த சருத்துடை யது. வேதபுராண இதிஹாஸங்களின் ஸாரமான அம்சங்களையும், யோக ரகசியங்களையும் ஸுலக்ஷ்ணமாகக் குறிப்பது. ஆகையால், அதன் ரஸானுபவத்திற்கு ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு, இவற்றி லும், பழைய நூல்களிலும் திடமான தேர்ச்சி இன்றியமையா தது. நூலின் விரிவுக்களுக்குப் பதவுரை கூட ஸாத்தியமில்லா மல், வெளிப்படையான கருத்து மாத்திரம் கீழே தரப்பட்டுள் ளது. அதிலும், ரகுவர, லக்ஷ்மிபதி, ராஜீவநேத்ர, த்யாக ராஜனுத என்பது போன்ற ஸம்போதனங்கள் ஸ்பஷ்டமா யிருப்பதால் அவைகளை விளக்குவது அவசியமில்லை.

2. த்யாகராஜஸ்வாமி.—பஞ்சரத்னமென்ற திருவையாற் றில் நாரதருடைய அம்சமாக அவதரித்து, நாத தத்வத்தை நன்றாக அறிந்து, ராமபஜனையில் தீவிரமாக ஈடுபட்டு அழியா புகழ்பெற்று, அடியார்களிடம் வேற்றுமையின்றி உறவாடி, அநேககீர்த்தனங்களைச்செய்தருளி, வேணுகோபாலதாஸர் என்ற மஹா பரிபக்வத்தரான வீணை குப்பையர் அவர்களுக்கு உப தேசம் செய்து நல்வழி காட்டி பக்தர்களில் முதல்வராக விளங் கிய த்யாகராஜஸ்வாமி என்ற குருச்ரேஷ்டரை எப்போதும் மிகுந்த பிரேமையுடன் த்யானிக்கிறேன்.

3. ஜகதானந்த.—இந்த க்ருதி அழகு மிகுந்த ஸம்போ தனங்கள் நிறைந்தது.

4. துடுகுகல.— எங்கும் உறையும் இறைவனை அறியா மல், வாலிப்பருவம் முதல் அவனுடைய திருநாமத்தை சிந்திக் காமல், குதர்க்கங்கள் செய்து பிறர் மனமுருகப்பேசிப் பொருள் பறித்து, வயிர்வளர்த்து, தன்னலம் சருதி இறுமாந்து, ஆயுள் கழித்து, கடவுளை நாடாத துஷ்டர்கள், பெண்டிர், முதலியவர் களை வசப்படுத்தி, இன்புற்று, ஸ்வரம், லயம், இவற்றில் சற் றும் அறிவின்றி, பாகவதோத்தமர்களுக்கு நிகராக தன்னை யெண்ணி, பகட்டான பொருள், வீடு, பரிவாரம் முதலியவை களை நம்பி பசவானின் சுமலத்தாள்களை மறந்து, அவனது திரு முகத்தை சிந்தியாமல் சபலம் மிகுந்து, துராசைகளுக்கடிமை யாகி, மனிதப்பிறவியின் பயனையிழந்து, அற்ப ஆசைகளை மனத் தில் வைத்து, காமக்ரோதம், அதமர் உறவு இவைகளில் சிக்கி, ஸம்ஸாரக்கடலில் மூழ்கி, நெறி இழந்த என்னைக் காக்கும் துரை மசன் எவனே ?

5. ஸாதிஞ்சேனே.—மனமே, போதிக்கப்பட்ட நன்னெறி மொழிகளைப்பொய்யாக்கி, தன்ஸாஹஸத்தைவிட்டானில்லையே. அரங்கன் என்ற நாமம்பூண்டு, பாவனமிகு கங்கையைப்படைத்து, இசைமுறை நன்கறிந்து, தேவகி வஸுதேவர்களை சிறை மீட்டு, கோபிகளின் மனம்பறித்து, அவர்களைக் சேலி செய்து, தன் வனப்பில் ஈடுபட்டு யசோதையின் குழந்தையேயென்று மகிழ்ந்து தன்னை வாரியெடுத்து முத்தமிடும் பெண்களை நாணும் படி நகைத்து, கலியின் கொடுமைகளை அகற்றுபவன் என்று

அவனை நம்பி துதித்து வணங்குபவனை உதாசீனம் செய்து, நல்லோரின் லக்ஷணங்கள் இவையென்றுரைத்து, தீயோர் உறவொழித்து, துயர்பொறுத்து இன்புறுவாய், என்று மொழிந்து, என்னருகில் வராமல் தன் ஸாஹஸத்தை நிறை வேற்றிக்கொண்டானே. (சிந்தா ஸ்துதி).

6. எந்தரோ.—மதியின் ஒளியமைந்த மங்கள ஸ்வரூபனை ஸ்ரீராமனை தம் ஹ்ருதயமாகிற அரவிந்தத்தில் வீற்றிருக்கக்கண்டு பேரின்பம் அனுபவிப்பவர்களும், மனக்குரங்கை யடக்கி இறைவனைத் துதித்து அவனுடைய தாள்களில்மனதைச் செலுத்தியவாகளும், ஸ்வரம், ராகம், லயம் இவைகளை அறிந்து இவற்றின்மூலம் தீமை விலக்கிப் பெரும்பேறளிக்கும் பரமனை இன்னிசையுடன் போற்றி வணங்குகிறவர்களும், உலகனைத்தையும் வாழ்விப்பவர்களும், கடவுளை ஸாக்ஷாத்கரித்து, மெய் சிலிர்த்து அவனிடம் லயித்தவர்கள் என்ற கீர்த்தி வாய்ந்தவர்களும், முனிச்ரேஷ்டர்களும், ப்ரஹ்லாதன், நாரதர், தும்புரு, ஹனுமான், பரமசிவன், சுகர், ப்ரஹ்மா முதலியவர்களும், சிரஞ்ஜீவியாய் விளங்குபவர்களும், பகவானுடைய கல்யாண குணவைபவங்களை ஆனந்தமாகக்கொண்டாடி அவனுடைய தூய நாமங்களைப்பாடி, வேத சாஸ்திர இதிஹாஸ புராணங்களின் உட்கருத்தையும், தேவரஹஸ்யங்களையும், இசை நுட்பங்களையும் அறிந்தவர்களும், ஸ்ரீராமனுக்கு அடியார்களாய் உள்ளவர்களும்,...இத்துணை மஹிமைவாய்ந்த பெரியோர்கள் அனைவருக்கும் வணக்கம்.

7. கனகனருசிரா.—பால்வடியும் அழகியமுகம் படைத்து, மங்களகரமானதும், அழிவற்றதுமான மஹிமைபொருந்தி, எழில் நிறை பிராட்டியின் கடைக்கண் நோக்கிற்கு இலக்காகி, பாலஸூர்யனைப்போல் ப்ரகாசிக்கும் உடையுடுத்து, ரத்ன மிழைத்த மாலைகள் கழுத்தில் விளங்க, கஸ்தூரிதிலகம் நெற்றியை அலங்கரிக்க, இப்படி காக்ஷியளிக்கும் ஸ்ரீராமா, குருவனால் வணங்கப்பட்டு, ஜடாயுவிற்கு மோக்ஷமளித்து, பிராட்டி மூர்ச்சை அடையும்படி ஆஞ்சனேயர் விரித்துரைத்த பெருமை வாய்ந்து, அண்டினவர்களைக் காப்பவன் என்பதற்கு பக்தர்களையும், சிவன், நாரதாதி ரிஷிகள், முதலியவர்களையும் ஸாக்ஷியாக வுடைய ஸ்ரீராம, உன்னைத் தினந்தோறும் அன்புடன் த்யானித்துக் கண்ணுரக் காணக்காண இன்பம் தருமே.

8. ஆரகிம்பவே.—ஜனகரின் புதல்வியான ஸீதாதேவியின் திருக்கரங்களினால் உயர்வுபெற்ற வெண்ணை, பால், அறுசுவை பக்ஷணங்கள், பலவகை உண்டிகள், இவைகளைத் தம்பிகளுடனும், பிராட்டியுடனும், உண்டுகளிப்பாயாக.

9. ஏமனி.—உறவினர், தம்பிமார், தாய்தந்தையர், மாதர், பணியாளர், இவர்களனைவரும் உன்வசப்படவும், அரசர், முனிவர், அஷ்டதிக் பாலகர், சந்த்ரஸூரியர் முதலியோர் உன்னிடம் அன்பும் பணிவும், செலுத்தவும், நீ எந்த விதம் இங்கிதமறிந்து இன்மொழி பகர்ந்தனையோ!

10. கடதேர. மனமே, மெய்பொய்யறிந்து, எப்பொழுதும் பகவத்பஜனை செய்து, ஸ்ரீக்ருஷ்ணனுடைய பக்தனாக விளங்கி, தீயவர்கள் வலையில் சிக்காமல் கடைத்தேறக்கூடாதா?

11. சேஸினதேல்ல.—ஸீதையைத்தேடி ஸுக்ரீவனுடன் உறவாடியதையும், விபீஷணனுக்கு கொடுத்த வாக்கை நிறை வேற்ற லக்ஷ்மணனுக்கு உத்தரவிட்டதையும், ஸீதாபிராட்டி

யின் தூதை அறிவித்த ஆஞ்சனேயருக்கு ப்ரும்மபட்டம் அளித்ததையும், இப்பொழுது உன்னிடம் பக்தியுண்ட என்னை அல்லலுறச்செய்யவே மறந்தனையோ.

12. நீ தயராவலே. அஸுரர்களை அழித்தவனே! அழகிய ரூபமும் நல்லகுணங்களும் புஜபலபராக்ரமமும் வாய்ந்து ஸூர்யவம்ஸத்திற்கு திலகம்போன்று, முனிவர்களின் உள்ளத்தில் அமர்ந்து, காமக்ரோதம் முதலிய அறுவகைத் தீய குணங்களை அசற்றும் வல்லமை கொண்டு, ஆதி அந்தமில்லாமல் விளங்கும் ஸ்ரீராம! ஸகல அறநூல்களும் உன்னையே புகலிடமாகத் தெரிவிக்கையில் உனது தயையில்லையேல் நான் எம்மாத்திரம்?

13. நேமோ.—பயனை வேண்டி நான் தவம் செய்ததில்லை. எதையும் யாசித்ததில்லை. வஞ்சகமாக, எதையும் சொல்லவில்லை. மனிதரை நாடாமல் உன்னையே கோருவதில் உனக்கு ஆயாசம் ஏன்?

14. ப்ரோத்து. மனமே! போகத்திலும் உறக்கத்திலும் நாட்சில கழியும். விடியுமுன் எழுந்து, கரஸ்துதிசெய்து, பட்டி எருதுபோன்று கானுமிடந்தோறும் உண்டு, எதையும் அறியாமல் நாட்சில கழியும். ப்ரமையையுண்டுபண்ணும் பவஸாகரத்தில் முழுகித்திளைத்தும், பாமரர்களுடன் வீண்வார்த்தையாடியும், தனது இருப்பிடம், செல்வம், முதலியவற்றைக் கண்டு பூரித்தும், அவற்றைப் பின்னர் இழந்து துக்கத்தில் ஆழ்ந்தும், மூப்பு வரும்காலை முன்பின் அறிவிழந்தும், யாகம் முதலிய கர்மங்களில் உழன்று அல்லல் பட்டும், பேராசையினால் தூண்டப்பட்டு ராஜஸம் மிகுந்தும், உனது நாம கீர்த்தனம் செய்வதே பர்க்கியம் என்று அறியாமலும், நாட்சில கழியும்.

15. ஜனகஜ.—ஜனகரின் புதல்வியான ஸீதாதேவியுடன் காகுத்ஸியளிப்பவனே! பாபிகளின் திக்செயல்களைக் கண்டிப்பதில் மிகுந்த ஸௌர்யம் வாய்ந்தவனே! ஸனகாதி முனிகள் போற்றுபவனே! நல்லோரின் கூட்டங்களுக்குப் பாரிஜாதம் போன்றவனே! தேவாதி தேவனே! உயிரனைத்திற்கும் ரக்ஷகனே! மன்மதனின் விரோதியான பரமசிவனின் உள்ளத்தில் குடிகொண்டவனே! நல்லகுணங்களாகிற ரத்னங்கள் நிறைந்த களஞ்சியம்போன்றவனே! கமலம்போன்ற சிவந்த திருவடிகளை உடையவனே! அஸுரர்களாகிற மேகங்களைச் சிதறடிக்கும் புயற்காற்றையொத்தவனே! மாயையொழிந்தவனே! தாமஸம் மிகுந்த மனிதர்ச்கு எட்டாதவனே.

16. லெகஜ.—ஸீதாதேவிக்கு உனது ஸௌந்தர்யத்தில் இன்பம். உனது கண்ஜாடையறிந்து ஏவல் புரிவதில் லக்ஷ்மணனுக்கின்பம். பரதனுக்கு உனது ஸுந்தர வதனத்தைக் கண்டு ஆனந்தம். சத்ருக்னனுக்கு உனது ஞானவடிவைச் சிந்திப்பதில் ஸுகம். ஆஞ்சனேயருக்கு உனது திருவடிகளை தரிசிப்பதில் ஆனந்தம். உன்னை அடைந்தவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கும் சிந்தாமணியைப்போன்ற உன்னிடம் அழிவற்ற ஆனந்தம் இல்லாமலா உன்னைச் சூழ்ந்துகொண்டனர்?

17. தெலியலேரு.—அங்குமிங்கும் திரிந்து கலவரப்பட்டு, விடியுமுன் எழுந்து ரோடி, விபூதியணிந்து, வெளிக்குப்போற்றத் தகுந்தவர்போல் வேஷம்தரித்து பொருள் சம்பாதிப்பதில் மூன்றனரேயொழிய, ராமபக்தியினால் ஏற்படக்கூடிய ஸன்மார்க்க அறிவு சிறிதும் இவர்களுக்கு இல்லையே.

18. தாஸரதே.—இந்த க்ருதி எளிய ஸம்போதனங்கள் நிறைந்தது.

19. ஸமயமு.—நல்ல அறிவுள்ளவர்களுடன் சேர்ந்து உண்மையான இன்பம் பெறவும், உள்ளத்தில் எழும் அச்சம், ஐயம், முதலியவற்றைப் பக்தி பெருக்கினால் அகற்றவும், குற்றங் களனைத்தையும் பொறுத்துக் காக்கும் ஸ்ரீராமனை தரிசிக்கவும் இதுதருணம். மனமே, இதைக் கைவிட்டு ஏமாறுதே.

20. ஸ்ரீஜ்ஞகதனயே. பிரகாசிக்கிற ஆபரணங்களை உடைய வரீதாதேவியே, என்னைக் காப்பாய். நல்லோர் மனதில் குடி கொண்டவளே, மேகம்போன்று திரண்டு வரும் அரக்கர் கூட்டங்களைச் சிதறடிக்கும் சண்டமாருதம் போன்றவளே, ரத்னமிழைத்த கிரீடத்துடன் பிரகாசிப்பவளே, தாமரையை ஒத்த திருவடிகளை உடையவளே.

✓ 21. விதுலகு.—சங்கீத மர்மம் அறிந்த பெரியோருக்கு வணக்கம். சிவனார் மகிழ்ந்து அருளிய ஸாம வேதத்தின் சாரத் தையும், பிரணவநாதமே உருவெடுத்த ஸப்த ஸ்வரங்களின் உண்மையையும் அறிந்தவர்களுக்கு வணக்கம். லக்ஷ்மி, பார் வதி, கலைமகள், பிரம்மா, விஷ்ணு, சிவன், நாரதர், இந்திரன் பரதமுனி முதல், சார்ங்கதேவர் வரை ப்ரம்மானந்த மாகிற அம்ருதக்கடலின் ரகசியம் அறிந்த பெரியோர் அனைவருக்கும் வணக்கம்.

✓ 22. கர்மமே.—பரிசுத்தமான நாகப்பட்டினத்தில் கோயில் கொண்டு உலகனைத்தையும் சடாக்ஷித்து வரும் நீலாயதாக்ஷியே. உலகில் செல்வம் படைத்தவர்களை நாடி என் துயரம் தீரா தென்று அறிந்து, பொன்னுலை ஒழித்து, உன் கருணையே செல் வம் என்று மனதாரச் சரணடைந்து, மஹா புனிதையான உன் ஸந்நி திக்கு விரைந்து வந்தேன். உனது அடியவனை என் விஷயத் தில் கூடக் கர்ம பலமே பெரி தாகுமோ ?

23. நீவுப்ரோவ வலே.—உலகனைத்திற்கும் தாயான நீ என்னை ரக்ஷிப்பாய். அறம் வளர்த்த நாயகியே, உனது திவ்ய தரிசனம் எனக்கு எப்பொழுதும் தருவாயாக, உன்னைப் போன்ற கருணை நிதி நான் எங்கும் கண்டிலேன். பஞ்சனதீ ச்வரரின் நாயகியே, என் உள்ளத்தில் அமர்ந்த உன்னை மற வேன். இது காறும் நான் செய்த பிழைகளை எண்ணாமல் என் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்து காப்பாற்று. புத்தியை மயக்கும் ஸம்ஸாரத் தொல்லைகளை ஒழிக்க எனக்கு உனது பாதங்களில் பக்தியை அருள்வாய். என்னிடம் வஞ்சனையும் பராமுகமும் காட்டுவது நியாயமல்ல. தியாகராஜன் போன்ற மெய்யடியார்களின் இருதயத்தில் அமர்ந்து மூவுலகிற்கும் ஆதாரமாயிருந்து நன்மை செய்து வரும் உன் மகிமைகளை இவர்கள் அறிய வில்லையே.

24. ராமம் பஜேஹம்—இந்த க்ருதி ராமனுடைய மகி மையை லலிதமான நடையில் விவரிக்கிறது.

25. இந்தனுத்ஸ-.—இதர தெய்வங்களை வேண்டி எவ் வளவோ கொடிய தவஞ் செய்து அரிய வரம் பெற்று அகங் கொண்டவர்களை எளிதில் அடக்கும் உனது பராக்கிரமத்தை யும், பிரஹஸ்பதி முதலிய தேவர் கூட்டங்களும் வேதம், ஆகமம், சாஸ்திரம் முதலிய தத்துவ நூல்களும் காண முடி யாததும், ஸர்ப்பத்தை அணிந்த சிவனார் போற்றுவதுமான உனது மகிமையையும், பார்ப்போர் கண்களைக் குளிரச்செய்யும் முகமும், மதுரமான மொழியும், அபயம் அளிக்கும் கையும் பிற விக்குணமாக அடைந்த உன் பெருமையையும் ஒப்பற்ற உனது

மோனி அழகையும் இவ்வள வென்று வர்ணிக்க பிரம்மா, இந்திரன் முதலியவர்களுக்கும் முடியுமா ?

26. தேவாதிதேவ.—தேவதேவனே, மூக்கண் படைத்தவனே, ப்ரஹ்மா, இந்திரன் முதலியோர் தேடும் பரதெய்வமே, பிறைசூடி, ஆலமுண்டு, புன்னகை தவழும் திருமுகத்தவனே, உன் பாதத்தில் என் பக்தி வளரட்டும்.

27. மோஸ போகு.—அற்ப மனிதர்களை ஆச்ரயிப்பதால் நேரும் துக்கங்கள் முடிவற்றவை. பெண், பொன் இவற்றை விரும்புவது மீண்டும் பிறப்பையே தரும். ஆசையால் இந்திரன் மனதில் உறைபவனும் அடியார்களின் துயர் தவிர்ப் பவனும் மோக்ஷமாயியுமான ஸ்ரீராமனை அறியாமல் மோசம் போகுதல் தகாது.

28. ராகாசசிவதன.—பூர்ணசந்திரன் போன்ற அழகிய முகத்தையுடையவனே! இன்னும் பராமுகம் என்? கருணைக் கடலான உனக்கு இக்குணம் தகுதியன்று. உன்னையே நம்பின தாஸர்களுக்கு அபயமளித்துப் பின்னர் அவர்களை மறக்கலாமா? தினந்தோறும் உன்னிடம் வந்து முறையிட்டவர்களை இப்படியே காப்பாற்றினையோ ? உனக்கே தெரியுமென்று நான் உன்னடி பணிந்தேன். என்னை ஏற்றுக் கொள்ளுவாயாக.

29. வராலந்து.—உன்னை மனதிற் கொண்டவர்களுக்கு அற்ப ஸுகங்களில் மனம் செல்லாது என்பதற்கு பரஹ்லாதன் ஸாக்ஷியல்லவா? விவேகமில்லாததனால் அறிந்தும் அறியாமலும் வாழ்வின் இன்பங்களில் புத்தி சென்றாலும், அழிவற்ற ஸுகத்தை அளிக்க வல்லது உனது சக்தி என்பதற்கு துருவன் ஸாக்ஷியல்லவா? ஆசையால் நிஷ்காம்யமாக உன்னிடம் பக்திகொண்டு உனது அருளையே கோரும் எனக்கு வரமளிக்கிறேனென்று சொல்லி வஞ்சிப்பது நியாயமா ?

30. ஒக பாரி.—ஸுகர் த்யானித்து வழிபடும் ஸ்ரீராம! அஷ்டதிக் பாலகர்கள், சந்தரஸூர்யர், தும்பாதனர், முதலியோர் உன் கருணை நிறைந்த பார்வையினால் மஹிமை பெற்றனரன்றோ ? அங்ஙனமே மனமுவந்து என்னை ஒரு தடவையேனும் கடாக்ஷிக்கக் கூடாதா ?

31. சல்லக நாதோ.—உன்னை நான் மிகவும் காமுறுகிறேன். என் குற்றங்களைப் பாராமல் என்னிடம் இன்மொழி பகர்வாய். இந்த க்ருதி எளிதில் விளங்கும் ஸம்போதனங்கள் நிறைந்தது.

32. என்னடோ.—பக்தர்களை முன்பு சாத்த நீ இப்பொழுது இங்ஙனம் இருப்பதுதகுமா? பெரியவர்களின் தன்மை இப்படியிருப்பதோ ? உயிரினங்கள் யாவும் தத்தம் அலுவல்களை மேற்கொள்ளச் சூரியோதயத்தை எதிர்பார்க்கின்றன என்பதை அறிந்து மனமிரங்கித் தன் ஸாரதியான அருணனைக் கதிரவன் விரைந்து அனுப்பவில்லையா ? நல்லோரின் தேவையைப் பூர்த்தி செய்யக் காவேரி தன் பிரவாகத்திற்கு முன்னரே மேல்காற்றையும், நீரூற்றுக்களையும் தூண்டிவிட்டு எல்லோருக்கும் ஆனந்தத்தை உண்டுபண்ணவில்லையா ? ராவணனுடைய தொல்லைகளைப் பொறுக்காமல், விபீஷணன் உன்னையடைந்து, "ஸர்வலோகசரண்ய, வந்தனம்," எனவும், நீ "தஞ்சமென்ற வரைக்காப்பதென்சடன்" என்று சொல்லி, அவனுக்கு இலங்கை முடிசூட்ட மதிமானை லக்ஷ்மணனுக்கு ஏவல் செய்தா

யன்றே ? இப்படியெல்லாம் முன்பு காத்தவனுகிய நீ இப் பொழுது இவ்வாறு இருப்பதேன் ?

33. தேவராம. தெய்வத்தன்மை வாய்ந்து, தேவதேவனுக விளங்கும் ராகவனே ! சிவனுர் உள்ளத்தில் திருவிளையாடல் புரிபவனே, பவக்கடலுக்கு ஒரு தோணிபோல விளங்குப வனே ! நலம் செய்யும் கருணைநிதியே, எப்பொழுதும் கையிலேந்திய அம்புகளுடன் காக்ஷியளிப்பவனே, பக்தர்களை வசப்படுத்துகிறவனே ! அஸுரர்களை மாய்ப்பவனே ! ஐய மொழித்து நல்லுணர்ச்சி பெற்ற தியாகராஜனுடைய குலதெய் வமே !

34. நேரமா ராம. என் வாழ்விற் காதாரமான உனக்கு இது ஒரு குற்றமாகத் தோன்றலாமா ? கோடி மன்மதர்களின் அழகு வாய்ந்த உன்னைக்கண்டு சிறிது அயர்ந்தது என் குற்றமா? உனது பூஜையில் மனமார ஈடுபட்டு, உனது திருவடித்தாமரை களைக்கண்டு, மார்போடு அணைப்போமா, சண்களில் ஒத்திக் கொள்ளுவோமா, என்று சிறிது நேரம் அயர்ந்து இருந்தேனே யொழிய உன்னிடம் நான் தவறு செய்தேனு ?

35. வரஸிகிவாஹன.— புஷ்பங்களை பாணங்களாகத் தொடுக்கும் மன்மதனைக் காட்டிலும் அதிக ஸுந்தர வடிவம் கொண்டு, தாமரைக்கண்ணனுக மயில்மீது பவனி வருபவனும் தாரகஸுரர, பீத்மாஸுரர்களைப் பஞ்சனமாய்த்து, ஹிமவான் புதல்வியான பார்வதிதேவியின் புதல்வனுமான குமரக்க வுளே ! மங்களத்தைக்கொடு.

36. எட்ல தோரிகிதிவோ.—என்னைச் சுற்றிலும் உள்ளவர் களில் ஒருவருக்காவது என்னிடம் அபிமானம் இல்லை. அப் படியிருக்க, என் துயரைப்போக்கும் நீ எனக்கு அகப்பட்டது உன் திருவடியைப் பஜித்ததன் மஹிமையோ, பெரியவர்கள் எனக்குச் செய்த ஆசீர்வாதத்தின் பலமோ, அல்லது ஸுஸ் வரமான நாதத்துடன் கூடிய ஸங்கீதத்தின் பலனே ?

37. பணிபதிஸாயி.—அகஸ்தியரைச் காத்தவனே, கோடி கோடி மன்மதர்களுடைய லாவண்யமும், இரத்தினங்கள் ஜொலிக்கும் கிரீடமும், சிரேஷ்டமான யானையின் கம்பீர நடை யும், கமலம் போன்ற கண்களும், அழகிய முகமும் அமைந்து, சேஷ சயனனுக விளங்கும் தயாநிதியே, என்னைக் காப்பாய்.

35. இந்துகா.—என்னை எவ்வளவோ அல்லல் படுத்தி வேடிக்கை பார்க்கவா ? அருகிலுள்ளவர்களிடம் எந்நாளும் நான் துன்பப்பட்டு ஏக்கமடைந்து உன்னை நொந்துகொள்ளவா? எபபொழுதும், பெண்டு பிள்ளைகள், மாடு, மனை முதலிய துராசைகளும், பொன்னுசையும் அதிகரித்து எந்தத்தீச்செயலை யும் பாராத வேஷதாரிகளுடன் வாழ்ந்து உழலவா எனக்குப் பிறவி அளித்தாய் ? பாவம் ஒழித்துப்பவப்பிணியகற்ற உனது அழகிய கண்களினுல் என்னைச் சிக்கிரம் பார்.

39. ஸ்ரீரகுவர. ரகுகுல ச்ரேஷ்டனே ! நற்குணம் நிறைந்தவனே ! தாமரைக் கண்ணனே ! ஸூர்யனைப்போன்ற காந்தியுடையவனே ! என் உன்குலத்திற்குத் தகாத இநதப் பராக்கு ? என்னை விரைந்து காவாயா ? லக்ஷ்மிதேவியின் அன்புக்குப்பாத்திரமானவனே ! தாமரையின் எதிரியான சந்திரனைத்தரிக்கும் பரமசிவனுர் வணங்குபவனே ! என் உள்ளத்தையறிந்து என்னை மன்னித்து அன்புடன் என்னைப்

பார்த்து என் கோரிக்கையைச் செவியேற்று உனது திருக்கரங்களால் என்னைத் தொட்டு என்னுடன் பேசமாட்டாயா ?

40. சேதுலார.—மெருகிட்ட பொன் சங்கிலிகளால் உனது கால்களை அலங்கரித்து, உயர்ந்த ஜரிகை வஸ்திரங்களை இடுப்பில் சுற்றி, மன்மதபாணம் என்ற சிறந்த மல்லிகைப் புஷ்பத்தை உன் கூந்தல் நிறையச்சூட்டி, உனது அழகிய முகத்தில் முத்தமிட்டு, பொன் கச்சைகளை கோர்த்து இடுப்பில் சுற்றி நெற்றியில் திலகமிட்டு, முன்னுச்சியில் சூர்யப்ரபையை வைத்து, உன்னை மார்போடணைத்து, உனக்கு முத்துக்களால் கொண்டைவைத்து, நறுமணம் உள்ள சந்தனம் பூசி, ஸரஸ்வதி விசிறிகொண்டு உனக்கு கைங்கரியம் செய்யவும் என்கைகளினால் உனக்குப் பலவிதமான அலங்காரங்களைச் செய்து கண்டு களிப்பேன்.

41. எந்தநி.—விசேஷ தவங்களைகொண்டு அதன்மூலம் தமசமாகி குணங்கள் பெற்ற ரிஷிபத்தினிகள் அநேகர் இருந்தும், உன்னைக் கண்ணாரக்கண்டு, ருசியான பழவர்க்கங்களை உனக்கு ஸமர்ப்பித்து, பெய்சிலிர்த்து, உன்னுடைய திருவடிகளைவணங்கி, உன் முன்னிலையிலேயே பிறவியொழித்து மோக்ஷம் பெற்ற சபரியின் பாக்யத்தை எவ்வளவென்று நான் விவரித்துக் கூறுவேன் ?

42. மோக்ஷமு.—பக்தியுடன் கூடிய ஸங்கீத ஞானம் இல்லாதவர்கள், ப்ராணவாயுவு, அக்னி இவை சேர்ந்து ஓம் என்ற ப்ரணவம் உதித்து அதினின்றும் ஸப்தஸ்வரங்கள் எழுந்தன என்கிற உண்மையை அறியாதவர்கள், வீணை ஒலியில் ஆசையிருந்தும் சிவதத்வத்தை உணராதவர்கள், ஜீவதசையில் பற்றொழித்து விரக்திமேலிட்ட ஞானமில்லாதவர்கள்— இத்தகையவர்களுக்குப் பரகதி கைகூடுமா ?

43. சலமேல.—உன்னிடம் மோகம்கொண்டு, பக்திமார்கத்தினுல் உன்னைத் துதித்துச்கொண்டிருச்கிற என்னிடம் உனக்கு ஏன் இந்த ஹடம் ? இனிச்சகியேன். எங்கு செல்வேன் ? என்ன செய்வேன் ? எவரிடம் முறையிடுவேன் ? வீணில் காலம் கழிப்பேனு ?

44. எந்து கேளகலிந்து.—அழகிய மொட்டுக்களைப்போன்ற பல்வரிசையுடன் பிரகாசிப்பவனே, லக்ஷ்மியின் உள்ளத்தில் உறைபவனே, உன்னை எத்தனைதான் வர்ணிப்பேன் ? உன் சொல்லே சொல். உனது குலுக்கு, உனது தளுக்கு, இவை உனக்கென அமைந்த வைபவமா ? உன்னை இறுகத் தழுவிக் கொள்வதெப்படியோ ?

45. ஸ்ரீராமபாதமா.—ப்ரம்மா, ஸனக ஸனந்தனர், இந்திரன், நாரதர் முதலியோர் போற்றும் ஸ்ரீ ராகவனுடைய திருவடியே, உனது கிருபை போதுமே. என் மனதில் வந்து உறைவாய். தாபம் பெறுக்காமல் கண்ணீர் விட்டபடியே சிலை உருக்கொண்டு வழியில்கிடந்த அகல்யையை கடாக்ஷித்துக் காப்பாற்றினாய். அவ்விதமே என்னையும் தன்யனாக்குவாய்.

46. ஸமுகான.—ப்ரம்மா முதலிய தேவர்களும், திக்பாலர்களும் உன்னைக் காணப்பெறுமல் ஒருமிக்க முறையிடவும் அவர்களுடைய எண்ணங்கள் நிறைவேறின வன்றே ? ஆகையினால் வஸிதா தேவி, லக்ஷ்மணன் முதலிய மகாத்மாக்களைத் தவிர பிறர் உன் எதிரில் நிற்க முடியுமா ?

47. ஸ்ரீமானினி.—வெகுநாளாய் நான் சொல்லுவது ஒன்றே தான். திரும்பத்திரும்ப, சொல்ல இயலாது. நான் கோரியது உனது தம்பிமார்களைப்போலவே பாதஸேவை செய்வதே. உனது சக்தியின் பலனைக் கிடைக்கும் நான்குவிதப் பயன்களும்கூட கவனிச்சும் அளவில் உன்னிடமிருந்து பக்தனைப் பிரிக்கும் மர்மம் உள்ளவைகளாகத் தோன்றுகின்றன. என் சஞ்சலத்தை மன்னிப்பாய்.

48. நகுமோமு.—ஆனந்தமயமான உன் திருமுகம் காணுமல் நான் அடையும் துயரத்தை நீ அறிந்து என்னை காப்பாற்றக் கூடாதா? உனது பரிவாரங்கள் இதை உனக்கு எடுத்துச் சொல்லமாட்டார்களா? அப்படியும் அவர்கள் இருப்பார்களா? கருடன் உனது ஆணை கேட்டு விரைந்து செல்லமாட்டானா? வானத்திலிருந்து பூமி வெகுதூரம் என்று சொன்னனை? எவரிடம் முறையிடுவேன், உலகனைத்தையும் பாலிச்சும் நீ என்னிடம் வஞ்சகம் காட்டவேண்டாம். என்னை ஏற்றுக் கொள்ளுவாயாக.

49. எவரனி.... சிவனென்றே, விஷ்ணு வென்றே, ப்ரம்மாவென்றே, பரம் பொருளென்றே, உன்னையாரென்று நீர்மானித்து பெரியோர் வழிபட்டனர்? சிவ பஞ்சாக்ஷரத்திற்கு 'ம' என்ற எழுத்தும், நாராயண மூலமந்திரத்திற்கு 'ரா' என்ற எழுத்தும் உயிர் நிலையாகும். இந்த இரண்டு அக்ஷரங்களும் சேர்ந்ததே தாரக மந்த்ரமாகும் என்ற இரகசியத்தை அறிந்த பெரியோர்களுக்கு வணக்கம்.

50. கோரிஸேவிம்ப. களையுடன் விளங்கும் கோலரில் தேவர்கள் ஆயிரக்கணக்கான பொன்மலர்களால் பூஜைசெய்ய, ஸனகாதி முனிவர்களும், நாரோத்தமர்களும் துதிக்க, ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கச் சித்தமாக வீற்றிருக்கும் ஸௌந்தர்ய நாயகியின் பதியும் ஸர்வ வ்யாபியுமான ஸுந்தரேச்வர மூர்த்தியை ப்ரார்த்தித்துச் சேவிப்போம் வாரீர்.

51. சக்கனி—நேத்திரானந்தமான அழகு வாய்ந்த உருவமென்ன, பரமசிவன் எப்பொழுதும் ஜபித்துக்கொண்டிருக்கும் படியான திருநாமமென்ன, தியாகராஜனுடைய வீட்டில் ஸுகமே வந்தமர்ந்ததென்ன, இப்படிப்பட்ட ராமனிடத்தில் செலுத்தும் பக்தி என்ற ராஜபாட்டை இருக்கையில் மனமே, சந்துகளில் ஏன் புகவேண்டும்? இறைக் காய்ச்சிய பாலும் ஏடும் இருக்கையில் சீ என வெறுக்கத்தக்க மதுபானம் எதற்கு?

52. ராம நீயெட.—உன்னிடம் அன்பில்லாதவர்களுக்கு உனது திவ்ய நாம ஸங்கீர்த்தனத்தின் இன்பம் தெரியுமோ? ஸ்த்ரீவேஷம் தரித்தவனுக்கு ஒரு உத்தமியின் நடத்தை எத்தகையது என்று அறியக்கூடுமோ? தனக்கு எது நன்மை தரும் என்பதை அறியாமல் பிறருக்கு உபதேசிப்பது நலமா? பயங்கரமான புலி, பசு வேஷம் பூண்டால் சிசுவுக்குப் பால் கிடைக்குமா?

53. ப்ரோசேவாரு.—இந்திரன் முதலியவர்கள் மெச்சும்படி இலங்கையை தானம்செய்து, முனிவர் வேள்வி அணுகிய மாரீசன் முதலிய கொடிய அரக்கர்களை அழித்து, வாலியைக் கொன்று சூர்யகுமாரனை சுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்த ஸகல லோக நாயகனும் மனித சிரேஷ்டனுமான உன்னைத் தவிர ஸ்ம்ஸாரக்கடலைக் கடக்கக் கைகொடுத்து

காப்பவர் எவர்?

54 மாரு பல்க.—வீட புருஷர்களையும், திருடர்களையும் நான் போற்றினேனு? எண்ணக்கூடாத தூரத்திலிருக்கும் உன்னை என் இருதயத்தில் அமர்த்தின வகை அறிந்த எனக்கு நீ மறுமொழி பேசாதிருத்தல் ஏனு?

55. நன்னு விடிசி. கொடிய வெய்யிலில் தவிக்கும் பொழுது கற்பக விருக்ஷத்தின் நிழலில் தங்குவது போலவும், கடலில்மூழ்கி மூச்சையடக்கி முத்துக்களைக்கண்டது போலவும், பூமியைப் பிளந்து தங்கம் வெட்டி எடுத்ததுபோலவும், வெப்பம் மிகுந்த வேளையில் பனிக்கட்டி மழை பெய்ததுபோலவும் நீ எனக்கு அசப்பட்டாய். உன்னை விட்டு அரை நிமிஷமும் பிரியேன். எனது சரீரம் உன்னுடையதன்றே? என்னை ஏற்றுக்கொள்ளுவாய்.

56. ராகரத்ன.—வேத சாஸ்திர புராண ஆகமங்களுடைய சுருத்தை அடக்கியதும் யோகிகள் அடையும் நல்வழியைப் போதிப்பதாகவும் பாகவதோத்தமர்கள் கூடி பாடுவதாகவும், ஸம்ஸார ஸாகரத்தைக் கடக்க ஹேதுவாக த்யாகராஜன் இயற்றியதுமான நூறு ராகங்களில் இழைக்கப்பட்ட ரத்னங்க ளடங்கிய மாலையுடன் பகவான் விளங்குகிறான். நன்றாக ஸேவித்து ஸகல ஸம்பத்துக்களையும் பெறுவோம் வாரீர்.

57. ஓர ஜூபு. உன்னைப்போன்றவர்களுக்கு ஓரப்பார் வை தகுமா? முன் காலத்தில் உன் பக்தர்களுக்கும் உனக் கும் என்ன உறவு? இப்பொழுது உனக்குப்பற்றுதல் சிறிது மில்லாமல் போனது ஏன்?

58. சிந்த நாட. எனது இளமையிலேயே என்னிட மிருந்து எண்ணிறந்த ஊழியங்களை ஏற்றுக்கொண்டு என்னை ரக்ஷிக்கிறேன் என்று சொல்லி கைபிடித்தாய். இப்பொழுது காப்பாற்றுவாயோ அல்லது கைவிடுவாயோ? உனது எண் ணத்தை நான் அறியேன். எப்படியும் நீ என்னைக் காக்கவே வேண்டும்.

59 ராநிதி. நல்லோரேனும் தீயோரேனும், நரோத்தமர்க ளேனும், கிடைக்க ப்ராப்தமில்லாதபொழுது வாராதன வாரா வென்பதும், கைகூழுவுங்காலம் வந்தா லல்லாது அகலா வென்ப தும் உறுதி. இந்திரனுக்கு அழகிய தேஹமும், அஸுரர் களுக்கு அமிர்தமும் கிட்டாமல் போயினவன்றே? காட்டில் வஸித்த ரிஷிகளுக்கு அரக்கர் தொல்லை இருந்ததன்றே?

60. நித்யரூப —என்றுமழியாமலிருந்து வரும் மூலப் பொருளே, எவருடைய ஸாமர்த்யம் எதை நடத்தவல்லது? என்றும் மாறாது நிலைத்திருப்பதான உனது ஆக்ஞையை மீற எவருக்குத் திறமையுண்டு? பொன்மயமான மேரு மலையைச் சூரியன் இராப்பகலாகச் சுற்றவில்லையா? அளவிடக் கூடாத பாரம் தாங்கும் பூமியை சேஷன் சுமக்காமல் தீருமா? காசி பதியான பரமேச்வரன் அங்குள்ள பக்தர்களுக்கு காதில் ராமதாரக மந்த்ரத்தை உபதேசிக்காமல் இருக்கமுடியுமா? உன்னைத்தவிர எவருடைய திறமை போற்றத்தகும்? ஸகல அருமை பெருமைகளுக்கும் உறைவிடமான உனக்குமுன் எவருடைய வல்லமை நிற்கும்? ராமபிரானே முழுமுதற் பொருளான பரதெய்வம் என்பதை விளக்கும் க்ருதிகளில் இதுவொன்று. காசி க்ஷேத்ரத்தில் இறப்பவர்களுடைய காதுகளில் பரமசிவன் ஸ்ரீதாரக மந்த்ரத்தை உபதேசிப்ப

தாகவும், அப்பொழுது இறந்தவர்களுடைய காதுமடல்கள் விரிந்து மந்திரத்தை செவிமடுக்கிற பாவனை நன்கு விளங்கும் என்பதும் நம்பிக்கை.

61. பரிபாலய மாம்.—இந்த க்ருதி எளிய ஸம்போதனங்கள் நிறைந்தது.

62. ராம லோபமு.—சந்த்ர ஸூர்யர்களைக்கண்களாகக் கொண்டவனே! என்னைக்காக்கும் விஷயத்தில் உனக்கு ஏனிவ்வளவு சஞ்சத்தனம்? நீயே தஞ்சமென்ற காகாஸுரனையும், விபீஷணனையும் நீ காக்கவில்லையா? கஜேந்திரனை விரைந்து சென்று மீட்கவில்லையா? த்ரௌபதி 'ச்ருஷ்ணு' எனவும் பரிவுடன் ஓடிவந்து அவளைக்காத்த உன்மனது இன்று எங்கு சென்றதோ? ஒரு ராஜாளியின் பொருட்டு தன் உடலையே கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியின் மரபில் சிறப்புடன் தோன்றிய உனக்கு என்னிடம் இவ்வளவு உலோபித்தனம் ஏன்? இதை நோக்கும் இந்திரன் முதலியோர் நகைக்க மாட்டார்களா?

63. ஸுகி எவரோ.—ஸத்யம் தவறாமல் நடந்து, அனைவருக்கும் அடியவராய் வாழ்ந்து, தம் தெய்வம் பிறதெய்வம் என்ற வேற்றுமையொழிந்த மனத்தவராய், ஸுஸ்வரமான கானத்தினால் சிரேஷ்டமான ராமதாரக நாமத்தை பஜனை செய்து, நிலையான இன்பத்தை யனுபவித்து, அதன்மூலம் ஒளிபொருந்திய முகத்துடன் விளங்குகிற தன்ய புருஷர் எவரோ?

64. எவரிச்சிரி.—கோதண்டபாணியென்று புகழ்பெற்ற ஸ்ரீராமா! கோதண்டமும் சரங்களும் உனக்குத் தந்தவர் எவர்? அவை நீ பிறக்கும்பொழுதே உன்னுடன் வந்தனவா அல்லது நீ அவதரித்தபின் அவைகளை ஸம்பாதித்தனையா? உன் சரங்களிலொன்று காகாஸுரனைத்துரத்த மும்மூர்த்திகளும் அவனைக்காக்க முடியாது கைவிட்டனரே. ஸமுத்ர ராஜன்மீது எய்த மற்றொரு பாணம் ஓர் அரக்கர் கூட்டத்தையழித்ததே! கோதண்டத்தினின்று கிளம்பிய ஒவ்வொரு பாணமும் பத்து நூறு, ஆயிரம் என்று பெருகி 'சகபக' வென்று இங்குமங்கும் பறந்து சத்துருக்களை மாய்த்ததே.

65. தேவ ஸ்ரீ.—தபஸ்தீர்த்தபுரம் என்ற லால்குடி க்ஷேத்திரத்தின் ப்ரவ்ருத்த ஸ்ரீமதி என்ற நாயகியின் ஹ்ருதயத்தில் அமர்ந்து ஜீவ கோடிகள் அனைத்தையும், காத்து ஸப்தரிஷீஸ்வரர் என்னும் பெயருடன் விளங்குபவரே! காலனை அடக்கி முனிகளின் விரோதியான ராவணனை துதிக்கப்பட்டு, மதியைச் சடையில் வைத்து அடியார் வேண்டுவன தந்தருளும் த்யாகராஜனே! இது தருணம் உம்மிடம் எனக்கு பக்திப்பெருக்கை தந்தருள்வீர். பவ அமான அரி நுத ஈச, குபேரமய அரி தர, ஆதர இப முக ஈச, விசால பால, அக மர்தன,—இவைபோன்ற ரசனைமிகுந்த பதங்கள் இந்த க்ருதியில் நிறைந்திருப்பது பாவுகர்களுக் குவந்த அரிய விருந்து.

66. முத்ஸட.—இனிய தோழர்களே! அடியார்கள் தங்களுடைய மிருதுவான கைகளில் வைத்திருக்கிற ஜால்கள், தேவகணங்களின் திவ்ய கானத்தைப் போன்று சப்திக்கும். மற்றும் சில அடியார்கள் தாங்கிவரும் சாமரம், குடை முதலிய பிருதுகள் ப்ரகாசிக்கும். குளிர்ந்த வேளையில் ஐயன் வெண்ணிறமான திருமேனியில் நிறைந்த ஆபரணங்

கள், நறுமணம் கமழும் பூமாலைகள் இவற்றுடன் பல்லக்கில் பவனி வரும் அழகைக்காணவாரீர். இனிய பல நைவேத்யங்கள் அடிக்கடி அபரிமிதமான உபசாரங்களுடன் அர்ப்பணம் செய்யப்பட்டு, அவற்றை ஈசன் ஏற்றுக்கொள்ளுவதும், ஜபதபங்களை இடைவிடாமல் செய்துவரும் தனது பக்தர்களுடைய மனோரதங்களைப் பூர்த்திசெய்யும்பொருட்டு பஞ்சரத்னேச்வரர் அழகாக பவனி வருகிறார். பக்தர்கள் சுருதி சுத்தமாகவும், நாநாவித ராகங்களின் ஆலாபனையுடனும் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்துவர, நல்லோர்களைக் காப்பதில் சுருத்தூன்றியவராய்க் கருணைநிதியான த்யாகராஜன்தானே புறப்பட்டு வரும் இந்த அழகைக்காணும் பாக்யம் ப்ரஹ்மா முதலியோர்க்கும் கிடைக்குமா?

67. சரண சரணனுசு.—நீயே தஞ்சமென்று நான் அடிக்கடி உன்னிடம் முறையிட என் மொழிகள் அனைத்தும் பரிகாசமாயிற்றே? உன் பாணத்தினால் துரத்தப்பட்ட காகாஸுரன் தப்பும் வகையின்றி ஸகல தேவர்களையும் நாட, அவர்கள் பாணம் ஸ்ரீராமனுடையதாயிற்றே என்று அச்சமுற்று, அந்த அஸுரனை விரட்டவும், அவன் உன்னிடமே மீண்டும் தஞ்சமடைந்தபொழுது, சரணைத ரக்ஷகன் என்ற உறுதி கொண்ட நீ அவனை மன்னித்துக் காப்பாற்றவில்லையா? இதன் பொருட்டே கைலாஸநாதர் முதலியோர் உன்னைத்துதிக்கின்றனர். முன்னொருகால், பொறுமை கொண்ட துர்வாஸர் திரௌபதியைப் பெரியதோர் சோதனைக்குள்ளாக்கியபொழுது, அவள் க்ருஷ்ணனே தஞ்சமென்று மன உறுதியுடன் சிந்திக்க, தட்சணமே மனமிரங்கி, ஸுராஸுரர், பூபாலர், யாவரும் உன்னைப் புகழும்படி அவளைச்சோதனையினின்று காப்பாற்றினாய். நடுநடுங்கிய அகல்யை உனது பாதமகிமையினால் சாப்பம் நீங்கி எழுந்தாள். இவ்வளவு பெருமை வாய்ந்த நீ, நீயே தஞ்சமென்ற என் குறை களைந்து தயவுடன் என்னைக்காப்பாய். என் முறையீடு பரிகாசமாகப்போவது தகாது.

68. ஸ்ரீரம்யசித்த.—மஹா லக்ஷ்மியின் தூய மனதை அலங்கரிக்கும் ஸ்வரூபமுடையவனே, சிவன், ப்ரம்மா, இந்திரன், அஷ்டதிக் பாலகர்கள், முதலியோர் ஸேவிக்கும் பரதெய்வமே, இந்திரனுக்கு விரோதியான இந்திரஜித்தைக் கொன்ற லக்ஷ்மணஸ்வாமியைத் தம்பியாக உடையவனே, மனிதருக்கு இன்பமளிப்பவன் நீயே, என்னைக் காப்பாற்று.

69. எவரைன. ஸம்ஸாரமென்ற கானகத்தில் வசிக்கிற கஷ்டத்தையும், கலியில் துஷ்டர்கள் செய்யும் தீமைகளையும், ஆசை, வெறி, இவற்றினால் எழும் அக்கிரமங்களையும், தியாகராஜனுடு சேர்ந்து ஸ்ரீராகவனிடம் தெரிவித்து, எழைகளைக் காப்பாற்ற, திடசித்தமுள்ள பெரியோர் எவரும் உலகில் இல்லையா?

70. மனமே, தூய மனம் என்ற பொன்மயமான பீடத்தில் ஸ்ரீராமனை இருக்கச்செய்து, நலந்தரும் மேலான ராமநாமமென்ற மலர்களால் இறைவனைத் தொழும் ஜன்மமே ஜன்மமாகும். பிரணவ நாதத்திலிருந்து உண்டான ஸ்வரங்கள் அலங்கரிக்கும் இனிய கீதமே நவரத்தினங்களிழைத்த மேடையாக, பிரபஞ்ச கதியையே தன் லீலையாகக் கொண்ட பரமாத்மாவான ஸ்ரீராமனுடைய பாதாரவிந்தங்களை அதன் மீது இருக்கச் செய்து, அவைகளின் மீது ராமநாமமாகிற சிறந்த மலர்தூவிப் பூஜிக்கும் பிறவியே பயனுடைத்து.

71. கன்ன தண்ட்ரி.—நீயே என் தாய் தந்தை. ஆகையினால் பரிதவிக்கும் என்மீது தயை இருந்தே தீரவேண்டும். தினந்தோறும் பழக்கமான ஊணுறக்கந்தவிர, வேறு யாதொன்றையும் நான் சிந்திக்கவில்லை என்றே, ஜீவ ப்ரம்ம வேறுபாடுகளை யறிந்து, மனதை ஒரு வழிப்படுத்தி, ஐம்புலன்களை அடக்கி, உன்னை இடையறாது பஜிக்கும் தீரன் நானல்லவே என்றே, எனக்கு உன் தயையை மறுக்காதே.

72. ராமபக்தி.–மனமே, ராமனிடம் கொண்ட உண்மையான பக்தி பகவானுடைய லீலையாக விளங்கும் மூன்று உலகங்களிலும் கொண்டாடப்படுவது. அது இத்தகையதென்று விவரித்துச் சொல்லமுடியாதது. அவரவர்கள் தத்தம் அனுபவத்தின் மூலமே அறியக் கூடியது. இந்தப் பெரும் பேறு கிடைத்தவர்களைத் தரிசிப்பதே பேரானந்த மளிக்கும்.

73. குருலேக.—உடல், பெண்டு பிள்ளைகள், சுற்றத்தார், பொருள், முதலியவை தானுகவே ஏற்படுகின்றன. துயரத்தை மனதினின்றும் அகற்றி, மீண்டும் அது வந்து மனதைப் பற்றுவண்ணம், தத்துவபோதனையாகிற மருந்தையளித்துக் காப்பாற்றவும், மனதைப் பீடிக்கும்பல வியாதிகளையும் காட்டையழிப்பது போல நீக்கவும் எவ்வளவு நல்ல குணங்கள் வாய்ந்தவனுக்கும் ஆசாரிய அனுக்ரஹம் இன்றியமையாது.

74. மனஸா —மனமே! நம்முடைய வல்லமை என்ன பிரயோஜனம்? ஸாகேதபதியான ஸ்ரீ ராமன் ஜகமாகிற தேர்மீது ஏறி தனது ஸாமர்த்யத்தினால் தானே நடித்துக் காட்டினான். அன்றொருநாள் வஸிஷ்டர் முதலியோர் ராமனுக்குப் பட்டம் கட்டுவதைப்பற்றி பேசின மொழிகளைக் கூனியின்மூலம் கேட்டறிந்த கைகேயி வேகமாகத் தன் ஆபரணங்களைக் கொடுத்தாள். ஆனால் ராமன் தன் மாய வலையை வீசி நிலமையைச் சுழியில் மாற்றினான். அப்படியே வாலி இறந்ததும், உலகத்தை வெறுப்பதாகச் சொல்லித் தன்னை நொந்துகொண்ட ஸுக்ரீவனுடைய மனப்போக்கை மாற்றி ராமன் அவனுடைய உதவியைக்கொண்டு தனது அவதார நோக்கத்தை பூர்த்தி செய்து கொண்டான்.

75. நெனரும்சரா.—நான் உனது அடியவனன்றே? என்மீது இரக்கம் காட்டுவாய். தாய்தந்தை, குரு, தெய்வம் அனைத்தும் நீயேயென்று நம்பி இருக்கும் நான் கஷ்டப்படுவதைப் பார்த்து நீ இரங்காததேன்?

76. ஒகமாட.—ஒரு சொல், ஓர் அம்பு, ஒரு பத்னி, ஒரு சித்தம், இவைகளைச் சலியாது கடைப்பிடித்து, நீண்ட ஆயுள், தேவர்கள் சிறந்ததாகக் கருதும் இன்பம், இவையனைத்தையும் அருளுபவனுய்ப்புவியில் மானிட உருக்கொண்டு விளங்கிய பரதெய்வமான ஸ்ரீ ராமனை ஒரு காலும் மறவாதே, மனமே.

77. மரிமரி நின்னே.—கஜேந்திரனுடைய முறைகேட்டு நீ விரைந்து சென்றதேன்? துருவனுக்கெதிரில் கனிந்து நின்ற கதையையும் நான் கேட்டேன். தேவசத்துருவாகிய இரண்யனுடைய புத்திரனுக்காக நரசிங்க உருவெடுத்த இரகசிய மென்னவோ? நம்பிக்கை யிழந்து அனைத்தையும் மறந்திருந்த ஸுக்ரீவனை ரக்ஷித்த உனது பெருமையை எனக்கு தெரியப்படுத்துவாய். அடிக்கடி உன்னையே கூப்பிட்டு முறையிட்டும்

உன் மனதில் என்னிடம் மாத்திரம் தயை வரவில்லை. இனி பொறுக்கமாட்டேன். கேட்கவும் மாட்டேன்.

78. பாஹி ராமச்சந்த்ர. ஜனகன் புதல்வியான ஸீதை யின் மணாளனே! உன்னையல்லால் வேறு கதியில்லை. உன்னை எவ்வளவு வேண்டியும் கொஞ்சமும் தயையின்றி இருக்க லாமா? நீயே எனது இஷ்ட தெய்வம். என்னுடைய கஷ்டங் களைத் தீர்ப்பாய். சோதனைக்கு நான் தகுதியில்லேன். எனது துதி புகழ் பெறத்தகுமா? எனது முறையீடு வேஷமாகத் தோன்றியதோ? எனது தலையெழுத்தின் மர்மம் எத்தகை யதோ? உனது கடாக்ஷம் பெறுத பிறவி எதற்கு? என் என்னைக் கண்ணெடுத்துப்பாராய்? கண்ட விடமெல்லாம் நான் வேண்ட முடியாது. என்னைக் காக்க எவரும் இல்லை. உன்னை விட மேலான தெய்வம் எங்குமில்லை என்னைவிட தீனன் எவனுமில்லை. ராஜராஜர் போற்றும் ப்ரபுவே, ராகவா, என் னைக்காப்பாய்.

79. ராம ஸீதாராம.—என்மனம் ஸர்ப்பங்கள் சண்டை யிடுவதுபோலிருக்கிறது. தயவுசெய்து என்னைக் கண்ணெடுத் துப் பார்த்து என் கைகளைப்பிடித்து ரக்ஷிப்பாய். என்மனம் ஒரு பதிவிரதை தன் கணவனுக்கு அன்புப் பணியாற்றுவது போல உனக்கு உத்ஸவங்கள் நடத்த ஆவல் உடையது. கற்பக விருக்ஷத்தை ஒரு கொடி சுற்றிக்கொள்வதுபோல் என்மனம் எத்தனை கற்பகோடி காலமும் உன்னை விட்டு அகலாது. அத்வைத பதவி கிடைத்ததுபோல் உயர்ந்த வைராக்யம் என்ற செல்வமே எனக்கு ஸாயுஜ்யமாகும். இதுவே வேதாகமங்களின் கருத்தாகும். என்னுடைய பணி விடையை யேற்று ஆனந்திப்பாய்.

80. பலுகுகண்ட சக்கர.—கொலு மண்டபத்தில் ஏவல் புரிகிறவர்களை கூப்பிட்டு அவர்களுடன் அன்புடன் சல்லாபம் செய்கிற ராமனுடைய இனிய மொழிகளும், தேவ மாதர் இசையை ஆதரவோடு கேட்டுக்கொண்டும் அழகிய பெண்களின் சிருங்கார ரஸத்தோடு கூடிய நாட்டியத்தைக் கண்ணுற்றும், த்யாகராஜனோடு அவைகளைப்புகழ்ந்து சொல் லும் இனிய மொழிகளும் கற்கண்டைப் பழிக்குமே!

81. இங்நாள்ளு.—இதுகாறும் உனது தயை வராதது ஏன் என்பதை இப்பொழுதாவது தெரிவிப்பாய். இளமை முதல் உன்னையல்லால் மற்றொருவரை நம்பினேனா? முன் னொருகால் ஸுக்ரீவனின் இன்னல்களைய உன் ஸௌர்யத்தை வெளிக்காட்டவில்லையா? அவனது அபராதங்களைப்பொறுத்து உனது உறுதியான நட்பின்மூலம் அவனுக்கு உனது பாதங் களில் பக்தியைத்தந்தருளவில்லையா? கஜம், துரகம், திரவியம், முதலியவை எனக்குக் கிடைக்கும்படி செய்யென்று கேட் டேனா? உன்னை என்குலதனமாக உள்ளத்தில் வைத்துப் போற்றி வந்தேனே யொழிய, பெற்றோர், உடன்பிறந்தோர், அனைவரும் நீயேயென்று எண்ணி மனம் குளிர உனது திரு வடிகளில் மலர்தூவி மகிழ்ந்தேனேயொழிய, பெரியோரிடம் உண்மையை மறைத்தேனா? உன்னிடம் பொருள் வேண்டி னேனா?

82. பஜனலேயு—ப்ரஹ்மா, ருத்ரன், இந்த்ரன், சிறிய திருவடி, விஜயன், முதலியோர், ஒருங்கே உனது பாத ஸேவை செய்யும் உத்தமமான பஜன மார்க்கத்தை எனக்கு தெளிய அறிவிப்பாய். வேத சாஸ்த்ர புராண தீப, தேவரிபுஸ மரப்ரதாப, முதலியவை இந்த ச்ருதியை அலங்கரிக்கும்

ரசனை மிகுந்த சில பதங்கள்.

83. தயஜ்ஞிசுடகு —உள்ளத்தில் எழும் பலவித பயங்களாகிய மதயானையை அழிக்கவல்ல மிருகேந்திரனே ஒத்தவனே! ப்ரஹ்மாவின் துயரம் தீர்த்தவனே என்னை தயையோடு கடாக்ஷிக்க இது தருணம். முன்பு நீ எனக்கிடட பணியை நிறைவேற்றுவதில் ஆவல்கொண்டு நான் மனமார முயற்சித்தேன்.

84. வந்தனமு.—பிரஹ்லாத பக்த விஜயத்தைச்சேர்ந்த இந்த க்ருதி அழகிய ப்ராஸங்கள் நிறைந்தது.

85. ப்ரோவ பாரமா?—வாஸுதேவனுக அண்ட சராசரங்களை உன்னுடைய குக்ஷியில் வைத்துக் காப்பாற்றவில்லையா? ப்ரபஞ்சமே உன்மயமாக இருக்கையில் என்னை மாத்திரம் காப்பது உனக்கு பாரமா? தேவர்களுக்காகப் பாற்கடலிலும், மற்றொருகால் கோபிகளுக்காகவும் மலையை நீ தாங்கி நிற்கவில்லையா?

86. ஸார்வபௌம.—இந்த க்ருதி எளிய பதங்கள் அடங்கியது.

87. ஸுஜன ஜீவன.—இந்த க்ருதி எளிய ஸம்போதனங்கள் அடங்கியது.

88. மனவ்லயாலகிஞ்ச.—எனது கோரிக்கையைக் கேட்கக் கூடாதா? நானறிந்த இரஹஸ்யங்களைத் தெரிவிக்கிறேன். கர்மகாண்டத்தின் கொள்கையில் சிக்கி ஸம்ஸாரமென்ற கானகத்தில் திரிந்து சலிப்புற்றபொழுது பரதெய்வமான ஸ்ரீ ராமன் மனமுருகி மனித உருவெடுத்து அனைவருக்கும் வழிகாட்டியாக நடந்த விஷயத்தை நான் அறிவேன். அத்தகைய கனவான் என்முறை கேளாரோ?

89. நன்னுப்ரோவகனு.—சில்லரை நாணயத்தைத்தேடும் பொழுது தென்பட்ட ரத்னம்போல் என்னுடைய குற்றம் குறைகளை அகற்ற நேர்ந்தனையன்றோ? சூழ் குடிக்கும் வேளையில் அமுதம் கிடைத்ததுபோலவும், நீரில் கைசளைத்தகாலை தெப்பக்கட்டை எட்டியது போலும், நீராடச்சென்ற காலை புண்ணிய நதி எதிர்ப்பட்டது போலும், மானம் போகும் வேளையில் சேலை கிடைத்தது போலவும், என்னில்லம் வந்தனையன்றோ? உன்னை விட்டுப்பிரியேன். என்னைக் காப்பாய். அறநூல்கள் அனைத்தின் கருத்தும் நீயே என்றும், ஒப்புயர்வற்ற இஷ்ட தெய்வம் நீயே என்றும், நான் அறிவேன்.

90. ராம நினுவினு.—பெற்றோர், உடன்பிறந்தோர், காக்கும் தெய்வம், எல்லாம் நீயேயென்று உள்ளத்தில் உன்னை நன்றுகக் காண்கிறேன். உன்னிடம் செலுத்தும் பக்தி எப்பொழுதும் ரக்ஷித்து மோக்ஷமளிக்கும் என்று உத்தம தெய்வமான உன் முன்னிலையில் சபதமிட்டுச் சொல்லுவேன். பெரியோர் ஸத்துவ நிலையில் உன்னை உபாஸித்து ஸம்ஸார தாபங்கள் நீங்க நீயே வழி என்ற உண்மையை உணர்ந்தனர். உண்மை அடியார்களைக் கண்டு உலகோர் பொறுமை மிகுந்து உன்னை நிந்தித்தும் கெடவில்லை. வேண்டுவன கொடுக்கும் உன்னை எப்பொழுதும் தஞ்சமென்றடைந்தேன்.

91. மும்மூர்த்துலு.—ராஜகுமாரன் என்று கேட்டு

ஸந்தேஹம் தீர்ந்து ராகவனை மும்மூர்த்திகளும் சேர்ந்து மனமாரப் புகழ்ந்த செய்தி கேளீர். தமது குணங்களையும் ரகுநாதனின் குணங்களையும் செவ்வனே எழுதித் தராசுத் தட்டுகளில் வைத்து ஏற்றத் தாழ்வை நோக்கி த்யாகராஜன் போற்றும் தெய்வம் எத்தகையதோ என்றனர்.

92. நின்னுநேர. கண்டபேர்களை வேண்டிப் பார்த்துப் பயனில்லை என்றுணர்ந்தேன். மனவி மக்களின் வாழ்வின் பொருட்டுத் தூரதேசங்களில் வீணில் சுற்றித்திரிந்து சலித்து வாழ்வின் ப்யன் இப்படிப்பட்ட தென்று அறிந்தேன். ஊழ்வினைகளைந்து கருணையுடன் காக்கும் தெய்வம் நீயே என்று அறிந்தேன். உன் அருளை விரும்பும்பொழுது ஸாதாரண ஜனங்களை ஏன் போற்றவேண்டும் என்று சருதி நீயோர் ஸங்கத்தைத் தவிர்த்தேன். நரகபயமில்லாமல் பிறர்பொருளை யபகரிக்கும் பாபிகளை யமதூதர்கள் பிடித்துத் துன்புறுத்தும் ஸமயத்தில் காப்பதற்கு வேறெவருமில்லை என்பதை அறிந்தேன். உன்னை எங்கு எவ்வளவு வேகத்துடன் சிந்தனை செய்தாலும் மனது ஆனந்தமடைகிறது. உன்னையே உறுதியாக நம்பின என்னைக்காப்பாய்.

93. பக்துனி சரித்ரமு. மனமே, பற்றொழித்தவனுய் பக்தியை மாத்திரம் இலக்காகக்கொண்டு ஜீவன் முக்தனாக இருந்து பேரின்பம் அடையும் ராமபக்தனுடைய வரலாறைக் கேளாய். ஜபதபம் முதலிய நல்ல கருமங்களைத் தான் செய்ததாக வெளியிடக்கூடாது. மனதில் கபடம் வைத்துப்பிறரிடம் பேசக்கூடாது. தான் நிகரற்று விளங்கவேண்டுமென்று ஊர்தோறும் திரியக்கூடாது. சபல சித்தனுய்ப் பெண்டு பிள்ளைகளிடம் எப்பொழுதும் பற்றுதலை வளர்க்கக்கூடாது. உலக வாழ்வின் இன்பங்கள் நிலையற்றவை. சிவன், விஷ்ணு என்ற பேதபுத்தி தகாது. உலகில் தானே நல்லவன் என்று இறுமாந்து தன் வயிறு வளர்ப்பதையே கவனித்தல் கூடாது. ஆஞ்சனேயர் உறுதியாகப் கைப்பற்றிய ஸ்ரீராகவனின் தாள்களை த்யானிப்பதைக் கைவிட்டு ஏமாறக்கூடாது. பக்தியை கெடுக்கும் சாமஸ ராஜஸ குணங்களை மேற்கொண்டு, எதுவும் தானுகவே கிடைக்கவில்லையே என்று எண்ணலாகாது. ராஜயோக மார்கம் என்னும் அற நெறியைப் பின்பற்றி நடத்தல்வேண்டும். ஸ்ரீராமனை எப் பொழுதும் தயானித்தல் வேண்டும். இவைகளே ஸ்ரீராம பக்தனின் அம்சங்கள்.

94. தத்வமெறுக. 'தத்வமஸி' என்ற வேத வாக்யத்தின் கருத்து நீயே என்ற மேலான உண்மையை அறிவது எளிதா? தாமஸ ராஜஸ குணங்கள் எளிதில் விலகுமா? வேத சாஸ்த்ர உண்மைகளை அறிவது எளிதா?

95. நரஸிஹ்ம ஸ்ரீலக்ஷ்மி நரஸிஹ்மனே! மனிதரைப் புகழமாட்டேன். பக்தர்களில் முதல்வனன ப்ரஹ்லாதன் இரண்ய கசிபுவின் கஷ்டம் சகியாமல் உம்மைச் சரணமெனவும் அவனை ரக்ஷித்தீர். உலகோரின் நிந்தைகளைப் பொறுக்காமல் நான் உம்மை வேண்டினேன். இதை நன்கறிந்த உமக்கு என்னிடம் எவ்வளவு க்ருபை பிறக்குமோ? உம்மை ஜபித்து, த்யானித்து, உமது திருவடிகளை அர்ச்சித்து உமது பக்தர்களுடன் உறவு கொள்ளும்படி அருளி என்னைக்காரும்.

96. தெலிஸி ராம. மனமே! மனதில் தோன்றும் எண்ணங்களை ஒரு நிமிஷமாவது நிறுத்தி ஈடேறும் வழியான ஸ்ரீராமனுடைய நிஜமான ஸ்வரூபத்தை அறிந்து ராம

ஸ்மரணையுடன் நாம ஸங்கீர்த்தனம் செய். 'ராமா' என்னும் பதத்திற்கு ஸ்திரீகள் என்ற கருத்து. அதுவே ப்ரஹ்மத்தை யும் குறிக்கும். 'அர்க' என்ற பதத்திற்கு எருக்க மரம் என் றும் ஸூர்யன் என்றும் பெயர். 'அஜம்' என்பது ஆட்டை யும், ப்ரஹ்மாவையும் குறிக்கும். ஆனால் இவை ஒவ்வொன் றிலும் பிந்திய கருத்தே பிறவித்துயர் தீர்த்துச் சஞ்சல புத் தியை நீக்கி விபரீதப் போக்கு என்ற இருட்டையகற்றி வெற்றி தரும்.

97. ஸத்துலேனி. சக்தி ரூபமான தெய்வமே! நல் லோருள்ளத்தில் அமர்ந்தவனே! தெய்வபலம் இல்லாத காலம் வந்தது போலும்! கலியின் முதலாவது பாதத்தில் பெற்றோர், குரு முதலியோரிடத்தில் பக்தியில்லாமல் மேன்மேலும் துஷ் க்ருத்யங்களைச் செய்யவேண்டுமா?

98. நே போகடகுண்டே. நான் உன் புகழ் பாடா விடில் உனக்கு என்ன குறைவு, உன் மனது எனக்கு தெரியும். சுகர், ஸனகர், ப்ரஹ்லாதர், நாரதர், விஷ்ணு, சிவன், முதலியோர்கள் உன்னைப் பூஜிக்கிறார்கள். நைவேத்யங்கள் ஸமர்ப்பிக்க ஸீதாதேவியும், பூஜிக்க வேதங்களைக் கற்றறிந்த பெரியோர்களும், நட்புக்கொள்ள ஆஞ்சனேயர், ப்ரஹ்மா இந்திரன் முதலியோர்களும் இருக்கையில் என் புகழில்லா விடில் உனக்கென்ன குறைவு?

99. நாரேமி. ஸ்ரீராம! உன்னைச்சொல்ல எனக்கு வாயேது? ஏதாது பாபகர்மங்களைச் செய்து கொண்டிருக்கும் என்னைப் போன்றவனுக்கு உன்னைச் சொல்ல வாயேது? காமக்ரோதம் முதலிய அறுவகைத் துர்குணங்களுக்கு வசப் பட்டு, பெண்களைக் கோரிப் பல்லைக் காண்பித்து, உண்மை யான ராமபக்தியை யறியாத என்னைப்போன்றவனுக்கு உன்னைச் சொல்ல வாயேது?

100. மரகதமணி. மரகதம் போன்ற காந்தியுடைய திருமேனி வாய்ந்தவனே, என்னை மறவாதே. உன்னையே சரணமடைந்துள்ளேன். என்னை விரைவில் காப்பாய். ஸீதாதேவியினிடத்தில் நீ கொண்டுள்ள அன்பைப்போல என்னிடமும் அன்புவைத்து என்னை ரக்ஷிப்பாயாக.

101. லேமிதேல்ப. என்னுடைய வறுமையின் துய ரத்தை ஸ்ரீராமனுக்குத் தெரிவிக்க எவருமில்லையா? உன் னுடைய ஸ்வரூபத்தைத் தன்னுள் நிறுத்தி அல்லவோ மனம் புனிதமானது?

102. நாயெட. நான் மாயையில் சிக்கிய மனிதர்க ளுடன் சேர்ந்து துர்புத்தியுடன் திரிந்தேனே? உன்னைப் பற்றித் தாயாதிகளுடன் வாதம் நேரும்போதும் உனதடியான் என்று உன்னைப் பூஜித்து வந்தேன். சிறுவர்கள் 'எங்கிருந்து வந்தவன், நில்லடா, புத்தியில்லையா' என்று வாதாடும் பொழுது பெற் றோர் அதைக்கண்டு, பெருமை கொண்டு, மகிழ்ச்சியுடன் அவர் களை முத்தமிட்டு மார்போடணைத்துக் கொள்ளவில்லையா? என்னிடம் நீ வஞ்சகம் செய்யாதே. பிறர் மெச்ச நான் உன்னை நம்பவில்லை.

103. வரநாரத. நாராயண ஸ்மரணையின் மூலம் எப் பொழுதும் பேரானந்தம் அனுபவிக்கிற நாரத குருவே! சரத் சந்த்ரனைப்போன்ற ஒளி பொருந்தியவரே! பரிசுத்தமான

வரே ! உலகனைத்திற்கும் ஸத்குரு என்று போற்றப்படுவரே ! பாவுகசம்ரேஷ்டரே ! எண்ணேக்காரும்.

104. பாகாயே. உன் மாயைகள் நன்றாயிருக்கின்றன! ப்ரஹ்மாவும் அவைகளை விவரிக்க முடியுமா ? இந்தத் தந்திரங்களை நடத்திக்கொண்டே நானல்லவென்று சொல்லுவது நன்று ! கௌரவர்களை அழித்தல் பாபமென்ற அர்ஜுனனுக்கு, "உன்னையும், என்னையும் வினைப்பயன் தொடராது" என்று தெளிவாகச் சொல்லி அவனைக் காக்க வில்லையா ?

105 ஸ்ரீகாந்த. உன்னிடத்தில் பலை, அதிபலை, என்ற பாணங்கள் விளங்க வில்லையா ? உன்னைச் சேர்ந்தவர்களுடைய பலாபலம் நீ அறியாததேன் ? காகாஸுரன்மேல் எய்த அஸ்திரம் ப்ரஹ்மாஸ்திரமாக மாறவில்லையா ? நரோத்தமர்கள் ஸன்மார்கத்தை அறியவில்லை என்ற சிந்தை உனக்கு ஏன் இல்லை ?

106. ஸரிஜ்ஜஸி.—உன் உண்மை அடியார்களையும், காமக்ரோதாதிகளுக்கு அடிமைப்பட்ட மனிதர்களையும் ஒன்றாக மதித்து வேடிக்கை பார்ப்பது உனக்கு நியாயமா ? காம சாஸ்திர நிபுணர்கள் நரஸ்துதியின் மூலம் அளவிறந்த பொருள் திரட்டி மகிழ்கின்றனர். பக்தி சாஸ்திர அறிஞர்களோ இவற்றை விலக்கி உலக ரீதியைக் கண்டு நகைக்கின்றனர்.

107. லீலகானு.—தேவர், கின்னரர், கிம்புருஷர், அஸுரர், இந்திரன், த்ரிமூர்த்திகள், மரம், மலை, அண்ட கோடிகள் இவை முதல் அறிவின்றித் தத்தளிக்கும் பாமரர் வரை ஜகமுழுதும் உனது லீலையே என்று எண்ணும் பெரியோர்களின் சேர்க்கையை எனக்குத் தந்தருளும்.

108. அப்பராம பக்தி.—அம்மம்ம ! ராம பக்தியின் மஹிமை எப்படிப்பட்டது ? இல்லாவிடில், சலிக்கும் மனதை நிறுத்தி, தான் உண்டு மிகுந்ததை சபரி கண்ணிமைகள்போல் காத்து ராமனுக்குக் கொடுப்பாளா ? ஸ்வயம்ப்ரபை என்பவளுக்கு நிலவரமான உத்தம பதவி கிடைக்கும்மா ? பரமசிவன் மெச்சுவதும், மஹாலக்ஷ்மி ஆசை கொள்வதும், லக்ஷ்மணன் தொண்டாற்றுவதும்,பரதன் பார்த்துப் பார்த்துப் பரவசமாவதும், வானரம் கடலைத் தாண்டுவதும், தேவகி உரலில் கட்டுவதும், பெரிய அபராதங்களைச் செய்யும் த்யாகராஜன் ஆனந்தம் பெறுவதும் ராம பக்தியின் மஹிமையை விளக்குமன்றோ ?

109. நின்னே.—உலகிலுள்ளதெல்லாம் துயரம் தருவது என்று உணர்ந்து,இளமை முதல் உன்னையே நம்பி ஆடிப்பாடி வேண்டினேன். வேத, ஶாஸ்த்ர புராணக்கலை பயின்று ஜீவனும் பரமனும் ஒன்று, வேறு என்ற தீரா வாதங்களில் மயங்கி நிற்பவர்களையும், உலக ஸுகங்களைக் கோரி ராஜஸம் மிகுந்த யாகம் முதலியவைகளில் உழலுகிறவர்களையும் பார்த்து, இவர்களனைவரும் இந்தப் பிறவியிலேயே உன்னுடைய அருள் பெறுமல் கரையேற மாட்டார்கள் என்று அறிந்து உன்னையே முழுதும் நம்பினேன்.

110. வாடேரா.—மனமே ! சொற்றவராதவன் என்று சந்த்ர ஸேகர்யர் உள்ளவரை புகழ்பெற்று, இந்த்ரன் முதலிட்ட தேவர்களையும், உலகிலுள்ள நல்லோர்களையும் ரக்ஷிக்கவும்,

துஷ்ட அரக்கர்களை யடக்கவும் கோதண்டபாணி என்ற கோலம் தாங்கி, ஸம்ஸாரக கடலைத் தாண்ட வகையறியாதவர் களுக்கு ஈடேறப் பரமசிவனே உபதேசிக்கும் தாரக மந்தி ரத்தைத் தன் பெயராகக் கொண்டு, ப்ரஹ்மாவினுல் புகழப் பட்டு ஸூர்ய வம்சத்தில் பிறந்து, ஸீதா நாயகன் என்று அழைக்கப்படும் ஸ்ரீ ராமனே பரதெய்வம்.

111. ரகுவர. கோவர்த்தன கிரியைத் தாங்கியவனே! ஒரு பெண்ணிற்குப் பெற்றோரும் உடன் பிறந்தோரும் இருந் தாலும், அவர்களனைவரும் கணவனுக்குச் சமானமாவார் களா? செல்வமும், பிற தெய்வங்களும், இருந்தாலும் மங்கள ஸூத்ரமாகுமா? முற்பிறவிகளில் நான் செய்த நல்ல கருமங் களெல்லாம் இப்பிறவியில் எனக்கு உன்னிடம் பக்தியைத் தந்தன போலும். உன்னிடமே அன்பு கொண்ட என்னை மறக்கத்தகுமா?

112. ஶிவ ஶிவ.–ஶிவ ஶிவ என்று சொல்லக் கூடாதா? அதன் மூலம் ஸம்ஸாரத்தினுல் ஏற்படும் தொல்லைகளை அகற் றக் கூடாதா? காமம் முதலிய துர்குணங்களைக் களைந்து பிறர் மனையாளையும் பொருளையும் விலக்கி, அறியாமையை நீக்கி, மிகுந்த பயபக்தியுடன் வில்வதளங்கொண்டு அர்ச்சனை செய்து நல்லோர் கூட்டங்களுடன் சேர்ந்து, என்னையாளும் இறைவ னென்று மனதிற்கொண்டு, லச்சை முதலியவைகளை விட்டு உள்ளத்தில் நல்லோர்களை பஜித்து, பழமையான வேத சாஸ்தி ரங்களைப் பெருமையுடன் கொண்டாடி அடியார்களை உப சரித்து ஶிவ ஶிவ ஶிவ என்று சொல்லக்கூடாதா?

113. பரலோக.—மரணத்திற்குப்பின் வேறு உலகங் களைச் சேர்ந்து கர்மாவிற்குத் தக்க பலன் நேருமே என்ற பய மில்லாமல் ஸம்ஸாரமென்கிற கயிற்றினுல் கட்டுண்டு, யானை, குதிரை, அழகிய நங்கையர், பல்லக்கு முதலியவை நமக்கன்றே உண்டு என்று எண்ணியும், கொண்ட மனைவி, பெற்ற பிள்ளை கள், ஜரிகை சேலைகள், வீடு முதலியவைகளை ஸ்திரமென் றெண்ணி இதுவே செய்வலோகம் என்றும் மதித்து வாழ் கின்றனரே!

114. களல நேர்சின —வயிறுவளர்க்க 64 கலைகளைக் கற்றும் ஊழ்வினை இருந்தாலன்றி என்னபயன்? செல்வத்திற் கும் வறுமைக்கும் காரணம் நீயே யாகையால் கருணைக்கண் பார். ரிஶ்யஶ்ருங்கர் வருந்தி அடைந்த எள்ளருண்டையை வயிறுரப் புசித்தாரா? விபீஷணன் சிறந்த ரங்கநாத விக்ரஹத் தைத் தன்னிருப்பிடம் கொண்டு சேர்த்தானா?

115. ஸந்தேஹமு.—ஸனகாதி முனிவர்கள் பூஜிக்கும் ஸ்ரீ ராமனுடைய திருவடிகள் மேலா? அழகான பாதுகை கள் மேலா? முனிவர்களுக்கு உன் திருவடி த்யானத்தினுல் மோக்ஷம் கிடைத்தது. பரதனுக்கோ பாதுகைகள் உன்னையே அவனிடத்தில் சேர்த்தன. ஆகையினுல் இந்த ஸந்தேஹத் தைத் தீர்ப்பாய் அய்யனே.

116. ஸீதாமனோஹர—உலகோர் நான் உன்னைச்சேர்ந்த வன் என்கின்றனர். இந்த பாக்யம் எனக்கு கிடைத்தது முற் பிறவியின் தவப்பயனே அல்லது உன் கடாக்ஷபலமோ. அன்று நான் உன் உருவத்தை என்மனமாகிற கமலத்தின் மீது அமர்த்தி உன்னைக் கோரும் பாக்யம் எனக்குக்கிடைக்க வில்லை. மன உறுதியுடன் எப்பொழுதும் உன்னிடம் பக்தி

நிலைக்கும்படி என்னைக் கைபிடித்து ஏற்றுக்கொள்ளுவாய்.

117. ஞானமோஸக ராதா.—தெளிந்த அறிவைத் தந்தருள். உனது நாம மஹிமையினால் என் மனம் மாசற்றது. பரமாத்மா, ஜீவாத்மா, பதினன்கு உலகங்கள், மனிதர், கின்னரர், கிம்புருஷர், நாரதர், இவையெல்லாம் நானே என்ற அறிவைக் கொடுக்கக்கூடாதா? என்னுடன் உனக்கு வாதா?

118. பரிபூர்ணகாமா.—நினைத்ததை அடையும் வல்லமையுள்ளவனே, உன்னை மறக்கத்தகுமா? கருணைமிகுந்தவனே, ப்ரம்மா முதலானவர்களால் அர்ச்சிக்கப்பட்டவனே. கமலம் போன்ற உன்னுடைய திருமுகத்தைக் காண்பித்து மறைத்த இந்த வைபவம் ஏன்? கலி தர்மத்தைப் பின்பற்றின அதமர்களிடம் சிக்கி நான் இடர்ப்பட முடியவில்லையே.

119. வத்தனே வாரு.—இகபரம் இரண்டிலும் நான் கோருவது ஒன்றுமில்லை. உனது அழகிய முகத்தைப் பார்க்க எப்பொழுதும் ஏங்கினேன். என் ஏக்கத்தைத் தீர்க்கவும் என் மனம் சரியான மார்க்கத்தையறியவும் உன்னைத்தவிர வேறு எவருமில்லை.

120. நதஜன.—வணங்குபவர்களைக் காப்பதில் சிறந்தவனை நீ என்னைக்காப்பாய். ச்ருதிகள் முறையிடவில்லையா? பூமியை ஆட்டிவைக்கும் ஸ்தித்திரதாரி நீ யல்லவோ? ஆசையை வென்றவர்கள், மௌனிகள், யதிகள், தபோதனர்கள் முதலியவர்களுக்கு நன்மை செய்வதற்கு தானே பலவித கஷ்டங்களை யனுபவித்த உனது திருவடிகளே பிறவியின் பயனைக் கிடைத்தது என்றும், அனன்ய சிந்தையுடன் பூஜை முதலிய வைகளையும் உனக்கே ஸாத்வீக\த்யாகமாகச் செய்து நான் வணங்கும் தெய்வமான நீ என்னைக்காப்பாய்.

121. துர்மார்க.—தனம், தான்யம், தெய்வம் அனைத்தும் தர்மஸ்வரூபனை நீயாக இருக்கையில், துன்மார்கத்தில் செல்பவர்களை எனக்கு எஜமானனாக நான் கூறமாட்டேன். கலை வாணியின் அருளால் கிடைத்த கல்விச் செல்வத்தை கடையர்களின் கூட்டத்தில் வழங்கும் துஷ்டர்களை எங்ஙனம் போற்றுவது?

122. பண்டு ரீதி.—துஷ்டர்களை நொறுக்கி நிர்மூலமாக்கும்பொருட்டு மயிர்க்கூச்சல் என்ற அங்கியும், அதன்மேல் ராம பக்தன் என்ற முத்திரையுள்ள பில்லையும், ராம நாமம் என்ற சிறந்த உடைவாளும் விளங்குகிற உன் ஏவலாளன் என்கிற பணியில் என்னை அமர்த்துவாய்.

123. பாலிந்துவோ.—என் குருவின் உபதேசத்தின்படி உன்னிடம் பக்தி செலுத்துவது தான் உன்னருள் பெறும் வழியென்று உணர்ந்தேன். என்னை காப்பாயோ மாட்டாயோ? என்னிடம் இரங்கி நான் உன்னை எவ்விதம் பேசினாலும் அதை குற்றமெனக் கொள்ளாது என்னிடம் இனிய மொழிகள் பகர்வாய்.

124. கண்ட ஜ்ஞமி.—அன்றொருநாள் லக்ஷ்மணன் மனமுவந்து உனக்குப் பாதஸேவை செய்யும்பொழுது நீ ஸீதையுடன் பேசிக்கொண்டு லக்ஷ்மணனைத் திரும்பி பார்த்தும் அவன் உடல் முழுதும் மயிர்க்கூச்சல் எடுத்தது. அந்த விதமே உனது தொண்டனும், தீயதுயாவையும் விலக்கின

வனுமான என்னை ஒருதடவை கடைக்கண் நோக்குவாய்.

125. தனமீதனே.—என்னையே நொந்துகொள்ளவேண்டுமேயன்றி உன்னைச்சொல்லக் காரணமில்லை. ஒருசமயம் அதிபிரேமையுடன் உன்னை த்யானித்து நன்மலர்கொண்டு பூஜித்தும், ஒருவேளை உன்னிடம் கோபம் காட்டி உன்னை நிந்தித்தும் வந்த என்னுடன் அன்புடனும், வெறுப்புடனும் நீ பேசுகிறாய் என்கிற பழி என்னையே சாரும்.

126. அம்ம ராவம்ம.—துளஸி அம்மனே! இஹபரமிரண்டிலும், கோருவது அளிப்பவள் நீ என்று தெரிந்தே உன்னைவிட்டுப் பிரியாமல் இருந்து மஹராவிஷ்ணு கவலை நீங்கினார். உனது ம்ருதுவான திருமேனியையும், பரிமளத்தையும், மஹிமையையும கண்டு, உன்னை விஷ்ணு பத்ரமேற் கொண்டாராம். எப்பொழுதும் உனது திருவடிகளை நம்பின என்னைக் காத்தருள்வாய்.

127. ஏவரமடுகுதுரா.—உனது பாதலீலைவை பாபங்களைப் போக்கிப் பரிசுத்தமாக்கவல்லது. உன்மனதில் தோன்றிய காரியங்களையும் உனது பாத கமலங்களையும் மனதாரவிடேன் என்ற உறுதி ஆஞ்சநேயரிடம் விளங்குகிறது. உனது அடியார்களை எப்பொழுதும் பரிபாலித்து உன்னைப்போலவே கடாக்ஷிப்பது ஸத்துருக்களிடம் உளது. உன் பெருமையைக் கேட்டு உனது பெயரை நினைத்து, உனது உள்ளங்கால் ரேகைகள் பூமியில் பதிந்திருப்பதை உற்று நோக்கும்பொழுது நெஞ்சை அள்ளும் அன்பு என்ற வெள்ளம் பரதனிடம் இருக்கிறது. உன் மனது போகும் வழியைப்பின்தொடர்ந்து ஊனுமுக்கம் ஒழித்து உனக்குச் செவ்வனே தொண்டு புரியும் பாக்கியம் பணிசெய்வதே அணிகலனெனக்கொண்ட லக்ஷ்மணனிடம் இருக்கிறது. உன்னை எப்பொழுதும் ஏற்றுதயத்தில் வைத்து, துராசைநீத்து, மோஹமொழிந்து நானே அவன் என்று எண்ணும் பாக்கியம் ஸீதையைச் சேர்ந்தது. இவை தவிர உலக ஸுகங்கள் எவற்றையும், இந்திர பதவியையும் வேண்டேன். ஆகையினால் உன்னிடம் என்னவரம் கேட்பேன்? ராஜ யோகமார்கம் எப்பொழுது கைகூடுமோ?

128. ஸுந்தரி.—த்ரிபுர ஸுந்தரி அம்பிகையே! உன் கடாக்ஷபலனை, என் முப்பிறவிப் பூசையின் பலனை உன்னுடைய தரிசனம் எனக்கு கிடைத்தது. ஆதிபுரம் என்ற திருவொற்றியூரில் இருக்கும் உன்னைத்தரிசிக்க ப்ரஹ்மா முதலியோர் கூட்டம்கூடி ஆகாயத்தில் தத்தளித்துக்கொண்டு இருக்கையில் எனக்கு உன் தரிசனம் கிடைத்தது. கலியுகத்தில் ஏழைகளைக்காப்பவள் நீயே என்று கூடுமிடம்தோறும் உன்னைப்புகழ்கின்றனர். அலைந்து அலுப்புற்ற என்மனது ஆறுதல் அடையுமா என்று நான் இருக்க, தேவமாதர்கள் வரிசையாக கொலு இருக்க, வெள்ளிக்கிழமையன்று உன் தரிசனம் கிடைத்து அன்றே என் ஜன்மம் ஈடேறிற்று. மிகுந்த தரித்ரனுக்குச் செல்வம் கிடைத்தது போலவும் உலர்ந்த பயிர்களுக்குத் தண்ணீர்போலவும் என் கண்களுக்கு உன் தரிசனம் ஒரு பெரிய திருவிழாவைப்போல் தோன்றியது.

129. ஸ்ரீவே பாஹிமாம்.—காவேரியின் வடக்குக் கரையில் கோயில்கொண்ட அறம் வளர்த்த நாயகியே! உன் மஹிமையைப் புகழ்வது நாமகளுக்கும் பாரமாகத்தோன்றும். நான் எம்மாத்திரம்? பராக்கு இல்லாமல் சீக்கிரமே கிளியைக் கையிலெடுத்து என்னைக்காக்க முற்படுவாயாக. பாவஜ அராதி

பாம, கலா அர்தமிதி ஸசிகலாதரி, உபவலாரி, மாயவிலாபினி, முதலியவை இந்த க்ருதியில் காணப்படும் சிறந்த பதங்கள். தேவி ராமனிடத்தில் மிகவும் பிரேமையைக் கொண்டுள்ள ஸஹோதரி. அவள் தன் பதியுடன் ஸதா தாரக மந்திரத்தை ஜபிப்பதுடனில்லாமல், ஒரு பஞ்சவர்ணக் கிளியையும் ராம நாமத்தைச் சொல்லும்படி பழக்கி அதைக் கையில் ஏந்தி அதன் உச்சாரணத்தை கேட்டு இன்பமடைகிறாள் என்ற கருத்திற் கிணங்க, தான் ராமபக்தராதலால் ஸ்வாமிகள் அம்பிகையிடம் சலுகை கொண்டாடுகிறார்.

130. பஜன ஸேயவே.—மனமே! பரஹ்மா, ஶிவன் நாரோத்தமர் முதலியவர்களுக்கரிதான ராம பஜன செய்வாய். நாதம், ஓங்காரம், ஸப்தஸ்வரங்கள், வேதங்கள், சாஸ்திரங்கள் புராணங்கள், கலைகள் முதலிய மாறுபாடுகள் எவ்வளவோ உண்டு. நல்ல புருஷார்த்தங்களைத் தேடுவதற்கு ஜன்மமெடுத்தும் முக்திமார்க்கம் அறியாமல் தர்க்கமும், வாதமும் ஏன்? ராமன பஜிப்பாயாக.

131. எதாவுனரா.—ஸீதா, கௌரி, ஸரஸ்வதி என்ற மும்மூர்த்திகளின் ஸதிகளான உருவத்திலா? பூமி, ஜலம், அக்னி, ஸூர்யன், வாயு, ஆகாஶம் இவற்றிலா? அகிலகோடி சராசரங்களிலா? ஶிவன், விஷ்ணு, ப்ரஹ்மா, ஆகிய த்ரிமூர்த்திகளிலா? உனக்கு எவ்விடத்தில் நிலவரமான வாஸம்? எங்குதேடியும் காணக்கிடைக்கவில்லையே.

132. நிதி சால. மனமே! நிதி, ராமனுடைய ஸந்நிதி இவ்விரண்டில் எது இன்பம் தரும் என்று உண்மையாகச் சொல்லு. தயிர், வெண்ணை, பால் இவை நாவிற்கு இன்பம் தருவனவா? ராமனை த்யானித்து பஜன செய்கிற அமிர்த ரஸம் இன்பம் தருமா? தமஸுமாதி குணங்களாகிற உயர்ந்த சங்கா ஸ்நானம் ஸுகம் தருமா? இந்த்ரிய ஸுகமென்ற துர்கந்தம் நிறைந்த கிணற்றில் நீராடுவது ஸுகம் தருமா? அகந்தை மிகுந்த மனிதர்களைப் புகழ்வது இன்பம் தருமா? தூயமனதுடைய த்யாகராஜன் போற்றும் ஸ்ரீராமனுடைய துதி ஸுகம் தருமா?

133. வாஸுதேவயனி. பிரஹ்லாத பக்தவிஜயக் கீர்த்தனைகளில் ஒன்றான இந்த க்ருதி தெளவாரிகன் மேடைமீது தோன்றுவதை வர்ணிக்கிறது. ஸமுத்ரராஜனுடைய த்வார பாலகன் வழியில் நாடகத்தைப் பார்த்து அதன் வரலாறு என்ன என்று ஸூத்ரதாரியை கேட்டான். வாஸுதேவா என்று சொல்லிக்கொண்டு வெளிவந்த த்வாரபாலகனைப் பாருங்கள். இந்த்ரன் பூஜிக்கும் ஹரியை மனதில் த்யானம் செய்து கொண்டு காவி வஸ்த்ரம் உடுத்து, நெற்றியில் ஸ்ரீசூர்ணம் தரித்து, சபையைச் சுற்றி, தங்க ப்ரம்பை சுழற்றி அடிக்கடி மீசையை முறுக்கி, தானே மன்மதரூபன் என்கிற கர்வங்கொண்டு, சிரித்துக்கொண்டு, ராக, தாள கதிகள் தவறாமல் பாடிக்கொண்டு, வருகிற இந்த தெளவாரிகனை (த்வார பாலகனை) பாருங்கள்.

134. நம்மிவச்சின. தானே யழைத்து ஏற்றுச்கொள் என்று வரம் கொடுக்கும் கோவூர் ஸுந்தரேஶ்வர மூர்தியே, நம்பி வந்த என்னை ஆதரவுடன் காப்பாற்று. வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள், சாஸ்திரங்கள் ஒன்று சேர்ந்தும் உன்திருவடிகளைக் காணமுடியாமல் வேண்ட, சிவன், விஷ்ணு, ஶக்தி என்ற பேதவாதம் ஏன்? யாது மறியாத த்யாகராஜனுக்கு வரம் அருளி ரக்ஷி.

135. நீ தாஸ. உன் அடியார்க்கடியவன் என்ற பெயர் பூண்டு பயன் யாது? எளியவர்களிடத்தில் உனக்கு அன் பில்லை. பிறரிடையே என்னை இழிவு படுத்தி என் கர்ம பலன் என்று சொல்லுகிறாய். இனிமையான வார்த்தைகள் வீண் போயின. இந்த நிலையில் நான் உன் அடியார்க் கடியவன் என்று சொல்லி என்ன பிரயோசனம்?

136. மானமுலேதா. நான் உன்னைச் சேர்ந்தவன் என்ற அன்பு உனக்கில்லையா? மானமு மில்லையா? உன் னைப் போன்ற ஆசையற்றவர்களைக் காண்பதரிது. ஸுக்ரீ வன் உன்னெதிரில் தன்னுடைய ஐயத்தை வெளியிட நீ ரோஸங்கொண்டு வாலியை வதைத்து ஸுக்ரீவனுக்கு அரச பதவி கொடுக்கவில்லையா?

137. விதி சக்ராதுலு. நல்ல அறிவுள்ள பக்தர்களை காப்பவனும், தர்மமென்ற கடலில் படுத்திருப்பவனும், சந்த் ரன் முதலிய ஸமஸ்த தேவர்களும் வரிசையாக குடை, சாம ரம் முதலிய பிருதுகளைத் தாங்கி ஜயகோஷம் செய்ய, அவர்க ளுடைய எண்ணிறந்த தேவமாதர்கள் நர்த்தனம் செய்ய மற்றும் பல தேவர்கள் ஆகாயத்திலிருந்து பொன்மயமான மலர்களைப் பொழிய, தடதடவென்று ஓடிவந்து நமஸ் கரிக்க, அவர்களைத் தன் கடைக்கண்ணால் கடாக்ஷிப்பவனும், ரத்னங்களிழைத்த மாலைகள் பாதஸரங்கள் இவற்றுடன் ப்ர காசிப்பவனும், ஸனகாதி முனிவர்களும் துதிக்கையில் உயர்ந்த சரிகை ஆடைகளுடனும் கையில் கிளியுடனும் விளங்குபவ னும், வெள்ளியன்று விசேஷமான சொலு விழாக் கொண்டாடு பவளுமான பரதேவியின் பாவன தரிசனம், பரஹ்மா முத லியவர்களுக்கும் கிடைக்குமா? தரிசிப்போம் வாரீர்.

138. ஏமிதோவ. நான் எங்குபோவேன்? எந்த வழியில் செல்வேன்? எனக்குச் சொல்லுவாய். நான் ராமதாஸரைப் போல் இருந்தால் லீலா பிராட்டி உன்னிடம் சிபார்சு செய் வாள். ஆடையை இறுக்கக்கட்டி, அம்பையும் கோதண்டத் தையும் கையிலேந்தி, ராவணனுடைய மூலபலத்தையும் தலை யையும் அடித்து நொறுக்கும் வேளையில் மும்மூர்த்திகள் உன்னை துதிக்க அப்படிப்பட்டவர்களுக்கு எதிரில் உனக்கு என்மீது தயவு பிறக்க என்ன காரணம் என்பதை அறிந்தேன்.

139. எந்தபாக்யமு. என் அருகில் வந்து, ஸரஸமாகப் பேசி, என் கவலையை நீக்கி ரக்ஷித்தாய். முன்பு உன் சமீபத்தில் இருந்த முனிகளை அணிமா முதலிய லீலைகளினால் காத்தபடி, நாங்கள் செய்த பாக்யத்தினால் எங்களிடம் வந்து தோன்றி னாய். மூவுலகிலும் எனக்கு ஈடு யார்?

140 நீவாட. எல்லா உலகங்களுக்கும் காரணமான வனே. நான் உன்னைச் சேர்ந்தவனல்லவா? ஒரு நிமிஷம் நான் ஸஹிப்பேனா? ஸத்யம், நித்யத்வம், போர் முனையில் சௌரியம், அழகு, கரைகடந்த ஆற்றல், தினம்தோறும் திரு விழாக்கள், இவ்வளவும் உள்ள உனக்கு நான் அடியவன் என்று உண்மையாகச் சொல்லுகிறேன்.

141. எவருரா.—யாகஸம்ரக்ஷகனே, நாள்தோறும் சுபகர மான காரியங்களைச் செய்பவனே, உன்னைத்தவிர எங்களுக்கு கதியார், என்னிடம் உனக்கு தயைவராததேன்? என்முறை கேளாயா? என்னுடன் பேசாயா? இது உனக்கு முறையா? என்னிடம் பேத புத்தியா? என்னை யணுகாமல் என்னைக் கஷ் டப்படுத்துவது நியாயமா? உன்னிடம் ஆசைகொண்டேன்.

புனிதமான நாமங்களை உடையவனே. என்னைக்காக்க உனக்கு ஒழிவில்லையா? உனக்கு ஏன் இந்தபிகு? தேவலோகத்துக் கற்பகம்போன்று வேண்டுவன கொடுப்பவனே.

142. மோஹனராம.—உனது அழகினாலும், குணத்தினாலும் எல்லா உலகங்களையும் மயக்குபவனே. என்னுடன் இனிமையாகப் பேசுவாய். உன்மேல் எனக்கு அளவற்ற ப்ரேமை. நீ மனித உருக்கொள்வதை அறிந்த தேவர்கள் சூரிய சந்திரர், ப்ரம்மா முதலியவர்கள் அன்பினால் உள்ளம் உருகி மெய்மறந்து உனக்கு நீண்டகாலம் பணியாற்றினர்.

143. நனுபாலிம்ப—என் உயிர் நிலையான நாதனே, என்னைக் காப்பாற்ற நடந்து வந்தாயோ? கமலம்போன்ற உனது முகத்தைப் பார்ப்பது எனக்கு உகந்த ஜீவனம் என்று கருதி என் மனதின் ரஹஸ்யம் தெரிந்து வந்தாயோ? இந்திரனுடைய நீலமணியைப்போல ப்ரகாசிக்கும் திருமேனியுடையவனும் மார்பில் முத்துமாலைகள் தரித்துக் கையில் ஜ்வலிக்கும் அம்புகள் கோதண்டம் இவற்றுடனும், ஸீதாதேவியுடனும் வந்தாயோ?

144. ராமநின்னு.—ஜீவகோடிகளைத் தன் வசப்படுத்தும் ஸ்ரீராம! நாங்கள் உன்னை நம்பினவர்கள் அல்லவா? வழக்கம் போல் என்னைக் காக்கத் தாமதமின்றி வருவாய். உனக்கு ஏன் மனம் வராது? நீயே எனக்குக் கதி என்பதைத் தவிர வேறெறும் நான் அறியேன். உன் பாதஸேவை எங்களைக் காக்க வல்லது. இன்மை யெளவனம் மூப்பு என்ற மூன்று நிலைகளிலும் ஜீவ பரஹ்ம தத்வ அறிவை எனக்குக் கொடுப்பாய். இன்ப மற்ற ஸம்ஸாரத்தில் சலித்து உன்னை நம்பிச் சிந்தை ஒழியாமல் இனி முடியாது. 'மூனி ஹ்ருதாப்ஜப்ருங்க,' 'பாலலோசன ஹ்ருதயாலய', 'தரித அக ஜலத ஸமீர' முதலியவை இந்த க்ருதியில் காணும் ரஸமான பிரயோகங்கள்.

145-150:—ஸ்வாமிகள் ஸ்ரீராமனுக்கு தினம் தோறும் வேளைக்குத் தகுந்த உபசாரங்களும், நைவேத்யங்களும் ஸமர்ப்பித்து, திவ்ய நாமம், உத்ஸவ ஸம்ப்ரதாயம், பவ்வளிம்பு என்ற பலவகைக் கீர்த்தனங்களுடன் பஜனை செய்வது வழக்கம். மங்களத்துடன் பஜனை முடிந்ததும், லாலி, ஊஞ்சல், ஜோ கொட்டுதல் முதலியவற்றுடன் பூஜை முடிவுபெறும். இந்த ஆறு க்ருதிகளும் லாலி மங்களம் முதலியவைகளுக்கு உபயோகப்பட்டவை. அர்ச்சையில் ஈடுபட்டு ராஜோபசாரங்களை முறைப்படி செய்து பகவத் கைங்கர்யம் செய்கிறவர்களுக்கு அளவிறந்த ஆனந்தம், சித்த சுத்தி, உபசாந்தி முதலியவை ஸுலபமாகும் என்பது அனுபவவேத்யம். அப்படிப் பட்ட நித்யோத்ஸவாதிகளுக்கென் ஸ்வாமிகள் செய்தருளிய பஜனைக் கீர்த்தனங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுபவை. அவற்றுள் சிலவே இவை.

PRINTED AT THE UNIVERSAL PRINTERS, MADRAS-1.

உள் ளு றை

தொடர் எண்	கீர்த்தனை எண்	கீர்த்தனம்	ராகம்	தாளம்	பக்கம்
1	108	அப்பராம பக்தி	பந்துவராளி	ரூபகம்	346
2	126	அம்மராவம்ம	கல்யாணி	ஜம்ப	399
3	8	ஆரகிம்பவே	தோடி	ரூபகம்	51
4	25	இந்தனுசு	குண்டக்ரிய	ஆதி	110
5	38	இந்துகா	பைரவி	,,	146
6	71	இந்நாள்ரு	நாராயணகௌள	த்ரிபுட	280
7	36	எட்ல	வஸந்த	ஆதி	142
8	41	எந்தனி	முகாரி	ரூபகம்	156
9	139	எந்த பாக்யமு	ஸாரங்க	ஆதி	44
10	6	எந்தரோ	ஸ்ரீ ராகம்	,,	34
11	44	எந்து	ஸாமத்த தேஸி	,,	166
12	32	என்னடோ	ஸௌராஷ்ட்ரம்	,,	129
13	49	எவரனி	கரஹரப்ரிய	,,	179
14	141	எவருரா	மோஹனம்	த்ரிபுட	447
15	69	எவரைன	ஹித்தஸேன	ஆதி	246
16	63	எவ்வரிச்சிரி	மத்யமாவதி	,,	227
17	131	ஏதாவனரா	கல்யாணி	,,	117
18	9	ஏமனி	தோடி	,,	54
19	138	ஏமிதோவ	ஸாரங்க	,,	439
20	127	ஏவரமு	கல்யாணி	ரூபகம்	401
21	76	ஒகமாட	ஹரிகாம்போஜி	,,	265
22	30	ஒகபாரி	கலாவதி	ஆதி	123
23	57	ஓரஜூபு	கன்னட கௌள	ஆதி	206
24	10	கடதேர	தோடி	,,	57
25	124	கண்ட ஜூடுமி	லதாங்கி	,,	394
26	7	கனகன	வராளி	,,	44
27	71	கன்னதண்ட்ரி	தேவமனோஹரி	,,	252
28	22	கர்மமே	ஸாவேரி	த்ரிபுட	68
29	114	களல	தீபகம்	ஆதி	365
30	73	குருலேக	கௌரிமனோஹரி	ஜம்பு	258
31	50	கோரிஸேவிம்ப	கரஹரப்ரிய	ஆதி	182
32	51	சக்கனி	கரஹரப்ரிய	,,	185
33	67	ஸரஜூ	மத்யமாவதி	,,	241
34	43	சலமேல	மார்கஹிந்தோளம்	,,	163
35	31	சல்லக	வேகவாஹினி	,,	126
36	58	சின்ன நாட	கலாநிதி	,,	208
37	11	சேஸின	தோடி	,,	60
38	40	சேதுலார	பைரவி	,,	151
39	148	ஜகதானந்த	நாட	,,	7
40	149	ஜய மங்களம்	நாதநாமக்ரிய	,,	471
41	3	ஜய ஜய	கௌரி	,,	472
42	147	ஜோ ஜோ ஸீதாராம	ஸாவேரி	த்ரிபுட	469
43	15	ஜனகஜா	அஸாவேரி	ரூபகம்	78
44	117	ஞானமொஸக	பூர்வகல்யாணி	,,	373
45	94	தத்வமெறுக	கருடத்வனி	,,	314
46	125	தனமீதனே	பூஷாவளி	ஆதி	396
47	83	தயஜூசுடகு	கானவாரிதி	,,	285
48	18	தாரரதே	கோகிலப்ரிய	,,	87
49	4	துடுகுகல	கௌள	ஆதி	17
50	121	துர்மார்க	ரஞ்ஜனி	ரூபகம்	386

தொடர் எண்	கீர்த்தனை எண்	கீர்த்தனம்	ராகம்	தாளம்	பக்கம்
51	17	தெலியலேரு	தேனுக	ஆதி	84
52	96	தெளிவிலி	பூர்ணசந்த்ரிக	ஆதி	319
53	33	தேவராம	ஸௌராஷ்ட்ரம்	ரூபகம்	134
54	65	தேவஸ்ரீ	மத்யமாவதி	த்ரிபுட	233
55	26	தேவாதிதேவ	விந்துராமக்ரிய	ஆதி	113
56	2	த்யாகராஜ	கரஹரப்ரிய	ஆதி	4
57	48	நகுமோமு	ஆபேரி	ஆதி	176
58	120	நதஜன	விஷ்மேந்த்ரமத்யமம்	ரூப	382
59	143	நன்னுபாலிம்ப	மோஹனம்	ஆதி	456
60	89	நன்னுப்ரோவ	ஸங்கராபரணம்	த்ரிபுட	298
61	55	நன்னுவிடசி	ரீதிகௌள	,,	198
62	134	நம்மிவச்சின	கல்யாணி	ரூபகம்	427
63	95	நரஹிம்ஹ	பிலஹரி	த்ரிபுட	316
64	70	நாமகுலம	ஸ்ரீராகம்	ஆதி	249
65	102	நாயெட	நபோமணி	,,	333
66	132	நிதிசால	கல்யாணி	த்ரிபுட	420
67	60	நித்யரூப	தர்பார்	ரூபகம்	214
68	92	நின்னே	ஆரபி	த்ரிபுட	306
69	109	நின்னே	பந்துவராளி	ரூபகம்	350
70	12	நீதயராவலெ	தோடி	,,	65
71	135	நீதாஸ	ஹமீர் கல்யாணி	,,	430
72	140	நீ வாடனே	ஸாரங்க	ஜம்ப	444
73	23	நீவுப்ரோவ	ஸாவேரி	ஆதி	103
74	75	நெனருஞ்சரா	விஹ்மவாஹினி	ஆதி	263
75	98	நேபொகட	வராளி	ஜம்ப	324
76	13	நேமொர்ச	தோடி	த்ரிபுட	69
77	34	நேரமா	ஸௌராஷ்ட்ரம்	ஆதி	137
78	99	நோரேமி	வராளி	,,	326
79	150	பதிகி	ஆரபி	,,	
80	82	பஜனஸேயு	நாராயணி	,,	283
81	130	பஜனஸேய	கல்யாணி	ரூபகம்	362
82	37	பணிபதி	ஜங்காரத்வனி	ஆதி	144
83	122	பண்டுரீதி	ஹம்ஸநாதம்	,,	
84	93	பக்தினி	பேகட	,,	310
85	113	பரலோக	மந்தாரி	,,	362
86	61	பரிபாலய	தர்பார்	த்ரிபுட	217
87	118	பரிபூர்ண	பூர்வகல்யாணி	ரூபகம்	376
88	80	பலுகுகண்ட	நவரஸகன்னட	ஆதி	277
89	104	பாகாயெ	சந்த்ரஜோதி	,,	336
90	123	பாலிந்துவோ	காந்தாமணி	,,	
91	78	பாஹிராம	யதுகுலகாம்போஜி	ரூபகம்	272
92	14	ப்ரொத்து	தோடி	த்ரிபுட	72
93	53	ப்ரோசே வாரு	ஸ்ரீரஞ்சனி	ஆதி	193
94	85	ப்ரோவ	பஹுதாரி	,,	289
95	88	மனவ்யால	நளினகாந்தி	,,	296
96	74	மனஸா	வர்தனி	ரூபகம்	259
97	100	மரகத	வராளி	ஆதி	329
98	77	மரிமரிநின்னே	காம்போஜி	,,	267
99	136	மானமுலேதா	ஹமீர்கல்யாணி	,,	433
100	54	மாருபல்க	ஸ்ரீரஞ்ஜனி	,,	196
101	66	முச்சட	மத்யமாவதி	,,	237
102	91	மும்மூர்த்துலு	அடாண	,,	304

தொடர் எண்	கீர்த்தனை எண்	கீர்த்தனம்	ராகம்	தாளம்	பக்கம்
103	27	மோஸபோகு	கௌளிபந்து	,,	116
104	142	மோஹனராம	மோஹனம்	,,	452
105	42	மோக்ஷமு	ஸாரமதி	,,	160
106	111	ரகுவர	பந்துவராளி	,,	357
107	56	ராகரத்ன	நீதிகௌள	ரூபகம்	201
108	28	ராகாபாபிவதன	டக்க	ஆதி	118
109	59	ராணிதி	மணிரங்கு	,,	211
110	24	ராமம்	ஸாவேரி	,,	107
111	72	ராம பச்தி	ஸுத்தபங்காள	,,	255
112	62	ராமலோபமு	தர்பார்	,,	221
113	90	ராமாநின்னு	ஸங்கராபரணம்	ரூபகம்	300
114	141	ராமநின்னு	மோஹனம்	ஆதி	459
115	52	ராமாநீயெட	கரஹரப்ரிய	,,	190
116	79	ராமஸீதா	பலஹம்ஸ	,,	275
117	145	லாலி யூக	நீலாம்பரி	ரூபகம்	462
118	107	லீலகானு	துந்துபி	ஆதி	344
119	146	லாலி	கேதாரகௌள	ஜம்ப	465
120	16	லேகனு	அஸாவேரி	ஆதி	81
121	101	லேமிதெல்ப	நவநீதம்	,,	331
122	119	வத்தனே	ஷண்முகப்ரிய	,,	380
123	84	வந்தனமு	ஸஹான	,,	286
124	103	வரநாரத	விஜயஸ்ரீ	,,	334
125	35	வரஸிகி	ஸுப்ரதீபம்	,,	140
126	29	வரால்ந்து	குர்ஜரி	,,	121
127	110	வாடேரா	பந்துவராளி	,,	354
128	133	வாஸுதேவ	கல்யாணி	,,	424
129	137	விதிசக்ர	யமுனாகல்யாணி	,,	435
130	21	விதலகு	மாளவகௌள	,,	94
131	97	ஸத்தலேனி	நாகநந்தினி	,,	322
132	115	ஸந்தேஹமு	ராமப்ரிய	,,	367
133	19	ஸமயமு	கல்கட	,,	89
134	46	ஸமுகான	கோகிலவராளி	,,	170
135	106	ஸரிஜேஸி	தீவ்ரவாஹினி	,,	341
136	86	ஸார்வபௌம	ராகபஞ்ஜரம்	,,	291
137	5	ஸாதிஞ்செனே	ஆரபி	,,	26
138	116	ஸீதாமனோஹர	ரமா மனோஹரி	,,	369
139	63	ஸுகியெவ்வரோ	கானட	,,	224
140	87	ஸுஜனஜீவன	கமாஸ்	ரூபகம்	293
141	128	ஸுந்தரி	கல்யாணி	ஆதி	406
142	112	ஸுவ்வ	பந்துவராளி	,,	360
143	129	ஸேவாஹி	கல்யாணி	,,	410
144	105	ஸ்ரீகாந்த	பவப்ரிய	,,	339
145	20	ஸ்ரீஜனக	கலகண்டி	ஆதி	91
146	47	ஸ்ரீமானினி	பூர்ணஷட்ஜம்	,,	173
147	49	ஸ்ரீரகுவர	பைரவி	,,	149
148	68	ஸ்ரீரம்ய	ஜயமனோஹரி	,,	245
149	1	ஸ்ரீராம	ஸாவேரி	த்ரிபுட	1
150	45	ஸ்ரீராம	அம்ருதவாஹினி	ஆதி	168
		ராமனே	கீரவாணி	,,	

வ்ம்க்ஞா விவரணம்

——::——

| த்ருதத்தின் அடையாளம்.

|| ஆவர்த்தத்தின் முடிவு அல்லது லகுவின் ஆரம்பம்.

, ஒரு அக்ஷரத்தின் கார்வை அளவு. பெரும்பாலும் அங்கத்தின் காலிடமாகும்.

; இரண்டு அக்ஷரங்களின் கார்வை. பெரும்பாலும் அங்கத்தின் அரை யிடமாகும்.

— மத்யம காலக் குறிப்பு.

= துரித காலக்குறி. பெரும்பாலும் ரவை, ஒதுக்கல் முதலியவற்றைக் குறிக்கும்.

⌒ பல்லவி நிறுத்துமிடம். * தாது ஒன்றே என்ற குறி.

× ராகத்தில் விசேஷப் பிரயோகமாகத் தோன்றும் அன்னிய ஸ்வரத்தின் அடையாளம்.

த நி ஸ இம்மாதிரி ஸ்வரங்களின் அடியில் தோன்றும் புள்ளி மந்த்ர ஸ்தாயிக் குறி.

ரி க ம இம்மாதிரி ஸ்வரங்களின் மேல் தோன்றும் புள்ளி தார ஸ்தாயிக் குறி.

கமகம் முதலிய அம்சங்கள் தெளிவாக விளங்கும் பொருட்டு, தாதுவை விஸ்தாரமாக அமைப்பதற்குச் சில உதாரணங்கள் :—

1. பக்கம் 80. "ப்ரயாம ஸுந்தர"வில் "ஸுந்தர" என்பது,



என்று அமைந்திருப்பது கவனத்திற் குரியது

2. ,, 153. "ப்ருங்காரமு" வென்பது



என்று அமைந்தது கவனத்திற்குரியது.

3. ,, 180. "நிர்ண" என்ற மாதுவின், 2 வது, 4 வது ஸங்கதிகளில் தாது அமைந்திருக்கும் விதம்.

4. ,, 330. சரணத்தின் முதல் ஆவர்த்தம்.

(யோகி ஸ்ரீ ஸமர்த்தானந்த பாரதியார் இயற்றியது.)

1. ஸாவேரி. த்ரிபுடை.

ப. ஸ்ரீராம சைதன்யமே ஓம் நம த்யா
கராஜ ப்ரம்மமே (ஸ்ரீ)

